செந்தமிழ் இலக்கியத்திரட்டு

SENTAMIL LAKKIYA THIRATTU

Form V

(Revised according to the New Syllabus.)

A. KARMEGA KONE,
[Prof. of Tamil and Head of the Dept., of Indian Languages, American College, Madurai (Retd.)]

PUBLISHED BY
THE AUTHOR

Tallakulam, P. O., Madurai.

Rights Reserved] 1952 [*Price* 1-6-0

இரண்டாம் பதிப்பு, 1952

Approved by the Text-Book Committee, Madras.
Vide Fort St. George Gazette, Part I-B,
dated 7th May, 1952, Page 105.

Printed at The Premier Art Press, Madras—7.

முன்னுரை

பல ஆண்டுகளாக என்னால் வெளியிடப்பெற்று வந்த இந்நூல், இப்போது சென்னை மாகாண அரசியல் கல்வித்துறையினர் அண்மையில் வெளியிட்ட பாடத் திட்டத்தின் படியே, செய்யுள் உரைநடை ஆகிய இவற்றுள், அளவு பொருள் முதலியவற்றில் பல வித மாறுதல்கள் செய்து, புதிய முறையில் தொகுத்து வெளியிடப் பெற்றுள்ளது. பாடத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடியே சங்க காலம், இடைக்காலம், இக்காலம் ஆகிய முக்காலங்களிலும் தோன்றிய நூல்களிலிருந்து செய்யுட் பகுதிகள், வகுப்புத் தகுதிக்கும் பொதுச் சிறப்புப் பகுதிக்கும் ஏற்ப வேண்டிய அளவு சேர்க்கப் பெற்றுள்ளன. உரைநடைப் பகுதியில் இலக்கியம், வரலாறு, கதை, விஞ்ஞானம், நாடகம், கடிதம், பிரயாணம், விவசாயம், தொழில் முதலிய பொருள் பொதி கட்டுரை வகைகள் அமைந்துள்ளன.

செய்யுள்களுக்குக் குறிப்புரைப் பகுதி புத்தகத்தின் ஈற்றில் அமைந்துளது.

இத்திரட்டில் தத்தம் கட்டுரைகளையும் கவிதைகளையும் சேர்த்துக்கொள்ளுதற்கு இசைவு தந்தருளிய அறிஞர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி உரியதாகுக.

பல்லாண்டுகளாகக் கல்வித்துறையில் ஈடுபட்டு இயன்ற தொண்டாற்றி வரும் என்னால் வெளியிடப்பெறும் இந்நூல் மாணவர்க்குப் பயன்படுமெனக்கருதி, அறிஞர்கள் ஏற்றுக் கொள்வார்களென்று நம்புகிறேன்.

ஆ. கார்மேகக்கோன்

பொருளடக்கம்

எண்	செய்யுள்			பக்கம்
I.	கடவுள் வாழ்த்து :			
	1. திருவருட்பா	...	...	1
	2. திவ்வியப்பிரபந்தம்	...	...	1
	3. தேவாரம்	...	...	2
	4. நாமகள்	...	...	2
	5. கோவில் வழிபாடு	...	...	3
II.	நீதி :			
	1. அறநெறிச்சாரம்	...	...	3
	2. இனிது நாற்பது	...	...	4
	3. திருக்குறள்	...	...	5
III.	கதை :			
	1. சிலப்பதிகாரம்	...	...	7
	2. பெரிய புராணம்	...	...	9
	3. கம்ப ராமாயணம்	...	...	11
	4. தேம்பாவணி	...	...	16
	5. விசுவநாதம் (நாடகம்)	...	...	22
IV.	சிற்றிலக்கியம் :			
	1. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்		...	26
	2 திருவரங்கக் கலம்பகம்	...	...	27
	3. திருவேங்கட சதகம்	...	...	27
	4. மீனாட்சியம்மை குறம்	...	...	28
	5. ஏரெழுபது	...	...	29
V.	இயற்கையழகு :			
	1. பாண்டி நாடு	...	...	30
	2. சேரநாடு	...	...	30
	3. சோழநாடு	...	...	30
	4. கோசலநாடு	...	...	31
	5. திணை மயக்கம்	...	...	31
	6. மதுரை மாநகர்	...	...	31
	7. மலை வளம்	...	...	32

எண்	செய்யுள்		பக்கம்
VI.	தனிப் பாடல் :		
	1. சத்திமுற்றப் புலவர் ...	...	32
	2. மதுரகவி ...	...	32
	3. காளமேகம் ...	...	33
	4. வீரராகவ முதலியார் ...	...	33
	5. ஔவையார் ...	...	33
VII.	பல் துறை :		
	1. தொழில் ...	...	34
	2. வீரம் ...	...	34
	3. கையறம் ...	...	35
	4. காந்தீய சேவை (காந்தி அஞ்சலி)	...	36

உரைநடை

எண்	பொருள்		பக்கம்
1.	முத்தமிழ் * —வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், B.A.	...	37
2.	பண்டைத்தமிழர் உரைநடை —இளம்பூரணர் உரை	...	40
3.	திருக்கயிலாயகிரி —ஸ்ரீ சித்பவாநந்த சுவாமிகள்	...	40
4.	கப்பல் பிரயாணம் (குயின் எலிசபெத்து) —சோம. லெ. இலக்குமணச் செட்டியார், B.A.	...	48
5.	ஔவையாரும் அதியமானும் —ஆ. கார்மேகக் கோன்	...	58
6.	அன்னைக்கு (கடிதம்) —டாக்டர் மு. வரதராசனார், M.O.L. *(Prof. of Tamil, Pachaiappa's College, Madras.)*	...	68
7.	முப்பெருங்கவிஞர் —R. P. சேதுப்பிள்ளை, B.A., B.L. *(Prof. of Tamil, University of Madras.)*	...	72
8.	இசை இன்பம் —K. A. கிருஷ்ணன், M.A. *(Lecturer in Tamil, American College, Madurai.)*	...	75
9.	வழி காட்டி (Radar) —A. V. குப்புரத்தினம், B. Sc. *(P. S. G. College, Peelamedu.)*	...	78
10.	மணிமேகலையும் புண்ணியராசனும் —ஆ. கார்மேகக் கோன்	...	82

* இந்நூல் உரிமையாளர் திரு. V. S. சுவாமிநாதன் இசை பெற்றுப் பதிக்கப்பட்டது.

எண்	பொருள்		பக்கம்
11.	பூகம்பம்		91
	—P. T. செல்லப்பா, B.A., M.SC. (Lecturer in Chemistry, American College, Madurai.)		
12.	பாரதியார் தமிழ்ப்புலமை		94
	—நாவலர் S. சோமசுந்தர பாரதியார், M.A., B.L.		
13.	முட்டை அளவு தானியம்		98
	—M. A. துரை அரங்கசாமி, M.O.L., (Senior Lecturer in Tamil, University of Madras.)		
14.	நிலவளமும் நீர்வளமும்		103
	—டாக்டர் J. S. பொன்னையா, M.A.		
15.	சாதுரியம்		107
	—T. செல்வக்கேசவராய முதலியார், M.A.		
16.	நல் மரமும் நச்சு மரமும்		110
	—R. P. சேதுப்பிள்ளை, B.A., B.L.,		
17.	புகழ்த்துறவு (நாடகம்)		115
	—வ. சுப. மாணிக்கம், M.O.L. (Lecturer in Tamil, Dr. Alagappa Chettiar College, Karaikudi.)		
18.	எல்லோரா *		121
	—R. S. உருக்குமிணி, M.A. (Queen Mary's College, Madras.)		
19.	தென்னிந்திய வணிகம்		126
	—S. K. கோவிந்தசாமி பிள்ளை, M.A.		

* இது புதுக்கோட்டைப் புத்தகநிலையத்தாரின் இசைவு பெற்றுப் பதிக்கப்பட்டது.

பிற கட்டுரைகள் ஆசிரியர்களின் இசைவு பெற்றுப் பதிக்கப் பெற்றன.

செந்தமிழ் இலக்கியத் திரட்டு

இரண்டாம் புத்தகம்

I. கடவுள் வாழ்த்து

திருவருட்பா

பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி யோங்கும்
கங்குகரை காணாத கடலே! எங்கும்
கண்ணுகக் காண்கின்ற கதியே! அன்பர்
தங்கநிழல் பரப்பிமயற் கோடை யெல்லாம்
தணிக்கின்ற தருவே! பூந் தடமே! ஞானச்
செங்குமுதம் மலரவரு மதியே! எல்லாம்
செய்யவல்ல கடவுளே! தேவ தேவே! 1

—இராமலிங்க சுவாமிகள்

திவ்வியப்பிரபந்தம்

இருளிரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணிபணமா யிரங்க ளார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்த னென்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையை மேவித்
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே. 2

—குலசேகர ஆழ்வார்

தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே!
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே. —திருஞானசம்பந்தர் 3

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வான்ஆளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்ல ராகில்;
அங்கம்எலாம் குறைந்தழுகு தொழுநோ யாராய்
ஆஉரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே. 4

—திருநாவுக்கரசர்

நாமகள்

வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்
கொள்ளை இன்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தி னுள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள். 5

—பாரதியார்

கோவில் வழிபாடு

கோவில் முழுதுங்கண்டேன்—உயர்
கோபுரம் ஏறிக்கண்டேன்;
தேவாதி தேவனையான்—தோழி!
தேடியுங் கண்டிலனே. 1

தெப்பக் குளங்கண்டேன்,—சுற்றித்
தேரோடு வீதிகண்டேன்;
எய்ப்பில்வைப் பாம்அவனைத்—தோழி!
ஏழையான் கண்டிலனே. 2

சிற்பச் சிலைகண்டேன்,—நல்ல
சித்திர வேலைகண்டேன்;
அற்புத மூர்த்தியினைத்—தோழி!
அங்கெங்கும் கண்டிலனே. 3

கண்ணுக் கினியகண்டு—மனத்தைக்
காட்டில் அலையவிட்டுப்
பண்ணிடும் பூசையாலே—தோழி!
பயன்ஒன் றில்லையடி. 4

உள்ளத்தில் உள்ளானடி—அதுநீ
உணர வேண்டுமடி;
உள்ளத்தில் காண்பாய்எனில்—கோயில்
உள்ளேயும் காண்பாயடி. 5

—தேசிக விநாயகம் பிள்ளை

II. நீதி

1. அறநெறிச் சாரம்

அறத்தினியல்பு

மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவம்அடக்கம்
செம்மையொன் றின்மை துறவுடைமை—நன்மை
திறம்பா விரதம் தரித்தலொ டின்ன
அறம்பத்தும் ஆன்ற குணம். 1

இளமையில் அறஞ்செய்தல்

இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்பதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். 2

கீழ்மக்கள் நெஞ்சில் அறிவுரை புகாது.

வைகலும் நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும்;— அஃதேபோல்
வைகலும் நல்லறம் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு. 3

நூல் ஆராய்தல்

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே;—காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றா தாகும்; உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும். 4

தற்புகழ்ச்சி

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்;
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்கு
அச்சாணி யன்னதோர் சொல். 5

புறங்கூறாமை

முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்(று)
இழித்துரைக்கும் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலை. —முனைப்பாடியார் 6

2. இனிது நாற்பது

ஏவது மாறா இளங்கிளை முன் இனிதே;
நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே;
ஏருடையான் வேளாண்மை தானினிது; ஆங்கினிதே
தேரிற்கோள் நட்புத் திசைக்கு. 1

யானை யுடையபடை காண்டல் மிகஇனிதே ;
ஊனைத்தின்(று) ஊனைப் பெருக்காமை முன்னினிதே ;
கான்யாற் றடைகரை ஊரினி(து) ; ஆங்கினிதே
மான முடையார் மதிப்பு. 2

கொல்லாமை முன்னினிது ; கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்னினிது ; செங்கோலன் ஆகுதல்
எய்தும் திறத்தால் இனிதென்ப ; யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு. 3

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே ;
தானம் அழியாமைத் தானடங்கி வாழ்வினிதே ;
ஊனமொன்(று) இன்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது. 4

நட்டார் புறங்கூறான் வாழ்தல் நனியினிதே ;
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகல் முன்னினிதே ;
முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது
தக்குழி ஈதலே நன்று. 5

சலவரைச் சாரா விடுதல் இனிதே ;
புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே ;
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது. —பூதஞ்சேந்தனார் 6

3. திருக்குறள்

அறன் வலியுறுத்தல்

மனத்துக்கண் மாசில னாதல் ; அனைத்தறன் ;
ஆகுல நீர பிற. 1

அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கும்
இழுக்கா வியன்ற தறம். 2

இல்வாழ்க்கை

அன்பும் அறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது. 3

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்? 4

வாழ்க்கைத் துணை நலம்

இல்லதெ னில்லவள் மாண்பானால்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை? 5

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்? 6

மக்கட்பேறு

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல். 7

மகன்றந்தைக் காற்று முதவி, ‘இவன்றந்தை
என்னோற்றான் கொல்!’ எனுஞ் சொல். 8

அன்புடைமை

அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்; அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு. 9

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை. 10

விருந்தோம்பல்

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 11

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 12

இனியவை கூறல்

அல்லவை தேய வறம்பெருகும் நல்லவை
நாடி யினிய சொலின். 13

இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 14

செய்ந்நன்றியறிதல்

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 15

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது. 16

நடுவு நிலைமை

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும். 17

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. 18

அடக்கமுடைமை

அடக்க மமரரு ளுய்க்கும்; அடங்காமை
ஆரிரு ளுய்த்து விடும். 19

யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 20

III. கதை

1. சிலப்பதிகாரம்—அடைக்கலக் காதை

[மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாகத் தந்து, கவுந்தி அடிகள் அடைக்கலப் பொருளாகிய கண்ணகியின் கற்புச் சிறப்பைத் தெரிவித்தல்]

மாதரி! கேளிம் மடந்தைதன் கணவன்
தாதையைக் கேட்கின் தன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்
உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும்
இடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்;
மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்

செங்கயல் நெடுங்கண் அஞ்சனந் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமுங் காவலு மாயிழை தனக்குத்
தாயும் நீயே யாகித் தாங்கிங்
கென்னொடு போந்த விளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மக ளறிந்திலள் ;
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்டவித் தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்.

[கற்புடைப் பெண்டிர் வாழும் நாட்டின் சிறப்பை அடிகள் கூறல்]

வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்தநா டென்னும்
அத்தகு நல்லுரை யறியா யோநீ!
தவத்தோ ரடைக்கலந் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பம் தருமது கேளாய்'(என்று)
கவுந்தி கூற உவந்தன ளேத்தி

[அதைக்கேட்ட மாதரி அவர்களை அழைத்துக்கொண்டு மதுரை புகல்]

முளையிள வெண்பல் முதுக்குறை நங்கையொடு
சென்ற ஞாயிற்றுச் செல்சுட ரமயத்துக்
கன்றுதே ராவின் கனைகுர லியம்ப
மறித்தோ ளவியத் துறிக்கா வாளரொடு
செறிவளை யாய்ச்சியர் சிலர்புறஞ் சூழ

[மாதரி மதுரை நகரும், காவற்காடும், கிடங்கும், மதிலும் கடந்து தன் மனைபுகல்]

மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்

கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையும்
தூண்டிலுந் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையுங் குழூவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெய ரூசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும் உழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்துதன் மனைபுக் கனளால்
கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்தென்.

2. பெரிய புராணம்

மெய்ப்பொருள் நாயனார் புராணம்

சேதிநன் னாட்டு நீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலா லீசர்க் கன்பர் கருத்தறிந் தேவல் செய்வார் ; 1

மங்கையைப் பாகமாக உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள்நா யகருக் கன்பர் தாளலால் சார்பொன் றில்லார் ; 2

இன்னவா றொழுகு நாளில் இகல்திறம் புரிந்தோர் மன்னன்,
அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால் அமர்மேற் கொண்டு
பொன்னணி ஓடை யானை பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போனான். 3

இப்படி இழந்த மாற்றான் இகலினால் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தர் சீலம் அறிந்துவெண் ணீறு சாத்தும்
அப்பெரு வேடங் கொண்டே அற்றத்தில் வெல்வா னாகச்
செப்பரு நிலைமை எண்ணித் திருக்கோவ லூரிற் சேர்வான் 4

மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன். 5

[முத்தநாதன் நாயனார் மாளிகையுட்செல்லுதல்]

கண்டுசென் றணையும் போது கதுமென எழுந்து தேவி
வண்டலர் மாலை யாரை எழுப்பிட உணர்ந்து மன்னர்
அண்டர்நா யகனார் தொண்ட ராமெனக் குவித்த செங்கை
கொண்டெழுந் தெதிரே சென்று கொள்கையின் வணங்கி நின்று

"மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ?" என்று கூற,
"உங்கள்நா யகனார் முன்னம் உரைத்த ஆகமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப," என்றான்.

"பேறெனக் கிதன்மேல் உண்டோ! பிரானருள் செய்த இந்த
மாறிலா கமத்தை வாசித் தருள்செய வேண்டும்!" என்ன,
"நாறுபூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருத்தல் வேண்டும்," என்றவன் விளம்ப, வேந்தர் 8

திருமக ளென்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
புரிவுடன் விரைய அந்தப் புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத் தவிசின்மே லிருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி, "இனியருள் செய்யும்," என்றார். 9

கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தக மவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்தவப் பரிசே செய்ய
"மெய்த்தவ வேட மேமெய்ப் பொருள்!" எனத் தொழுது
[வென்றார். 10

மறைத்தவன் புகுந்த போதே மனம்அங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கண் கூடி வாளினால் எறிய லுற்றான்;
நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றார், நீண்ட கையால்
தறைப்படும் அளவில் "தத்தா! நமர்," எனத் தடுத்து வீழ்ந்தார்.

வேதனை யெய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனும் தத்தன் தானும் தலையினால் வணங்கித் தாங்கி,
"யாதுநான் செய்கேன்!" என்ன, "எம்பிரான் அடியார் போக,
மீதிடை விலக்கா வண்ணம் கொண்டுபோய் விடுநீ," என்றார். 12

அத்திறம் அறிந்தா ரெல்லாம், "அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் றன்னைக்கொல்வோம்" எனப்புடைசூழ்ந்தபோது
தத்தனு மவரை எல்லாம் தடுத்துடன் கொண்டு போவான்
"இத்தவன் போகப் பெற்ற திறைவன தாணை," என்றான். 13

மற்றவன் கொண்டு போன வஞ்சனை வேடத் தான்மேல்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான் கோமகன் குறிப்பில் நின்றான். 14

சென்றடி வணங்கி நின்று, "செய் தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டனன்," என்று கூற,
"இன்றெனக் கையன் செய்த தியார்செய்ய வல்லார்!" என்று
நின்றவன் றன்னை நோக்கி நிறைபெருங் கருணை கூர்ந்தார். 15

அரசிய லாயத் தார்க்கும் அழிவுறுங் காத லார்க்கும்
விரவிய செய்கை எல்லாம் விளம்புவார், "விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்," என்று
புரவலர் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார். 16

தொண்டனார்க் கிமயப் பாவை துணைவனா ரவர்முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா அருட்கழல் நீழல் சேரக்
கொண்டவர் இடைய றாமல் கும்பிடுங் கொள்கை யீந்தார். 17

3. கம்ப ராமாயணம்

குகப்படலம்

[சுமந்திரன் பரதனுக்குக் குகனைப் பற்றிக் கூறுதல்]

'கங்கையிரு கரையுடையான்
கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற்
குயிர்த்துணைவ னுயர்தோளான்

வெங்கரியி னேறனையான்
விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க்
குகனென்னுங் குறியுடையான். 1

‘கற்காணுந் திண்மையான்
கரைகாணாக் காதலான்
அற்காணிற் கண்டனைய
அழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோள்
மழைகாணு மணிநிறத்தாய் !
நிற்காணு முள்ளத்தா
னெறியெதிர்நின் றனன்,’ என்றான். 2

[பரதன் குகனைக் காணச் செல்லுதல்]

தன்முன்னை யவன்றன்மை
தந்தைதுணை முந்துரைத்த
சொன்முன்னே யுவக்கின்ற
துரிசிலாத் திருமனத்தான்
‘மன்முன்னே தழீஇக்கொண்ட
மனக்கினிய துணைவனேல்
என்முன்னே யவர்காண்பென்
யானேசென் றெ’னவெழுந்தான். 3

என்றெழுந்து தம்பியொடு
மெழுகின்ற காதலொடுங்
குன்றெழுந்து சென்றதெனக்
குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான்
திருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகரு நறுங்குஞ்சி
யெயினர்கோன் றுண்ணென்றான். 4

[பரதனைக் கண்டு குகன் ஆராய்தல்]

வற்கலையி னுடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன
நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ
விம்முற்று நின்றொழிந்தான். 5

'நம்பியுமென் னாயகனை
யொக்கின்றான்; அயனின்றான்
தம்பியையு மொக்கின்றான்;
தவவேடந் தலைநின்றான்;
துன்பமொரு முடிவில்லை;
திசைநோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார்
இழைப்பரோ பிழைப்'பென்றான். 6

'உண்டிடுக்க ணொன்றுடையான்
உலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே
கொண்டிருந்தான் குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன்
காமின்கள் நெறி,'என்னாத்
தண்டுறையோர் நாவாயில்
ஒருதனியே தான்வந்தான். 7

[பரதனும் குகனும் சந்தித்தல்]

வந்தெதிரே தொழுதானை
வணங்கினான் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு
மவனுமவ னடிவீழ்ந்தான்

தந்தையினும் களிகூரத்
 தழுவினன் தகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும்
 வீற்றிருக்குஞ் சீர்த்தியான். 8

வேறு

[பரதன் தன் செய்தியை அறிவித்தல்]

தழுவின புளிஞர் வேந்தன்
 தாமரைச் செங்க ணானை
'எழுவினு முயர்ந்த தோளாய்!
 எய்திய தென்னை?' என்ன,
'முழுதல களித்த தந்தை
 முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க
 மன்னனைக் கொணர்வான்,' என்றான். 9

[அதனைக்கேட்ட குகனது நிலைமை]

கேட்டனன் கிராதர் வேந்தன்
 கிளர்ந்தெழு முயிர்ப்ப னாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான்
 விம்மின னுவகை வீங்கத்
தீட்டரு மேனி மைந்தன்
 சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன் பொய்யில்
 உள்ளத்தன் புகல லுற்றான்: 10

'தாயுரை கொண்டு தாதை
 உதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச்
 சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து
 புகழினோய்! தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கேழ்
 ஆவரோ தெரியி னம்மா! 11

'என்புகழ் கின்ற தேமை
எயினனேன்! இரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை
ஒளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கள்
மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டாய்
உயர்குணத் துரவுத் தோளாய்!' 12

எனவிவை யன்ன மாற்றம்
இயைவன பலவுங் கூறிப்
புனைகழற் புலவு வேற்கைப்
புளிஞர்கோன் பொருவில் காதல்
அனையவற் கமைவிற் செய்தான்;
ஆரவற் கன்பி லாதார்?
நினைவருங் குணங்கொ டன்றோ
இராமன்மே னிமிர்ந்த காதல்? 13

அவ்வழி யவனை நோக்கி
அருடரு வாரி யன்ன
செவ்வழி யுள்ளத் தண்ணல்
தென்றிசைச் செங்கை கூப்பி,
'எவ்வழி யுறைந்தா னம்முன்?'
என்றலு மெயினர் வேந்தன்,
'இவ்வழி வீர! யானே
காட்டுவ லெழுக,' என்றான். 14

[இராமன் பள்ளி கொண்ட இடத்தைக் கண்ட
பரதனது ஆற்றாமை]

காரெனக் கடிது சென்றான்
கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல்
வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான்
பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலான் மண்ணை
மண்ணுநீ ராட்டுங் கண்ணான். 15

‘ இயன்றதென் பொருட்டி னாலிவ்
விடருனக் கென்ற போழ்தும்,
அயின்றனை கிழங்குங் காயும்
அமிர்தென வரிய புல்லில்
துயின்றனை யெனவு மாவி
துறந்திலென் சுடருங் காசு
குயின் றுயர் மகுடஞ் சூடுஞ்
செல்வமுங் கொள்வென் யானே !’ 16

[பரதன் இலக்குமணனைக் குறித்து வினவுதல்]

தூண்டர நிவந்த தோளான்
பின்னருஞ் சொல்லு வான்:‘அந்
நீண்டவன் றுயின்ற சூழல்
இதுவெனி னிமிர்ந்த நேயம்
பூண்டவன் றொடர்ந்து பின்னே
போந்தவன் பொழுது நீத்த
தியாண்டென வினிது கேட்டான் ;
எயினர்கோ னிதனைச் சொன்னான் ; 17

[குகன் கூற்று]

அல்லையாண் டமைந்த மேனி
அழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் !
கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்றான்
இமைப்பில னயனம்,’ என்றான். 18

[பரதன் தன்னை வெறுத்தல்]

என்பதைக் கேட்ட மைந்தன்,
‘ இராமனுக் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமில்
யானென்று முடிவி லாத

துன்பத்துக் கேது வானேன்;
அவனது துடைக்க நின்றான்;
அன்பத்துக் கெல்லை யுண்டோ!
அழகிதென் னடிமை!" என்றான். 19

அவ்விடை யண்ணல் தானும்
அன்றரும் பொடியின் வைகித்
'தெவ்விடை தரநின் றார்க்குஞ்
செறிகழற் புளிஞர் கோமான்
இவ்விடைக் கங்கை யாற்றின்
ஏற்றினை யாயி னெம்மை
வெவ்விடர்க் கடனின் றேற்றி
வேந்தன்பால் விடுத்ததெ'ன்றான். 20

[படகுகள் வருதல்]

நன்றெனப் புளிஞர் வேந்தன்
நண்ணினன் றமரை, 'நாவாய்
சென்றினித் தருதிர்,' என்ன,
வந்தன சிவன்சேர் வெள்ளிக்
குன்றெனக் குனிக்கு மம்பொற்
குவடெனக் குபேரன் மானம்
ஒன்றென நாணிப் பல்வே
றுருவுகொண் டனைய வான. 21

நங்கையர் நடையி னன்ன
நாணுறு செலவி னாவாய்
கங்கையு மிடமி லாமை
மிடைந்தன கலந்த வெங்கும்
அங்கொடிங் கிழித்தி யேற்றும்
அமைதியி னமரர் வையத்
திங்கொடங் கிழித்தி யேற்றும்
இருவினை யென்ன லான. 22

'வந்தன வரம்பி னாவாய்;
வரிசிலைக் குரிசில் மைந்த!
சிந்தனை யாவதெ'ன்று
சிருங்கிபே ரியர்கோன் செப்பச்

சுந்தர வரிவி லானும்
சுமந்திரன் றன்னை நோக்கி,
'எந்தையித் தானை தன்னை
ஏற்றுதி விரைவின்,' என்றான். 23

[சேனை கங்கையைக் கடத்தல்]

குரிசில தேவ லாலக்
குரகதத் தேர்வ லானும்
வரிசையின் வழாமை நோக்கி,
மரபுளி வகையி னேற்றக்
கரிபரி யிரதங் காலாள்
கணக்கறு கரையில் வேலை
எரிமணி திரையின் வீசுங்
கங்கையா றேறிற் றன்றே. 24

4. தேம்பாவணி

[அகஸ்டஸ் ராயன் (Caesar Augustus) ஆணைப்படி பெயரும் வரியும் கொடுக்கப் பெத்லேம் நகரம் வந்த சூசைக்கும் இயேசு நாதரைக் கர்ப்பத்தில் தாங்கியிருந்த மரி அம்மைக்கும் அந்நகரத்தார் இடங்கொடாமையால், அவர்கள் வருந்தி ஒரு கற்குகையை அடைந்தார்கள். அவ்விடத்தில்]

[இயேசுநாதர் பிறத்தல்]

உலகம் மூன்றினும் உவமை நீக்கிய
இலயை மூன்றினும் இழிவில் கன்னியாய்
அலகில் மூன்றினுள் நடுவ மைந்தனை
நிலவு மூன்றினும் நிறப்ப ஈன்றனள். 1

மாத மார்கழி வைகல் ஐயைந்தாய்
ஏதி லாநிசிக் கிருத்தை மூவைந்தாய்
ஆதி நாளென ஆதி நாதனைக்
காதல் நாயகி களிப்பின் நல்கினாள். 2

[தேவதூதர் குழந்தையை ஏந்தல்]

சொக்க ளாவுருத் தோன்றிய தோன்றலை
மிக்க யேலோடு காபிரி யேல்விழைந்
தொக்க வேந்தினர் ஒக்கவும் தாய்முனர்
மக்கள் நாதனை மாண்பெழக் காட்டினார். 3

[தாய் மகிழ்தல்]

பொதிர்கொள் பூமணம் போன்மக வீன்றனன்
கதிர்கொள் சேயொடு கண்கள் கலந்தகால்
எதிர்கொள் வெஞ்சுடர் காண்முழு இந்தெனு
முதிர்கொள் இன்ப முகத்து விளங்கினாள். 4

[திருக்குமாரன் தாயை நோக்கி, 'என்னைப் பெற்ற தாயே, நீயும் என்னைப்போலிரு,' என்றான். தாயும் தேவ குமாரனை வணங்கினாள். முன் சொன்னவானவரிருவரும் திருக்குமாரனைத் தாயின் கரத்தில் தந்து, முன்னே விழுந்து வணங்கினர்.]

காந்த னேரிய செங்கரத் தேந்தினள்
ஏந்த மார்பி லிறுகவுஞ் சேர்த்தனள்
வாய்ந்த பூம்பதம் நீவி வணங்கினள்
ஆய்ந்த நூற்கடங் தாருணர் வெய்தினாள். 5

[பின்னர்த் தேவகுமாரனைப் பலவாறு துதித்துப் புகழ்ந்தனள். பின்பு]

தெருள்சு ரந்த திரைப்புவி யார்ந்துணப்
பொருள்சு ரந்துயிர்ச்(கு) உண்டி பொழிந்தனன்
மருள்சு ரந்த வடுக்கெட மைந்தனாய்
அருள்சு ரந்தமு தாய்தர நுங்கினான். 6

[மரியாள், சூசையைத் தேவகுமாரன் வடிவினைக்கண்டு மகிழ அழைத்தனள்.]

[சூசை குமாரனைக் காணுதல்]

இந்து நேர்நுதல் மீன்கள் நேர்விழி
இண்டை நேர்முக நீர்மையாற்
கந்த நேர்மலர் தாது நேருடல்
காட்டு நாதனை அம்புயச்

சந்தம் நேரிய கன்னி நேர்கையில்
தாம நேரிய முத்தெனச்
சிந்து நேர்நயம் மூழ்கு சீர்மையில்
தேற நோக்கினன் சூசையே. 7

[வியப்புற்று நின்ற சூசையை நோக்கிக் கன்னி மரி, 'நம் நாதனை உன்கையில் ஏந்திக்கொள்,' என்று மலர்க்கையை நீட்டினாள். அவனும்]

கைத்த லத்தி லெடுத்து மார்பொடு
காத லோங்க அணைத்தலும்
முத்த மிட்ட லும் நோக்கில் தீட்ட லும்
முற்ற நீரில் நனைத்தலும்
சித்த முற்றலும் நாண்ம லர்க்கழல்
சென்னி யின்மி சை வைத்தலும்
இத்தி றத்திலும் உண்ம கிழ்ந்துறும்
இன்ப மெல்லையு மில்லையே. 8

[இன்பக்கடலில் மூழ்கிய சூசை, குமாரனைத் தாய் கைக் கொடுக்கத் தேவகுமாரன் விரிந்த செந்தாமரை மெத்தையின் மேல் அன்னக் குஞ்சு போலக் கன்னித்தாயின் கையிலே தூங்கினான்; சூசை இவ்வாறு பாராட்டிச் சீராட்டித் துதித்தனன்.]

'களித்த நாளில் அருட்புன்தென்
காலே! இனிதிவ் கருப்புதியே;
துளித்த நானத் தேனருப்பத்
துணர் நாண் மலர்காள்! அருப்புதிரே;
விளித்த நாகு மாங்குயில்காள்!
விளைதேன் பாவை அரும்புதிரே;
அளித்த நாதன் நான்தனிய
அன்பு துயிலாத் துயில்கின்றான். 9

'கண்பட் டுறங்கக் கண்டேனே
கருணா கரனே! களிக்கடலே!
புண்பட் டுளையும் நெஞ்சிற்கோர்
பொருவா மருந்தே! அருளன்பே!

மண்பட் டலையும் கடலன்ன
மருளென் னெஞ்சிற் குயிர்நிலையே!
எண்டட் டுயர்ந்த செல்வரசே!
எம்மே லிரங்குந் தயையிதுவோ!' 10

என்றான் அழுதான் உள்ளுருகி
யின்பக் கடலாழ்ந் தன்றாழ்ந்தான் ;
குன்றா விறையோன் தயைக்கடலுட்
குளித்தான் ; நீந்திக் கரைகாணான் ;
சென்றா னென்ன மெய்ம்மறந்தே
சிறிதோர் கால்நின் றுணர்ந்தவைவான்
நின்றார் கண்டுள் ளதிசயிப்ப
நிகரில் அன்பால் மீண்டுரைப்பான் : 11

'அறந்தாய் தந்தை சுற்றமுமற்
றனைத்தும் நீயே; கதிநீயே ;
பிறந்தா யுலகிற் குயிரன்னாய்!
பிறந்தெம் துயரும் எம்பகையும்
துறந்தாய்; எங்கள் சிறைதீர்த்தாய்;
துகள்பூட் டியவீட் டுயர்வாயில்
திறந்தா யிவையா வருமறியத்
திறன்செய் தருள்செய் திரங்காயோ?' 12

[என்று பலவாறு தொழுதான். அவ்வளவில்]
துஞ்சுந் தன்மைத் தெவ்வுலகும்
துணையற் றாள்வோ னவைகேட்டு
விஞ்சுந் தன்மைத் தோங்கவளன்
விளைவே விளக்கும் விழிவிழித்தான் ;
எஞ்சுந் தன்மை யுதவியதான்
இசைந்த தன்மை யுலகுணர்த்த
அஞ்சுந் தன்மைத் தெதிரிறைஞ்சும்
அமரர்க் குரையா தேவலிட்டான். 13

5. விசுவநாதம்

நான்காம் அங்கம்

இரண்டாங்களம்

[விஜயநகர் அரசர் கிருஷ்ண தேவராயர், சோழனல் நாடிழந்த சந்திர சேகர பாண்டியனை மீண்டும் அரசனாக்கித் தம் தளகர்த்தன் நாகமனை அவன் கீழ் மந்திரியாய் இருக்கச் செய்தார். சின்னாட்கழித்து நாகமன் பேராசையால் பாண்டியனைச் சிறை செய்து சிமமாசனமேறினன். இச்செய்தியறிந்த கிருஷ்ண தேவர், நாகமனைத் தண்டிக்க வேண்டித் தரும நெறி தவறாத நாகமன் மகன் விசுவநாதனையே ஒரு பெரும்படையுடன் அனுப்பினர். தந்தையைச் சிறை செய்து நீதியை நிலை நாட்ட வந்த விசுவநாதன், மதுரைக்கு அண்மையிலுள்ள சோழவந்தானில் பாசறை அமைத்திருந்தான்.]

இடம் :	சோழவந்தான் புறத்து இறுத்த பாசறை
காலம் :	மாலை
பாத்திரங்கள் :	விசுவநாதன், மங்கம்மாள், வீரன்

நிலைமண்டில ஆசிரியப்பா

விசுவ : [தனியே நின்று]

உலகெலாம் புகழ உடம்பெடுத் தவர்கள்
அலகிலா விளையாட் டாடுமோர் ஈசன்
அமைத்த அறநெறி ஆற்றிநின் றுரே
சமைத்தமா தவரெனச் சாற்றுவர் பெரியோர்!
அடியேற் குலக அனுபவம் பலவாம் :
முடிதரித் துலகம் முறையினெ டாளும்
மன்னவர் அவையும் மாந்தர் ஈட்டமும்
துன்னலர் படையும் சூழ்ச்சியும் வஞ்சகர்
கூட்டமும் சீரியர் குழுவும் பற்பல
நாட்டின் இயற்கையும் நன்குணர்ந் துள்ளேன் ;
மாக்கள் உழலும் வல்லிருட் கானில்

ணுக்க மூடனிருந் துலவுகா மாதி
வருத்தும்;அப் பேய்கள் வசப்பட் டார்பலர்.
கருத்தற நெறியில் கலந்து தூண்ட
நன்மையே இழைத்தவர் நல்லவர் என்பதே
என்மனத் தெழுந்த இசைப்பருங் காட்சி!
ஆதலின், யானும் அன்னவர் காட்டில்
போதரல் அமைந்தும், புன்னெறி புகாமல்
நன்னெறி நாடி நலங்கொளக் கருதினன் ;—
என்னவென் றுரைப்பேன்! எழிலார் மாடமும்
தோரண வீதியும் தோகைவாழ் பொழிலும்
ஆரணம் ஓதும் அந்தணர் இருக்கையும்
தமிழினை வளர்க்கும் சாலையும் செறிந்த
அமிழ்தினும் இனிய அகன்புனல் வைகை
வளநா டுற்ற வான்பெருஞ் செல்வம்
உளநா டுற்றதால் உயரறம் துறந்து
மன்னவன் ஆணையும் மறந்து சரண்புகு
தென்னவன் றனையும் சிறையிடை வைத்தான்
தந்தை; அன்னவன் றனை அடக் கென்று
கந்தடு களிற்றுக் காவலன் என்னை
விடுத்தனன்; வந்தேன் வெம்போர்க் களத்தில்
படுத்துவ தோவெனைப் பயந்த தந்தையை?
துறப்பதோ ஆணை? தொன்மை அறத்தை
மறப்பதோ கொடிது! மன்னவன் பார்த்தன்
தந்தையும் தமயனும் தம்பியர் பலரும்
விந்தைகற் பித்த வில்லா சிரியனும்
ஆர்வம் மிக்க அரசரும் நிறைந்த
போர்முனை நின்று பொருவ தொழிந்து
வருந்த, அன்னவன் மயக்கம் ஒழிந்து
திருந்த மாயவன் செப்பிய மொழியை
யாவரே மறப்பர்? ஆதலின், அவனி
காவலன் இட்ட கட்டளைப் படியே
நிற்றல் அறனென நினைந்து நின்றனன்!—

[ஒரு வீரன் பிரவேசிக்கிறான்.]

வீரன் : வெற்றிவேல் இறைவ! விழைந்துனைப் பெற்ற
தாய்மணிச் சிவிகை தனிலயர்ந் திங்கு
வாயில் இறங்கி, 'வரவுரை' என்றனள்.

[மங்கம்மாள் உள்ளே வர, விசுவ
நாதன் பணிந்து]

விசுவ : அன்னாய்! வருக! அலகிலா நாட்கள்
உன்னைப் பிரிந்தேன்!

மங்க : உனைப்பிரி துயரால்
நானும் வருந்தினன், நாதனே! மதுரை
மாநகர் உற்று வழியிடை நின்றனை;
ஏனிது? தந்தையும் இரங்கி நின்றனன்!

விசுவ : கோனெழிற் படைதனைக் கொண்ட சேவராய்
தந்தையைப் பொருது தரும நெறியைப்
புந்தியிற் புலப்படப் புகல வந்தனன்;
அவனுடன் போந்தனன் அன்னையே!

மங்க : அப்பனே!
எவனுடன் பொருவது? எவனவன் பொருவது?
ஏனவன் பொருவது?

விசுவ : எந்தை நன்னெறி
தானகன் றனெனத் தராபதி கேட்டுச்
சேவ ராயனைச் சேனையோ டனுப்பினன்.

மங்க : ஆவ தென்னினி?

விசுவ : அரும்போர் விளையும்!

மங்க : நீயும் போரிடை நிற்றல் அமையுமோ?

விசுவ : ஆமே! அறநெறி ஆற்றலே கடனும்.

மங்க : தந்தைக் கறன்வழி தனயன் பகர்வதோ?
விந்தை! விந்தையே! வேண்டா! கேளாய்:
உலகியல் முற்றும் உன்னிலும் அறிந்தவர்;—
நலனெனக் கொண்டு நயந்து செய்தனர்;
ஆதலின், போர்த்தொழில் அகற்றி உன்றன்
தாதையோ டிணங்கித் தாரணி காக்கும்
செல்வம் பெறுதி.

விசுவ : [செவியைப் பொத்தி]

சிவசிவ! போதும்!

கல்வியும் மதியும் கைவரப் பெற்றது
அறநெறி விட்டிவண் அவத்த மானதோர்
மறநெறிக் கேதுவாம் வாழ்க்கை பெறவோ?
தந்தைதாய் மொழியைத் தாங்குதல் எனக்கு
முந்தையோர் மொழிந்த முழுமறை யாயினும்,
அறனலா தியற்றற் கடியேன் பொருந்தேன்!

மங்க : விறற்படை மதலாய்! வெற்றி மடந்தையும்
அரசச் செல்வமும் ஆக்கமும் பெயரும்
விரசுவார் வணங்கும் வீரமும் கீர்த்தியும்
நின்னுடைச் செல்வமாய் நிலைக்கக் கண்டு,
மன்னவன் தாயென மாநிலங் கூறும்
நல்வினை என்வயின் நாடிய அன்றே,
மல்வலித் திண்தோள் மகனே! பாக்கியம்
அடைந்தவள் ஆவேன்.

விசுவ : அம்மணி! அடியேன்

கடைப்புறங் காவல் காவலர் செலுத்தப்
பாவலர் புகழப் பனிக்குடை அதன்கீழ்
ஏவலர் இறைஞ்சும் இறைமக னாயின்
பாக்கியம் படைத்துப் பலபல போகமும்
ஆக்கிய இன்பமும் அடைந்து மகிழ்வையோ?
அன்னையே! விசய நகர மதனில்
மன்னவர்ப் பயந்த மாதவப் பெண்டிர்
நின்வயின் மிக்க நேயம் உடையர்
இன்பமும் நலமும் எண்ணருஞ் செல்வமும்
ஆடையும் கலனும் அரிவையர் ஆயமும்
மேடையும் மாடமும் மென்மலர்ச் சோலையும்
சில்லெனக் குளிர்ந்த சீதளச் சேக்கையும்
மெல்லென மேனி வீசு தென்றலும்
இன்னிசை இன்பமும் எதிர்ந்தன ஆயினும்,
நன்னிலை தனையுளம் நாடிற் றிலையால்,—

என்றவர் கூறினர் என்றுநீ பகர்ந்தனை
அன்றே மறந்தனை அன்னாய்!

மங்க : பாலக!
நின்மொழி அறமே ஆயினும் ஆகுக;
என்னுரை கேட்டிடேல், இவணுறு தானையோ
டணிமதிற் கூடல் அடைந்திள வரசாய்
மணிமுடி மன்னவர் வணங்கவீற் றிருப்பாய்;
அரசதந் திரமும் அன்னதே!

விசுவ : அழகிதே
அரச தந்திரம்! ஆருனக் குரைத்தார்?
பேதைமை கொண்டு பிதற்றுகின்றனை!
மோதுறு படையுடன் முனைந்து மன்னவன்
நாளைய போரில் நலிய வந்திடும்
வேளையித் தந்திரம வெல்லுமோ? பேதாய்!
அன்றியும் மனுமுறை ஆட்சி செய்யும்
மன்றல் மாலை மன்னவர் மதியார்;
துன்பமே சுற்றும் துரோகசிந் தனையால்
மன்பதை விரும்பாது; மாநர கெய்துவம்;
ஆதலின், நின்னுரை அகற்றற் பாலதே!—
போதுக!

மங்க : [மிக்க சினங்கொண்டு]
என்னுரை புல்லிதென் றிகழ்ந்தனை!
நல்லது! போர்த்திறம் நாடினை நீவிர்
வெல்வதும் தோற்பதும் விளங்கும் நாளையே!
[மங்கம்மாள் வெளியே செல்கிருன்.]

IV. சிற்றிலக்கியம்

1. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

கத்தும் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு;

தத்தும் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு ;
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு ;
கொண்டல் தருநித் திலந்தனக்கும்
கூறும் தரமுண் டுன்கனிவாய்
முத்தந் தருக விலையில்லை
முருகா ! முத்தம் தருகவே !
முத்தம் சொரியும் கடலலைவாய்
முதல்வா ! முத்தம் தருகவே ! —பகழிக்கூத்தர்

2. திருவரங்கக்கலம்பகம்

உருமாறிப் பலபிறப்பும் பிறந்தும் செத்தும்
ஊசலா டுவதடியேன் ஒழியும் வண்ணம்
கருமாயத் தன்னெஞ்சைப் பலகை யாக்கிக்
கருணையெனும் பாசத்தைக் கயிறுப் பூட்டி
மருமாலைத் துளவசைய ஆடி ரூசல் ;
மணிமகரக் குழையசைய ஆடி ரூசல் ;
திருமாது புவிமாதோ டாடி ரூசல் ;
திருவரங்க ராசரே ! ஆடி ரூசல்.

—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

3. திருவேங்கடசதகம்

காரியா காரியம் கொற்றவர் தெரிந்திடக்
கண்டுசொல் வோன்மந்திரி ;
காலமும் தன்பலமும் எண்ணியிகல் வென்றிடக்
கருதுவோன் தளகர்த்தனும் ;
சீரிய தனங்களொடு ராச்சியம் சகலமும்
திட்டமிடு வோன்ப்ரதானி ;
செய்யவா சகதாட்டி அவதான வக்கணை
சிறக்கும்அவ னேராயசன் ;

சூரியன் திசைமாறி னும்தான் கொடுத்தஅத்
தொகைவிடான் கருணீகனும் !
சொல்வன்மை சபைவன்மை பரராசர் வன்மைதெரி
சுமுகனை தானபதி ;
மாரியது காத்தருளும் மணிமேக வண்ணனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமணவாளனே !
வரதவேங் கடராயனே ! —நாராயணபாரதி

4. மீனாட்சியம்மை குறம்

புல்வாயின் பார்வையைவெம்
புலிப்பார்வை யிணங்கும் ;
புதுத்தினைகல் லுரற்பாறை
முன்றிமுற் றுணங்கும் ;
கல்விடரில் வரிவேங்கை
கடமாணே டுறங்கும் ;
கருமலையில் வெள்ளருவி
கறங்கிவழிந் திறங்கும் ;
சில்வலையும் பல்வாரும்
முன்னிறப்பிற் றூங்கும் ;
சிறுதுடியும் பெருமுரசுந்
திசைதொறுநின் றேங்கும் ;
கொல்லையின்மான் பிணையுமிளம்
பிடியும்விளை யாடும் ;
குறிச்சியெங்கள் குறச்சாதி
குடியிருப்ப தம்மே ! —குமரகுருபரர்

5. ஏரெழுபது

உழுநர் சிறப்பு

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாருந்
தொழுதுண்டு பின்செல்வார்,' என்றேயித் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றோ இவருடனே யியலுமிது
பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்திற் பிறந்தார்க்கே? 1

அலப்படைச் சிறப்பு

குடையாளு முடிவேந்தர் கொலையானை தேர்புரவி
படையாளும் இவைநான்கும் படைத்துணைய ராலென்?
மடைவாளை வருப்பொன்னி வளநாடர் தங்கள்கலப்
படைவாளைக் கொண்டன்றிப் பகையறுக்க மாட்டாரே. 2

நுகத்தாணிச் சிறப்பு

ஓராணித் தேரினுக்கும் உலகங்கள் அனைத்தினுக்கும்
பேராணிப் பெருக்காளர் பெருமைக்கு நிகருண்டோ?
காராணிக் காவேரி வளநாடர் உழுநுகத்தின்
சீராணிக் கொப்பதொரு சிறந்தாணி செப்பீரே. 3

தாற்றுக்கோற்சிறப்பு

வெங்கோபக் கலிகடந்த வேளாளர் விளைவயலுள்
பைங்கோல முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்;
கொங்கோதைக் கடற்றானைப் போர்வேந்தர் நடத்துபெருஞ்
செங்கோலை நடத்துங்கோல் ஏரடிக்கும் சிறுகோலே. 4

ஏர் நடத்தற்சிறப்பு

கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக்கும் எனிற்புகழ்சால் இயலிசைநா டகம்நடக்கும்;
சீர்நடக்கும்; திறநடக்கும்; திருவறத்தின் செயல்நடக்கும்:
பார்நடக்கும்; படைநடக்கும்; பசிநடக்க மாட்டாதே. 5

வயலின் முடி சேர்த்தற்சிறப்பு

தென்னன்முடி சேரன்முடி தேங்குபொன்னி நாடன்முடி
கன்னன்முடி கடல்சூழ்ந்த காசினியோர் தங்கள்முடி
இன்னமுடி யன்றியுமற் றெடுத்துரைத்த முடிகளெல்லாம்
மன்னுமுடி வேளாளர் வயலின்முடி கொண்டன்றோ? 6

பசுங்கதிர்ச் சிறப்பு

முதிராத பருவத்தும் முற்றியநற் பருவத்தும்
கதிராகி உயிர்வளர்ப்ப(து) இவர்வளர்க்கும் கதிரன்றோ?
எதிராக வருகின்ற எரிகதிருங் குளிர்கதிரும்
கதிராகி யுயிர்வளர்ப்ப துண்டாயற் காட்டீரே. 7

போர்க்களச் சிறப்பு

பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடா தொருநாளும்
ஏர்வேந்தர் பெருஞ்செல்வம் அழிவுபடா திருத்தலினால்;
தேர்வேந்தர் போர்க்களத்துச் சிலர்வெல்வர்; சிலர்தோற்பர்;
ஏர்வேந்தர் போர்க்களத்துள் இரப்பவரும் தோலாரே. 8

—கம்பர்

V. இயற்கையழகு

பாண்டி நாடு

நந்தின் இளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்
பந்தர் இளங்கமுகின் பாளையும்—சிந்தித்
திகழ்முத்தம் போற்றோன்றுஞ் செம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையான் நாடு. 1

சேரநாடு

அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு. —முத்தொள்ளாயிரம் 2

சோழநாடு

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடவன்னம் குளமெல்லாம் கடலன்னம்
நாடெல்லாம் நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம். —சேக்கிழார் 3

இயற்கையழகு

கோசல நாடு

தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கண் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ. —கம்பர் 4

திணை மயக்கம்

அலைக்காகம் மலைச்சாரற் பலாச்சுளையைக்
கவ்வியெழுந் தரக்கர் கோமான்
சிலைத்தாச ரதிமனையைக் கொண்டகன்றால்
எனவங்கட் சேரும் அந்நாள்
நிலைப்பான மதிளிலங்கை மிசைத்தாவும்
அனுமனைப்போல் நீள்வால் மந்தி
மலைப்பால்நின் றலைத்தோணி பாய்ந்தழுங்கி
மீண்டெய்தும் வாழ்வும் அங்கண். 5

—சிவஞான முனிவர்

மதுரை மாநகர்

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர்; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்(து)
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்;
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்;
தாதுண், பறவை யனையர் பரிசில் வாழ்நர்;
பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
ஏம இன்றுயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே. —பரிபாடல் 5

மலை வளம்

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்;
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்;
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்;
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்;
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்;
கூனல்இளம் பிறைமுடித்த வேணி அலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே. 7

—திரிகூட ராசப்பக் கவிராயர்

VI. தனிப்பாடல்

நாராய்! நாராய் செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயும் நின் மனையும்
தென்றிசைக் குமரி ஆடி வடதிசைக்
காவிரிஆட ஏகுவி ராயின் எம்
சத்தி முற்றத்து வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லிப்
பாடுபார்த் திருக்குப்எம் மனைவியைக் கண்டெம்
கோமான் வழுதி கூடல் மன்றத்(து)
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலே தழீஇ
அலகுதிர்ந் தன்ன பல்லின னாகிப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே. 1

—சத்திமுற்றப்புலவர்

நீள்த் திரிந்துழன் றாய் நீங்கா நிழல்போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே!—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே?
இன்றைக்கே சற்றே யிரு. —மதுரகவிராயர் 2

விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த இறைவன் சடாம
குடத்திலே கங்கையடங் கும். 3

வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன?
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை?—மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியாரே! —காளமேகப்புலவர் 4

சீராடை யற்ற வைரவன் வாகனம் சேரவந்து
பாராரும் நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயர் வாகன மாயிற்று ; நமைமுகம்
பாரான் மைவாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே! 5

'இம்பர்வா னெல்லைஇரா மனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணா நீ!' என்றாள் பாணி;
'வம்பதாம் களபம்'என்றேன்; 'பூசு'மென்றாள்;
'மாதங்கம்' என்றேன்;'யாம் வாழ்ந்தோம்,' என்றாள்;
'பம்புசீர் வேழம்'என்றேன்; 'தின்னு'மென்றாள்;
'பக'டென்றேன்; 'உழும்'என்றாள் பழனந் தன்னை;
'கம்பமா' என்றேன்;'நற் களியாம்' என்றாள்;
'கைம்மா'என்றேன், சும்மாக் கலங்கினாளே. 6

—கவி வீரராகவ முதலியார்

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய்—ஊருக்குச்
சென்றுவர எளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்டால்
என்றும் உழவே இனிது. 7

நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நூற்சீலை
நாற்றிங்கள் தன்னிற் கிழிந்துபோம் ;—மாற்றலரைப்
பொன்றப் புறங்கண்ட போர்வேல் அகளங்கா!
என்றும் கிழியாதென் பாட்டு. —ஒளவையார் 8

VII. பல் துறை

1. தொழில்

மண்ணெ டுத்துக்கு டங்கள்செய் வீரே ;
  மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே ;
உண்ணக் காய்கனி தந்திடு வீரே ;
  உழுது நன்செய்ப் பயிரிடு வீரே ;
எண்ணெய் பால்நெய் கொணர்ந்திடு வீரே ;
  இழையை நூற்றுநல் ஆடைசெய் வீரே ;
விண்ணின் நின்றெமை வானவர் காப்பார் ;
  மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே. 1

பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே ;
  பரத நாட்டியக் கூத்திடு வீரே ;
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
  கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே ;
நாட்டி லேஅறம் கூட்டிவைப் பீரே ;
  நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே ;
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
  தெய்வ மாக விளங்குவீர் நீரே. 2

—சுப்பிரமணிய பாரதியார்

2. வீரத்தாய்

கெடுக சிந்தை ! கடிதிவள் துணிவே !
மூதின் மகளிர் ஆதல் தகுமே !
மேனாள் உற்ற செருவிற்(கு) இவள்தன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே !
நெருநல் உற்ற செருவிற்(கு) இவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே !
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்,
'செருமுக நோக்கிச் செல்'கென விடுமே ! 3

—ஒக்கூர் மாசாத்தியார்

3. கையறம்

அர்ச்சுனன் அபிமன்யு பிரிவுக்கு இரங்கல்

போரினில் துணைவ ரோடும் புயங்கமே தனைவென் று
பாரெனக் களித்தி நீயே என்றுளம் பரிவு கூர்ந்தேன் !
நேருனக் கொருவர் இல்லாய் ! நீகளம் பட்டா யாகில்
ஆரினிச் செருக்க வல்லார் ஐவருக் குரிய கோவே ! 1

சக்கரம் பிளந்த வாறும் தரியலர் உடைந்த வாறும்
துக்கர மான கொன்றைத் தொடையலால் வளைத்த வாறும்
மெய்க்கரம் துணித்த வாறும் மீண்டுருத் தடர்த்த வாறும்
உக்கர முடனென் முன்னே ஓடிவந் தருள்செய் யாயோ ! 2

பன்னக அரசன் பெற்ற பாவைமா மதலை தன்னை
முன்னுற முனையில் தோற்றேன் மூர்க்கனேன் முடியாதுண்டோ
உன்னையும் இன்று தோற்றேன் உனுடன் தொடர்ந்தவாரா(து)
இன்னமும் இருந்தேன் ஐயா ! என்னுயிர்க் கிறுதி உண்டோ ? 3

கதிரவன் உதிக்கு முன்னே கண்துயில் உணர்த்தி என்னை
அதிரமர்க் கோலம் கொள்வான் அறிவுறுத் துரைக்க வல்லாய் !
முதிரமர் முருக்கி மீண்டேன் இத்தனைப் போதும் முன்போல்
எதிர்வரக் காண்கி லேன் இங் கில்லையோ என்செய் தாயோ ! 4

தந்திரம் யாவும் இன்றித் தனித்துநீ தானே போர்செய்(து)
அந்தரம் அமையும் என்றிவ் வகலிடம் துறந்த ஐயா !
'மைந்துடன் நம்மைக் காண மகன்மகன் வருகின் றான்'என்(று)
இந்திரன் ஏவ உன்னை இமையவர் எதிர்கொண் டாரோ ? 5

தேரழிந் தெடுத்த வில்லும் செங்கதிர் வாளும் இன்றி
ஒருதவி யும்பெ றாமல் ஒழிந்துயிர் அழிந்த மைந்தா !
போரமர் உடற்றி நீயப் பொன்னகர் அடைந்த போதுன்
பேரமர் ஆண்மை கேட்டுப் பிதாமகன் என்சொன் னானே ! 6

மற்புயக் குன்றில் ஒன்று வாளுடன் வீழப் பின்னும்
பொற்புறப் பொருத நீஅப் பொன்னுல கடைந்த காலை
அற்புதப் படைகள் வல்லாய் ! அபிமனே ! அமரர் ஊரும்
கற்பகக் காவும் வானிற் கங்கையும் காட்டி னாரோ ? 7

வளைத்தவில் நிமிரா வண்ணம் வாளியால் மாவுந் தேரும்
துளைத்துமுன் காலா ளாகத் துரோணனைத் துரந்த வீரா!
திளைத்தவெஞ் சமரில் நொந்து தெனஞ்சயன் சிறுவன் மேனி
இளைத்ததென்று இந்தி ராணி இன்னமுது ஊட்டி னாளோ! 8

—வில்லிபுத்தூரார்

4. காந்தீய சேவை

சாந்திசாந்தி சாந்தியென்று சங்குகொண்டு ஊதுவோம்;
சோர்ந்திருக்கும் உலகினுக்குச் சுகமெடுத்து ஓதுவோம்!
மாந்தருக்குள் கோபதாப வாதுசூது மாறவே
காந்திசொன்ன மார்க்கமன்றிக் கதிநமக்கு வேறிலை. 1

தமிழருக்குக் கருணை எண்ணம் தாயின்பாலில் தந்தது
குமிழியொத்த உயிரைநல்ல கொள்கைக்கீய முந்திடும்
அமுதமொத்த காந்திமார்க்கம் தமிழகத்தின் செல்வமாம்;
நமதுசேவை அதனைஏந்தி நாட்டிலெங்கும் சொல்வதாம். 2

வானிருந்து ஒருதேவன் வலிய வந்து
வகைகெட்ட மனிதருக்கு வழியைக் காட்டித்
தானிருந்து நமக்காகத் தவங்க ளாற்றித்
தருக்கரின தூஷணைகள் பலவுந் தாங்கி
மோனநெறி தவறாத காந்தி யாக
முன்னிருந்து காரியங்கள் முயலும் போது
ஏனிருந்து நாம்பலவும் எண்ண வேண்டும்?
என்னசொன்னார் காந்தியதைப் பண்ணு வோமே. 3

காந்தியர்க்குக் கைபோல உதவி நின்று
கடல்கடந்த ஆப்பிரிக்காக் கண்டந் தொட்டுச்
சேர்ந்திருந்து பாடுபட்டு ஜெயமும் பெற்ற
சிறப்பெல்லாம் தமிழருக்கே மிகவுஞ் சேரும்;
நேர்ந்திருக்கும் நெருக்கடியை வெல்ல இன்றும்
தமிழர்துணை காந்தியவர் நினைப்பார்; உண்மை;
சோர்ந்துவிடக் கூடாது தமிழா! காந்தி
சொன்னபடி செய்வதுதான் உன்றன் ஜோலி.

—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

உரை நடை

1. முத்தமிழ்

[வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், B.A.,]

தொன்றுதொட்டுத் தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளுடையதென்று பலருங் கூறுகின்றனர். அம்மூவகைப் பாகுபாடுகளின் இயல்புகளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்:

இயற்றமிழென்பது தமிழர் யாவர்மாட்டும் பொதுமையின் இருவகை வழக்கினும் இயங்குகின்ற வசனமுஞ் செய்யுளு மாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண் இலக்கியங்களும் இலக்கணங்களுமாகிய யாவும் அடங்குமென்க.

முற்காலத்துச் சங்கச் செய்யுட்களும் அவற்றினுரைகளும், இடைக்காலத்துக் கம்பராமாயணம் முதலிய நூல்களும் அவற்றினுரைகளும், இக்காலத்து வெளிப்படும் செய்யுள் நூல்களும் ஆகிய யாவையும் இயற்றமிழாம். இவ்வியற்றமிழ், இசைத்தமிழ்க்கும் நாடகத்தமிழ்க்கும் முன்னர்த் தோன்றினமைபற்றி, ஆஃது அவ்விரண்டற்கும் முன் வைக்கப்படுவதாயிற்று. அன்றியும், இயற்றமிழே அவ்விரண்டிற்கும் உயிரென விளங்குவது. இயற்றமிழின்றி அவ்விரண்டும் தனித்தியங்குவனவல்ல.

இசைத்தமிழென்பது, பண்ணொடு கலந்தும் தாளத்தொடு கூடியும் இயங்குஞ் செந்தமிழ்ப் பாட்டுக்களானும் கொடுந்தமிழ்ப் பாட்டுக்களானும் இயன்ற இலக்கியங்களும் அவற்றினிலக்கணங்களுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண் கீர்த்தனங்களும், வரிப்பாட்டுக்களும், சிந்து ஆனந்தக்களிப்பு கும்மி தெம்பாங்கு முதலியனவும் அடங்குமென்க. இயற்றமிழின்கண் வழங்குஞ்சொற்களும் சொற்றொடர்களுமின்றி இசைத்தமிழ் எங்ஙனம் இயங்க முடியும்? அன்றியும், இயற்றமிழ்ச் செய்புட்கள் இசையெடுத்துத் தாளமறுத்துப் பாடப்படின், அவையும் இசைத்தமிழின்பாற்படும். இராகத்தொடு மட்டில் இயைத்துப் பாடப்படும் பாடல்கள் இயற்றமிழின் பாற்பட்டனவாக மதிக்கப்படுமேயன்றிப் பிறிதில்லை.

தாளமும் உடன் கூடிய வழியே அவை இசைத்தமிழின்பாற் படுமென்க. * * இவ்விசைத்தமிழ், நாடகத் தமிழ்க்கு முன்னர்த் தோன்றினமை பற்றி, முன் வைக்கப்படுவதாயிற்று. அன்றியும், இவ்விசைத்தமிழே நாடகத் தமிழ்க்குச் சிறப்பும் விளக்கமுந் தந்து நிற்பதாம். இசைத்தமிழ் இல்வழி நாடகத் தமிழிற்கு இயக்கமில்லை. * இயற்றமிழும் இசைத்தமிழுங் கூடிய வழியே நாடகத்தமிழ் பிறக்குமென்று கூறுதலை அமைவுடைத்தாம்.

* * * *

இனி இடைக்காலத் தொடக்கத்தில் தோன்றிய இசைத் தமிழிலக்கிய நூலாகிய மூவர் தேவாரங்களும், தமிழிற்கே உரிய பண்ணும் திறனும் பயின்றனவாகி ஒளிர்கின்றன. அத் தேவாரங்களுக்குப் பின்னர் ஏற்பட்ட இசைத்தமிழிலக்கிய நூல்களில் வடமொழி இராக அமைப்பும் தாள அமைப்புங் காணப்படுகின்றன. அதன்மேல் இற்றை நாள்களில் உலவுறும் இலக்கியமும் இலக்கணமுமாகிய இசைத்தமிழ் நூல்களெல்லாம் 'மேளகர்த்தா' என்னும் வடநூலைத் தழுவியே அமைக்கப்பட்டிருக்கின்றன. இசைத் தமிழின்கண் ஏற்பட்ட வடமொழிக் கலப்பு இவ்வளவுதான்.

பழைய இசைத்தமிழ் நூல்களுள் பெரும்பாலன இறந்து விட்டன; இரண்டொன்று மட்டில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அவைதாமும் சின்னாட்களில் வெளியிடப்படாவிடின், அழிந்துபடினும் படும்.

நாடகத்தமிழென்பது, கையில் நூலெடுத்துப் படித்தற்குரிய அவகாசமில்லாத வேலைக்காரர்களுக்கும், படிக்கத் தெரியாதவர்களுக்கும் நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டது. அது கேட்போருக்கும் காண்போருக்கும் இன்பம் பயவாவிடின், சாமானிய சனங்கள் அதனை விரும்பிச் செல்லாராதலின், அஃது இன்பச்சுவையொடு இயல்வதாயிற்று. உலகத்தின் இயல்பினை உள்ளதை உள்ளவாறே புனைந்து காட்டுவது நாடகத் தமிழேயன்றி வேறில்லை. இயற்றமிழும் இசைத்தமிழும் சேர்ந்த வழியே நாடகத்தமிழ் பிறந்ததெனினும், நாடகத்தமிழிற்கு வேறு தனிப்பெருஞ்சிறப்பு உளது. முன்னையன இரண்டும் கேள்வியின்பம் மட்டிலே பயப்பன

வாய் நிற்கின்றன. இவ்விரண்டனடியாகப் பிறந்த நாடகத் தமிழோ, செவ்வியின்பம் பயப்பதேயன்றிக் காட்சியின்பமும் உடன் பயக்கிறது. இச்சிறப்புப் பற்றியே பிற நாடுகளி லுள்ள பிற பாஷைப் புலவர்கள், நாடகங்களை மிக்க மேன்மை யுடையனவாக மதிக்கின்றனர்.

இத்துணைப் பெருமை வாய்ந்த நாடகத்தமிழின் தோற்ற மென்னை? தமிழ் நாடகம் முதலில் உண்டானது மதவிஷய மாகவே என்பது துணியப்படும். அது கடவுளர் திருவிழாக் காலங்களில் ஆடல் பாடல்கள் இரண்டையும் சேர நிகழ்த்து வதினின்றும் உண்டாயிற்று. சில காலத்தின் பின்னர்க் கதை நடையான மனப்பாடங்களும் உடன் கூடின; அதன்மேல் முதலிற்பாடலாயுள்ள சம்பாஷணைகளும் அவற்றுடன் சேர்க் கப்பட்டன. பிற்பாடு நாடகத்தமிழ் 'வேத்தியல், பொது வியல்' என்ற இரு பிரிவினதாகி, அரசர்களானும் ஏனையோ ரானும் ஆதரித்து வளர்க்கப்பட்டது.

நாடகசாலையை உலகத்தின் பிரதிவிம்பமென்றெண்ணி ஆங்கு நடித்துக் காட்டப்படுபவற்றுள் தமக்கு வேண்டிய நற் பகுதிகளை மட்டில் ஏற்றுப்போவதே நன்மக்களியல்பு. உழைத்த உள்ளத்திற்கு இன்பந் தந்து ஊக்கம் விளைவிப்பன நாடகங் களே. சிற்சிலர் அறிவு திரிந்து வேறுபட்டாராயின், அஃது அவரது இயற்கைத் தன்மைகளுள் ஒன்றுமேயன்றி, நாடகத் தால் விளைந்த செயற்கைத்தன்மையன்றாம். தவறுள்ள இடத் திலன்றே திருத்தம் வேண்டும்? புண்ணுள்ள இடத்திலன்றே சிகிச்சை செய்யப்படும்? அவர்கள் சிலர் தமது தீக்குணத்தால் நாடகசாலை சென்றும் நாடகங்கள் படித்தும் கெட்டாராக, அதனைக் காகதாலியமாய் நாடகத்தின் தலையிலேற்றி, நாடகத் தமிழே தீதென்று கடிதல் எவ்வாறு ஏற்புடைத்தாகும்? இது நிற்க.

சென்ற சில்லாண்டுகளாக, நாடகத்தமிழ், அறிவுடை யோர் சிலரது உதவிகொண்டு தலையெடுத்து வளராநின்றது. இதற்கு வடமொழி நாடகப் பயிற்சியும் ஆங்கில நாடகப் பயிற்சியும் மிகப் பயன்படுவனவாயின. இவ்வாறு புது வழியிற் புனையப்பட்டு வெளிப்படும் நாடகங்கள் இன்னும் அதிகரித்தல் வேண்டும்.

* * * *

2. பண்டைத் தமிழர் உரைநடை

இளம்பூரணர் உரைநடை

சிறப்புப் பாயிரம்

எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க என்பது மரபு. என்னை? 'ஆயிர முகத்தா னகன்ற தாயினும், பாயிர மில்லது பனுவ லன்றே,' என்பவாகலின். பாயிரமென்பது புறவுரை 'அது நூற்குப் புறவுரையேல், அது கேட்டு என்னை பயன்?' எனின், கற்று வல்ல கணவற்குக் கற்புடையாள் போல இன்றியமையாச் சிறப்பிற்றாயும், திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின்மாடம் போல அலங்காரமாதற்சிறப்பிற்றாயும் வருதலானும், பாயிரம் கேளாதே நூல் கேட்குமேயெனில், குறிச்சி புக்க மான் போல மாணாக்கன் இடர்ப்படுமாகலானும், பாயிரம் கேட்டல் பயனுடைத்தாயிற்று. அப்பாயிரம் பொதுவும் சிறப்பும் என இரு வகைத்து. எல்லா நூன் முகத்தும் பொதுவாக உரைக்கப்படுதலிற் பொதுவெனப்பட்டது. 'ஈவோன் றன்மை முதலிய நூலுட்சொல்லும் பொருளல்லாத புறப்பொருளைக் கூறும் பொதுப்பாயிரம் போலாது, நூலகத்தெல்லாம் பயத்தன்மாத்திரையேயன்றி அந்நூலிற் சொல்லப்படுகின்ற பொருள் முதலிய உணர்த்தலின், அணியிழை மகளிர்க்கு அவ்வணியிற்சிறந்த ஆடை போல நூற்குச் சிறத்தலால் சிறப்பெனப்பட்டது.

—தொல்காப்பியம், எழுத்ததிகாரம்.

3. திருக்கயிலாயகிரி

[ஸ்ரீ சித்பவாநந்த சுவாமிகள்]

பூலோகத்தில் திருக்கயிலாயபுரி என்ற ஒரு ஸ்தலம் இருக்கிறது. மற்ற க்ஷேத்திரங்களுக்குப் போவது போன்று இதற்கும் யாத்திரை போகக்கூடும் என்பது பலருக்குத் தெரியாது முன்னாளில் பெரியார் பலர், கயிலாயகிரிக்கு யாத்திரை சென்ற வரலாறுகள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை பாண்டவர்களைப்பற்றியதும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்பற்றியதுமாம். அப்பர் சுவாமிகள் கயிலையை நோக்கி வட திசையாகச் சென்றார்; அங்குச் சென்று இறைவனை வழுத்த வேண்டுமென்ற பேரவா

அவர்க்கு உண்டாயிற்று. ஆனால், மேலும் செல்லச் சரீரம் இடங் கொடுக்கவில்லை. உடலால் ஏற்பட்ட இடைஞ்சலை எண்ணி அவர் வருந்துகையில், கயிலையின் தரிசனத்தைத் திருவையாற்றி னின்றே பெறும்படி அவருக்கு அனுக்கிரகம் உண்டாயிற்று. 'அம்மலை எங்கிருக்கிறது? அதன் சிறப்பு என்ன?' என்பது பலருக்குத் தெரியாது.

பூர்வகாலத்தில் தீர்த்த யாத்திரை பண்ணுவது மிகக் கடி னமாயிருந்தது. பிரயாண வசதிகள் அப்போது இல்லை. வழியில் விபத்துக்கள் பல இருந்தன. காசி போன்ற இடங்களுக்குப் போய் வருவதே செயற்கரிய செய்கையாயிருந் தது. கயிலாயத்துக்குப் போவது இன்னும் எவ்வளவு கஷ்டமா னது என்பது சொல்லாமலே விளங்கும். அந்நாளில் அதை நோக்கிச் சென்றவர்கள் திரும்பி வரவில்லையாதலால், கயிலாயம் போவது பரகதியடைவதோடு ஒப்பிடப்பட்டது. அது சிவனு ரது உறைவிடம்; 'சிவசாயுச்சியம்' என்பதும் அதுவே. அங்குச் செல்பவர் சிவனோடு லயமாகிவிடுகின்றனர். மரணமடைபவர் கயிலாய பதவியைப் பெற்றுவிட்டதாகக் கருதப்படுகின்றனர். கயிலையைப்பற்றி இன்றைக்கும் இவ்வாறு கருதப்படுகிறது.

தில்லையம்பலம் என்பது ஒரு பாரமார்த்திக நிலையாயிருப் பது போன்று, அப்பெயர் பூண்ட ஸ்தலம் ஒன்று மண்ணுலகி லும் உண்டு. பாரமார்த்திக உண்மையை விளக்கிக் காட்டும் முறையில் அக்கோயில் அமைக்கப்பட்டிருந்தது. திருக்கயிலா யமோ, இயற்கையாகவே கோயில் போன்று அமைந்துள்ளது. இது இமயமலையின் வடசாரலில் மேற்குத் திபேத்தில் இருக்கி றது. இமயமலை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சிறிய இமயம், பெரிய இமயம், எல்லை கடந்த இமயம் என்பன அப்பிரிவுகளுக்குப் பெயர். ஆங்கிலத்தில் The Lesser Himalayas, The Greater Himalayas and The Trans-Himalayas என்று அப்பிரிவுகளைச் சொல்லுவார்கள். கயிலா யம் எல்லை கடந்த இமயத்தில் இருக்கிறது. பெரிய இமயம் என் றைக்கும் உருகாத பனிக்கட்டியை உடையது. இந்தியாவுக்கு வடபுறத்தில் இயற்கை எல்லையாய் ஏற்பட்டது இதுவே. கிழக்கு மேற்கில் இது இரண்டாயிரம் மைல் தூரமுள்ளது.

இதைக் கடந்து வடபுறம் செல்லுதற்கு வசதியான கணவாய்கள் இல்லை. உபயோகத்திலுள்ள சில கணவாய்கள் வேனிற் காலத்தில் மட்டும் வழி திறக்கப்படுகின்றன. மற்றக் காலங்களில் அவைகள் பனிக்கட்டியால் மூடிக்கிடக்கும். இக்கணவாய்களில் ஒன்றாகிய லிப்புத் தடாகக் கணவாய் வழியாக யாத்திரைவாசிகள், பெரிதும் கயிலாயத்துக்குப் போகின்றார்கள்.

பெரிய இமயத்தின் தென்சாரலில் பேர் பெற்ற வேறு பல க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை திருக்கேதாரம், பதரிகாசிரமம், கங்கோத்திரி, யமுனோத்திரி, அமரநாதம், பசுபதி நாதம் என்பனவாம். இவைகளுக்கு வருடந்தோறும் ஆயிரக்கணக்கான யாத்திரைவாசிகள் போய் வருகின்றார்கள். பிரயாணமும் அவ்வளவு கடினமானதன்று. இக்காலத்தில் பாதைகள் மிகவும் திருத்தப்பெற்றிருக்கின்றன. வயது சென்றவர்களுங்கூடப் பயணம் போவதைக் காணலாம்.

கயிலாய யாத்திரை ஒன்று மட்டும் இன்றைக்கும் கடினமானதாகவேயிருக்கிறது. சில வருஷங்களுக்கு முன்பு இங்குச் சென்றவர்களின் தொகை மிகமிகக் குறைவு. இரண்டு மூன்று வருடங்களுக்கொருதடவை யாரோ இரண்டொருவர் இதைப் போய்த் தரிசித்து வருவார்கள். ஆபத்துக்கு உட்பட்டு மடிந்து போவது சர்வ சாதாரணம். வட இந்தியாவில் உள்ள வயிராகிகள் இந்த யாத்திரையை மேற்கொண்டு மடிவதையே ஒரு புண்ணிய கர்மமாகக் கொண்டு சென்றார்கள். காலக்கிரமத்தில் பாதைகள் பெரிதும் செப்பனிடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு வழியின் நிலைமை மிகவும் பொருத்தமானதாயிருக்கிறது. கடக்க முடியாத அவ்வளவு கஷ்டமுடையதன்று; யாத்திரையில் சிரத்தையில்லாதவர்களும் சுலபமாகப் போகக்கூடிய சௌகரியம் வாய்க்கப் பெற்றதுமன்று. சிரமத்தைப் பொருட்படுத்தாது போகின்றவர்களுக்கு இது சாத்தியமாகும். இந்தியாவின் பல மாகாணங்களினின்றும் இப்போது சுமார் நூறு பேர் வருடந்தோறும் போகின்றனர். வங்காளத்தினின்றும் ஐக்கிய மாகாணத்தினின்றும் பெண்பாலாரும் சிலர் செல்கின்றனர். மற்ற மாகாணங்களினின்று பெண்மக்கள் போகும் வழக்கம் இன்னும் அதிகரிக்கவில்லை; இன்னும் கொஞ்ச காலத்துக்

குள் கயிலாயயாத்திரை மிகவும் பிரசித்தி பெறும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

இந்தியாவுக்குச் சிரசாயிருப்பது இமயமலை. பல்லாயிரம் வருடங்களாக இந்த நாட்டில் எண்ணப்பட்ட உயர்ந்த எண்ணங்களும் மேலான கோட்பாடுகளும் இந்த மலையினுள் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி முதல் காஷ்மீரம் வரையில் உள்ள பிரதேசங்களின் சீரிய விற்பன்னங்களுக்கெல்லாம் உறைவிடமாயிருப்பது இது. ஆங்காங்கு அவதரித்த பெரியோர் பலர் இங்குச் சென்று சிறிது காலமாவது வாசஞ் செய்ய விரும்பினர். உலகிலேயே மிகப் பெரிய மலையாகிய இது, உயர்ந்த எண்ணங்களுக்கெல்லாம் புகலிடமாய் அமைந்திருக்கிறது. இது நிலைத்திருப்பது போன்று, இந்தியாவின் நாகரிகமும் அழிவற்றிருக்கும் என்று பெரியோர்களால் கருதப்படுகிறது. கங்கை, யமுனை, சிந்து, பிரமபுத்திரா போன்ற புண்ணிய நதிகளெல்லாம் இதில் உற்பத்தியாகி இந்தியாவுக்குள் வருகின்றன. ஆக, இமயமலை இந்தியாவுக்கு ஞானசம்பந்தமான உணவை அளித்துக்கொண்டிருக்கிறது.

இமயமலைக்கு முடியாயிருப்பது கயிலாயகிரி. அதற்கு அருகில் மானச சரோவரம் என்ற ஒரு தடாகம் இருக்கிறது. அழகில் அதற்கு ஒப்பான தடாகம் வேறு எதுவும் இல்லை என்பது உலகம் முழுவதையும் சுற்றி வந்து பார்த்தவர்கள் கொள்கை. கயிலாயமும் மானச சரோவரமும் சேர்ந்து கௌரி சங்கர் என்று சொல்லப்படுகிறது. இந்த ஸ்தலம் ஹிந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் புண்ணியம் வாய்ந்தது. திபேத்தில் இருப்பவர்களெல்லாம் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். கடவுள் வழிபாடு அவர்களுக்கில்லை. முன் காலத்தில் புத்த மதம் இந்தியாவில் என்ன சீரிய நிலைமையில் இருந்ததோ, அதே நிலைமையில் இன்று அது திபேத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. புத்தமதத்தின் மேலான அம்சங்களையெல்லாம் ஹிந்து மதம் தன்னகத்து இணைத்துக்கொண்டுள்ளது என்னும் உண்மையும் திபேத்துக்குச்சென்று பார்த்தால் விளங்கும். திபேத்தில் உள்ள பௌத்தர்கள் கயிலாயகிரியின்மீதும் மானசசரோவரம் என்னும் தடாகத்தின்மீதும் கொண்டுள்ள பயபக்தி இணையற்

றன. ஹிந்துக்களோடு கூடி, அவர்கள் கயிலையைச் சிவனது உறைவிடம் என்கின்றனர். சிவபதவி என்பதும் மகாநிர்வாணம் என்பதும் அவர்களுக்கு ஒன்றே. புத்தர் பலர் கயிலையின்கண் மகாநிர்வாணம் அடைந்துள்ளனர் என்று பௌத்தர் சொல்கின்றனர். இந்தியாவினின்று கயிலைக்குப் போகின்றவர்களிடத்தில் அவர்கள் பேரன்பு பாராட்டுகின்றார்கள். ஹிந்துக்கள் தொன்று தொட்டு இந்த க்ஷேத்திரத்தைப் பயபத்தியுடன் பாராட்டி வந்திருக்கின்றார்கள். பூர்வ காலத்தில் பல மஹரிஷிகள் இப்பதியின்கண் தபசு பண்ணிக்கொண்டிருந்ததாக ஐதிகம் உண்டு. அவர்கள் தபசு புரிந்த இடங்கள் இன்றைக்கும் காண்பிக்கப்படுகின்றன. அசுரர்கள் தபசு பண்ணிய இடங்களும் இங்குக் காண்பிக்கப்படுகின்றன. இராவணனைப்பற்றிய வரலாறுகள் திபேத்தில் பல உண்டு. கயிலையை எடுத்துக்கொண்டு போவதற்காக இலங்கை வேந்தன் வந்த விதம், அவன் தவமிழைத்த தடாகம், கயிலையை எடுக்க முயன்றது ஆகியவைகள் அப்பிரதேசத்தில் பெரிதும் சொல்லப்படுகின்றன.

கடவுள் பத்தியில்லாதவர்களும் கயிலையைப் போய்ப் பார்த்தால், அது உலகில் ஓர் அற்புதமான இடம் என்பதை ஒத்துக்கொள்வார்கள். இரவும் பகலும் வேளைதோறும் அதன் தோற்றத்தில் உண்டாகும் வேறுபாடுகள், வேறுபாடுகளுக்கிடையில் அதன்கண் மாறாது மிளிரும் மகிமை, அவ்விடத்தில் உள்ள மனத்தைக்கவரும் அருட்பிழம்பு ஆகியவைகளை மானுடர் யாரும் மறுக்க முடியாது.

இமயமலையில் அல்மோரா என்னும் ஊரினின்று கயிலைக்குச் சென்று, திரும்பவும் அவ்வூர் வருதற்கு ஐந்நூறு மைலுக்குச் சற்று அதிகமாகவே இருக்கின்றது. பாதை மிக ஒடுங்கியது. வண்டி முதலியவைகள் அங்குச் செல்லா. யாத்திரைவாசிகள் நடந்தே செல்ல வேண்டும். வழி முழுதும் நடக்க இயலாதவர்கள், அல்லது ஐதிகமாக யாத்திரை பண்ண இயலாதவர்கள், சிற்சில இடங்களில் குதிரையின்மீது போகலாம். யாத்திரைகளில் இது ஒப்பற்றது. அநேகவிதமான அரிய அனுபவங்கள் இதில் உண்டாகின்றன. பார்ப்பதற்கு அரிய காட்சிகள், மீளுதற்கு அரிய ஆபத்துக்கள், செய்தற்கு அரிய தபசு ஆகியவைகள் ஒன்று கூடியது இந்த யாத்திரை.

கயிலையின் அமைப்பு :

மனிதனால் கட்டப்பட்ட கோயில் ஒன்றும் ஆங்கில்லை. ஆனால், கோயில்களுக்கெல்லாம் மாதிரியாக அது இயற்கையாகவே அமைந்திருக்கிறது. தென்முகமாக அது இந்தியாவைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. நான்கு பக்கமும் சமகோணமாய் அமைந்திருக்கும் அதன் சுற்றளவு, இருபத்தொன்பது மைல். பிராகாரம் போன்ற மலைச்சுவர், செங்குத்தாய் நிற்கின்றது. சில பாகங்களில் அது வெறுஞ்சுவராகவும், வேறு சில இடங்களில் சித்திரங்களும் உருவங்களும் அமைக்கப் பெற்றது போலவும் காணப்படுகிறது. மூடப்பட்ட வாயில் போன்றவைகளும் ஆங்காங்குத் தென்படுகின்றன. பிராகாரத்தின்மீது ஒரு பெரிய மேடையுளது. சுவர் ஐந்நூறு அடி முதல் ஆயிரம் அடி வரையில் ஒரே செங்குத்தாயிருப்பதால், மேடைக்கு யாரும் போக முடியாது. அந்த மேடையின்மீது நூற்றுக்கணக்கான சிறு மலைகள், கோபுரங்கள் போன்று அமைந்திருக்கின்றன. அவைகளுள் சித்திர வேலைப்பாடுடையவை, சாதாரணமாயிருப்பவை, சதுரமாயிருப்பவை, வட்டமாயிருப்பவை, முட்டை போன்றிருப்பவை, முக்கோணமுடையவை, தூண்போன்றிருப்பவை, ஒடுங்கிய நுனியையுடையவை, இன்னும் பல விதமான வடிவங்களையுடையவை பல; இந்தியாவில் தென்முனையிலிருந்து ஹிமயம் பரியந்தம் எத்தனை விதமான கோபுரங்கள் உளவோ, அத்தனைக்கும் மாதிரிகள் கயிலையில் உள. இன்னும் புதியதாக ஏதாவது கட்டவேண்டுமானாலும், அதற்கும் மாதிரி அங்கே கிடைக்கும். கர்ப்பகிருகம், கோயிலில் உள்ளே எட்டியிருப்பது போன்று கயிலாய சிகரம் பீடத்தின் வடபாகத்தில் இருக்கிறது. மற்றக் கோபுரங்களுக்கெல்லாம் மேலே இது ஆகாயத்தை எட்டிப் பிடித்துக்கொண்டு, சமுத்திர மட்டத்துக்கு மேல் 22,980 அடி உயரத்தில் இருக்கிறது. இதற்கு விசுவலிங்கம் என்பது பெயர். இதன் பக்கத்தில் செல்ல யாருக்கும் இயலாது. சுற்றி வலம் வருவது ஒன்றே யாத்திரிகர்களால் செய்யக்கூடியது.

இறைவனுடைய இடப் பாகம் பேர்பாதி அம்பாளுக்கு அளிக்கப்பட்டதாக ஐதிகம். கயிலையில் இத்தத்துவம் இயல்பாய் அமைந்திருக்கிறது. தக்ஷிணாமூர்த்தமாய் எழுந்தருளியிருக்கும்

விராட்டு லிங்கத்தின் இடப் பக்கம் அல்லது கீழ்த்திசையில் கௌரியின் சன்னிதியும் கௌரி குளமும் இருக்கின்றன. இக் குளத்தின் உயரம் சமுத்திர மட்டத்துக்குமேல் 18,600 அடி. இது சதாகாலமும் உறைபனியால் மூடப்படிருக்கிறது. ராஜ ராஜேஸ்வரியின் அந்தட்புரத்தில் ஓர் அழகிய நீர்நிலை கட்டுவிக் கப்பட்டது போன்றும், மற்றெவர் கண்ணுக்கும் தென்படாது பல கூடங்களினின்று அம்பிகையும் அம்பிகையின் தாதிமார்க ளும் வந்து தீர்த்தமாடிவிட்டுப் போதற்கான துறைகளும் வாயில்களும் தெய்வாதீனமாக உட்புறத்தில் அமைந்திருப்பன போலவும் இக்குளம் காட்சியளிக்கிறது. இங்கிருந்து இரண்டு ஓடைகள் உற்பத்தியாகிக் கயிலையின் இரு மருங்கிலும் ஓடிப் பிறகு ராக்ஷஸ தடாகத்தில் சங்கமமாகின்றன.

அண்ட நாயகனது அரண்மனை போன்றது கயிலை. இரு பத்தொன்பது மைல் சுற்றளவுடைய அதற்கு அகழி, பிரா காரம், கோட்டை, கொத்தளம், கோபுரம், கூடம், மாடம், கொலு மண்டபம், அந்தப்புரம் ஆகிய மனை மாட்சியனைத்தும் ஒருங்கே அமைந்திருக்கின்றன. அதன் தென்புறம் ஓரே சம வெளி பாக்கி மூன்று பக்கங்களிலும் அணியணியாக மலைகள் இருக்கின்றன. ஆனால், அவைகள் வெறு மலைபோன்று தென் படுவதில்லை. விஸ்வேசுவரன் வீற்றிருக்கும் கொலு மண்டபத் துக்கு அருகில் அவனுடைய கணங்கள் சிப்பந்திகள் முதலாயி னோர் வசிப்பதற்கான வாசஸ்தானங்களாக அவைகள் விளங்கு கின்றன. மந்திரி பிரதானியர் முதல் வெற்று ஏவலாளர் பரியந்தம் பல படித்தரங்களில் இருக்கும் லட்சக்கணக்கான பேர் களுக்கு என்னென்ன வித மாளிகைகள், உப்பரிகைகள், சாமா னியமான வீடுகள் தேவையோ, அவை யாவும் ஆங்கிருக்கின் றன. தேவலோகத்துக்கேற்ற ஓர் ஒப்பற்ற நகரம் போன்று அவைகள் காட்சியளிக்கின்றன.

கயிலையின் தென்புறத்தில் கண்ணுக்கெட்டுமளவும் ஒரே சமவெளி. அதில் நாற்பது மைலுக்கப்பால் மானச சரோவரம் இருக்கிறது 'சரோவரம்' என்பது தடாகம். அதன் பெயருக்கு ஏற்ப அது வாஸ்தவத்தில் பூலோகத்தில் உள்ள ஒரு தடாகமோ அல்லது மனோகற்பிதத்தால் அது ஒரு தடாகமாகத் தோன்று

கிறதோ எனும் சந்தேகம் வந்துவிடும். கயிலை, கௌரி குளம் ஆகிய இந்த இரண்டைப் போன்றே மானச சரோவரத்தின் பெருமையையும் படத்தின் மூலம் தெரிந்துகொள்ள முடியாது. படம் உயிரில்லா நிழல் போன்றிருக்கிறது. ஆனால், கயிலை சம் பந்தமான யாவையும் உயிர் ஓவியம் என்று இயம்ப வேண்டும். உயிர்க்கு உயிராயிருப்பது சிவம். அத்தகைய பேருயிர், நீரிலும், நிலத்திலும், மலையிலும் திரண்டு திகழ்ந்துகொண்டிருக்குமிடம் கயிலை. ஓவியம் போன்று அழகு வாய்ந்த அவ்வுலகம், உயிர் தரித்து இலங்குகின்றது. அதைக் காணுமிடத்து, சிவம் உயிர்க் குயிராயிருப்பதை நாம் உள்ளபடி உணர்கிறோம்.

மானச சரோவரத்தின் சுற்றளவு ஐம்பத்தாறு மைல். இது கிட்டத்தட்டச் சமசதுரமாயிருக்கிறது. இது கடல் போன்று பரந்தது. கடல் நீர் நீலநிறமாயிருப்பது போன்று, இது பச்சை நிறமாயிருக்கிறது. அது உப்புக்கடல், இது தெளிநீர்க் கடல். இதன் ஆழம் இருநூற்றைம்பது அடி வரையில் போகிறது என்கின்றனர். ஐம்பது அடிக்குக்கீழ் உள்ள கற்கள் தெளிவா கத் தெரிகின்றன. காலை வேளைகளில் இத்தடாகம் அமைதியுற் றிருக்கிறது; மாலையில் திரைகடல் போன்று அலை வீசுகிறது. இது சமுத்திர மட்டத்துக்கு மேல் 14,950 அடி இருப்பினும், இதன் நீர் மிகத் தட்பமானதன்று. அதற்குக் காரணம், வெந்நீர் ஊற்றுக்கள் பல இதனுள் இருக்கக்கூடும் என்று ஊகிக்கின்ற னர். தடாகத்துக்கு வெளியே வடமேற்கு மூலையில் ஒரு வெந் நீர் ஊற்று இருக்கிறது. அது தீர்த்தாபுரி ஊற்றைப்போன்று அவ்வளவு பெரியதன்று. எனினும், அதிலும் நீராடலாம். நெடுஞ்சுவர் போன்ற கரடுகள் இதன் கரையோரம் ஆங்காங்கு இருக்கின்றன. அவைகளின் உச்சியில் வெண்மைநிறமான பனிக் கட்டி; கீழே வரவரப் பலவிதமான வருணம் தீட்டிய கற்கள்; நாற்புறத்திலும் இருக்கும் மணல் மேடுகளும் எண்ணிறந்த நிறங்களுடையனவாயிருக்கின்றன. வான வில்லில் வர்ணம் அடுக்கடுக்காக இருப்பது போன்று இங்கு மணலில் பலபலவித மான வர்ணங்கள் மறையாது நிலைத்திருக்கின்றன. இரத்தினக் குவியல்களென்று இவைகளைத்தான் கவிகள் வர்ணித்தார்கள் போலும்! இத்தனை விதநிறங்களும் தாறுமாறாகக் கலந்து கிடந் தால், இவைகள் அழகற்றுப்போம். ஆனால், விஸ்வகர்மா அறிவு

உடையவன்; இன்ன வர்ணத்திற்குப் பிறகு இன்ன வர்ணம் வந்து அமைந்தால்தான் அது சோபிக்கும் என்பதை அவன் கற்றுணர்ந்தவன் போலும்! வர்ண அமைப்பைப் பற்றிய கலை ஞானத்தைக் கற்றுக்கொள்வதற்குக் கயிலாய பூமியில் எத்தனை வருடகாலம் தங்கினாலும் போதாது. அத்தனை வித வர்ணங்களுக்கெல்லாம் கீழ் தடாகத்தினுள் நீர், பசுமையான காட்சியளிக்கிறது.

வடகோடியில் தென்முகமாக வீற்றிருக்கும் கயிலை, நாற்பது மைலுக்கு அப்பால் மனோ கற்பிதத்துக்கும் எட்டாத அழகு வாய்ந்த தடாகம், இரண்டுக்கும் இடையில் இருக்கும் சமவெளியிலும் தடாகக் கரையிலும் இழைத்திருக்கும்—நவரத்தினங்களல்ல—நவகோடி ரத்தினங்களின் பொலிவு ஆகிய இவை அனைத்தையும் ஊனக்கண்ணால் பார்க்கும் போது சந்தேகம் ஒன்று வந்துவிடுகிறது; 'நாம் விழித்திருந்து இவைகளைக் காண்கிறோமா, அல்லது சொப்பனத்தில் இந்த அதிசயத்தைக் காண்கிறோமா? இது பூலோகமா, அல்லது பூலோக கைலாஸமா? அல்லது வேறு ஏதேனும் உலகுக்கு நாம் கூட்டோடு கொண்டு போகப்பட்டோமா?' என்பதுதான் அச்சந்தேகம்.

4. கப்பல் பிரயாணம்

குயின் எலிசபெத்து

[சோம. லெ. இலக்குமணச் செட்டியார், B. A.]

எனது ஆறுமாதகால ஆழிசூழ் உலகச் சுற்றுப்பிரயாணத்தில் மிகச்சிறந்ததும், உள்ளக்கிளர்ச்சியும் உவகையும் தந்ததும் எதுவெனின், ஆறு நாட்கள் அட்லாண்டிக்குப் பெருங்கடலில் குயின் எலிசபெத்துக் கப்பலில் நான் கழித்ததேயாம்.

சதாம்ப்டன் துறைமுகம்:

1948-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 30-ஆம் தேதி, தீபாவளியன்று, இரவு 7 மணிக்கு லண்டன் வாட்டர்லூ ரயில் நிலையத்துக்கு வந்தேன். குயின் எலிசபெத்துக் கப்பலில அமெரிக்காவுக்குச் செல்லும்பிரயாணிகட்கென, அக்கப்பலின் உரிமையாள

களான குனார்டு வயிட் ஸ்டார் கம்பெனியார் தனிப் 'புல் மன்'[1] ரயில் ஏற்பாடு செய்திருந்தனர். அந்த ரயிலில் 80 மைல் தொலைவிலுள்ள சதாம்ப்டன் துறைமுகத்துக்கு ஒன்றரை மணி நேரத்தில் வந்து சேர்ந்தேன்.

முறைப்படி, சுங்க அலுவலாளர்கள் சில சடங்குகள் செய்த பின், கப்பலை அடைந்தேன். இக்கப்பலின் பெருமையைப்பற்றி எவ்வளவோ கேட்டும் படித்துமிருந்தும், இதில் கால்வைத்தவுடன் எனக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாயிற்று.

இக்கப்பலின் அமைப்பு :

குயின் எலிசபெத்து உலகிற் பெரிய கப்பல். இதனுடைய எடை 83 673 டன்; அதாவது, இந்தியாவின் ஓராண்டு இறக்கு மதியில் மூன்றில் இரு பகுதி. இக்கப்பலின் நீளம், 1031 அடி; அகலம், 118 அடி; உயரம், 135 அடி முதல் 234 அடி வரையில். இக்கப்பலில் இயந்திரத்திலும் அமைப்பிலும் 50,000 டன் எடையுள்ள உலோகங்களும், ஒரு கோடி ஆணிகளும் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. இக்கப்பலைத் துறைமுகத்திற் கட்டுவதற்குப் பயன்படுத்தும் சங்கிலியின் எடை 2,000 டன்! எண்ணெயால் ஓட்டப்படும் 26 'லைவ் போட்டுகள்' (Life boats) உள்ள போட்டு டெக்கு, டென்னிஸ் விளையாடுமிடமுள்ள ஸ்போர்ட்ஸ் டெக்கு, உலாவுதற்கேற்ற சன் டெக்கு, கட்டணமின்றித் திரைப்படங்கள் காட்டும் இரண்டு தியேட்டர்களுள்ள பிராமினாட் டெக்கு, கடைகளும் பர்சரின்[2] அலுவலகங்களும் உள்ள மெயின் டெக்கு, இன்னும் A டெக்கு, B டெக்கு, C டெக்கு, D டெக்கு, R டெக்கு முதலிய 14 மாடிகளும், மின்சாரத்தால் மேலிருந்து கீழும் கீழிருந்து மேலுஞ் செல்ல உதவும் 35 (Lifts) கருவிகளும், நிழற்படம் எடுக்கும் நிலையமும் இக்கப்பலில் உள்ளன. செய்திப்படங்கள், கேலிச்சித்திரப் படங்கள், குழந்தைகளுக்கான படங்கள் இவைகளும் கப்பலிலுள்ள

---

1. 'புல்மன்' என்பது உணவுச்சாலையும் ஏனைய வசதிகள் பலவும் உள்ள இரயில். இந்த இரயில்கள் புல்மன் கம்பெனியைச் சேர்ந்தவை.

2. பர்சர் (Purser)—கப்பல் கணக்கு வைத்திருக்கும் அலுவலாளர்.

தியேட்டரில் காட்டப்பட்டன. நான் என் வாழ்நாளிலேயே, இக்கப்பலிலேதான் 6 நாட்கள் தொடர்ந்து படம் பார்த்தேன். இதன் பதினொன்கு மாடிகளிலும் நடந்தால், சென்ற வழியில் மீண்டும் செல்லாமலே 22 மைல்கள் நடக்க இயலும்! இத் துணைப் பெரிய கப்பலைக் கண்ணுற்றவுடன் நான் திகைப்புற்ற தில் வியப்பென்ன ?

கப்பலில் காணப்படும் பல விநோதங்கள் :

உலகின் எப்பகுதிக்கும் இக்கப்பலில் இருந்தவாறே வானொலித் தொலைப்பேச்சு (Radio Telephone) மூலம் பேச இயலும். 10,000 மைல்கட்கு அப்பாலுள்ள தங்கள் குடும்பத் தாரோடு இக்கப்பல் பிரயாணிகள் டெலிபோனில் பேசுவதும், தங்கள் அலுவலகங்களுடன் நடுக்கடலிலிருந்தவாறே தொடர்பு கொண்டு பெரிய வியாபாரங்களை முடிப்பதும், நாள்தோறும் நடைபெறும் விநோதங்களிற் சிலவாகும்.

'Ocean Times' என்ற தினசரிப் பத்திரிகை இக்கப்பலி லேயே அச்சிட்டு நாள்தோறும் பிரயாணிகட்கு வழங்கப்படு கிறது. இப்பத்திரிகையில் செய்திகளும், கட்டுரைகளும், விளம்பரங்களும் பகுத்தறிவுப் போட்டியும் வெளி வருகின்றன. ஆசிரியர் கருத்துக்கள் மட்டும் இப்பத்திரிகையில் இல்லை. எல்லாப் பிரயாணிகளின் பெயர்களும் அடங்கிய புத்தகம் ஒன்று, ஒவ்வொரு பிரயாணத்திலும் இக்கப்பலிலேயே அச் சிட்டுப் பிரயாணிகட்கு வழங்கப்படுகின்றது.

இங்கிலாந்தின் ஐந்து பெரும்பேங்குகளில் ஒன்றான மிட் லண்டு பேங்குக்கு இக்கப்பலில் மூன்று கிளைகள் உண்டு. டென்னிஸ் விளையாடும் இடம், உடற்பயிற்சிச்சாலை, இயந் திரமூலம் நடக்கும் குதிரைப்பந்தயம், பிற்பகல் கப்பல் வாத் தியக் குழுவின் இன்னிசை ஆகிய இவை, பொழுது போக்குக்கு உதவும் சாதனங்களிற்சில. இவை பற்றிய அறிவிப்புகள் அடங்கிய நிகழ்ச்சி நிரலை நாள்தோறும் எங்களுக்கு அச்சிட்டுத் தந்தனர்.

குயின் எலிசபெத்துக் கப்பலின் பிற சிறந்த பகுதிகளிற் குறிப்பிடத் தக்கது. அதனுள்ளிருக்கும் நூல் நிலையம் அதில் பலமொழிகளில், சில ஆயிரம் புதிய நூல்களும், பல பத்திரிகை

களும், சஞ்சிகைகளும் இருக்கின்றன. பிரயாணிகள் கடிதங்கள் எழுதுவதற்கும், புகை பிடிப்பதற்கும், சீட்டாடுவதற்கும் தனித்தனியே பல அறைகள் (Lounges) அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிட்ட நேரங்களில் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

இக்கப்பலிலுள்ள நடனசாலைகள் (Dance Halls) தனி அழகு உடையன. இக்கப்பலில் உயர்ந்தமரங்கள் தூண்களாகவும் சுவர்களாகவும் உருவெடுத்து, அழகுக்கு அழகு செய்கின்றன. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஓவியங்கள், கண்ணைக் கவரும் பலநிறப் படங்கள், யாவருக்கும் கலையின் மேம்பாட்டை உணர்த்தும் அரிய சிற்பங்கள் இவற்றின் பற்பல காட்சிகளை இக்கப்பலிற்காணலாம்.

பிரயாணிகள் குழந்தைகட்கு (அல்லது குழந்தைப்பிரயாணிகட்கு) விளையாடும் இடங்களும் பொம்மைகளும் மற்ற விளையாட்டுக் கருவிகளும் உள்ளன. லண்டன் நகரின் புகழ் பெற்ற பெரிய கடைகள் (Department Stores)[1] நான்கின் கிளைகள் இக்கப்பலில் நிறுவப்பட்டுள்ளன. இவைகளிற்புத்தகங்களும், வானொலிக் கருவிகளும், பிரயாணத்திற்கு இன்றியமையாத பொருள்களும் விற்கப்படுகின்றன.

இச்கடைகளில் பொருள்கள் வாங்கும்போது, மேனாட்டார் வரிசை முறையில் ஒருவர் பின் ஒருவராய் நின்று, ஆரவாரமின்றி வாங்கியது எனக்கு வியப்பைத் தந்தது. அவர்களுடைய கட்டுப்பாட்டுக்கு மேலும் சில எடுத்துக்காட்டுக்கள் கூறலாம்: கப்பலில் ஏறிய நாளில் முதல் பந்தியில் உணவு உட்கொண்டவர், நாள்தோறும் முதல் பந்தியிலேயே உண்பர்; அன்று இரண்டாவது பந்தியில் உண்டவர், பின்னரும் இரண்டாவத பந்தியிலேயே உண்பர்; உணவருந்த அமரும் இடத்திலும் மாறுதல் செய்யார்.

மிதக்கும் அரண்மனை :

மருத்துவர்களும் நர்சுகளும் ரணசிகிச்சை செய்யுமிடமும், பல் வைத்தியப் பகுதியும், தொத்து நோய்களைக் குணப்படுத்தக்

1. டிபார்ட்மெண்டு ஸ்டோர்ஸ் என்பன பொருளகளின பல வகைகட்குத் தனித்தனி பகுதிகள் உள்ள மிகப் பெரிய கடைகள்.

தனி அறைகளும் எக்ஸ்ரே சிகிச்சை வசதியுமுடைய பெரிய மருத்துவச் சாலையும், புது முறைகளில் முடி திருத்தும் நிலையங்களும், மின்சார உதவி கொண்டு பல வகை உணவுகளைத் தயாரிக்கும் இயந்திரங்களும், அவற்றைக் குளிர்ந்த நிலையிலும் சூடான நிலையிலும் வைத்திருக்கும் தன்மை பொருந்திய கருவிகளுள்ள உணவாக்கும் சாலையும், ஒரே காலத்தில் 850 பேர் உணவருந்தக் கூடிய இடமுள்ள 'ஏர் கண்டிஷன்' (Air-Condition) செய்யப்பட்ட மண்டபமும், குழந்தைகள் உணவருந்துவதற்கென ஒரு தனி அறையும், நீந்துங்குளங்களும், நோய் தீர்க்கும் வன்மையுடைய நீரில் குளிக்க வசதியும், ரோட்டரி கிளப்[1] கூட்டங்கள் நடக்கத் தனி இடமும் இக்கப்பலில் இருக்கின்றன. கிறித்தவர்களும் யூதர்களும் அவரவர் கடவுளை வழிபடுவதற்குத் தனி இடங்கள் உள்ளன. இரும்பாலும் எஃகாலும் ஆக்கப்பட்ட நகரம் என்றும், மிதக்கும் அரண்மனை என்றும் இக்கப்பலைப் பலர் பல பெயர்களால் புனைந்துரைத்திருப்பதில் சிறிதும் தவறு இல்லை.

மின்சாரக் கப்பல் :

இக்கப்பலிலுள்ள மின்சாரக் கம்பியின் (Electric Wire) நீளம் 4,000 மைல் என்றால், விளக்குகளின் சிறப்பை விளக்கவும் வேண்டுமோ! விளக்குகள், லிப்டுகள், டெலிபோன், 10 மைல் சுற்றளவுக்கும் கேட்கும் அபாய அறிவிப்புச் சங்கு, கப்பலின் இயந்திரம், நீராடுவதற்கு வெந்நீர்—இவை மட்டுமல்ல—கப்பலின் சமையல் வேலை முழுவதுமே மின்சாரத்தால் நடைபெறுகின்றது. பிரயாணிகட்காகப் பலடன் பாலை ஐஸ் பெட்டியில் காப்பதும் மின்சாரமே. 25,000 மக்களுள்ள ஒரு நகரத்துக்கு வேண்டுவதைக்காட்டிலும், மிகுதியான மின்சாரத்தைச் செலவிடும் குயின் எலிசபெத்தில் இரு பெரிய மின்சார நிலையங்கள் (Power Stations) இருப்பதால், இதை மின்சாரக் கப்பல் என்றும் வழங்கலாம்.

---

1. 'ரோட்டரி கிளப்' என்பது செல்வாக்குள்ள பெரிய வணிகரும் வேறுபட்ட பல துறைகளில் உயர்நிலை எய்தியவர்களும் உறுப்பினராயுள்ள குழு; இது உலகமுழுவதும் பரவியுள்ளது. இதன் உறுப்பினருக்கு 'ரோட்டரியன்' எனப் பெயருண்டு. இக்குழுவினர் பொது நன்மைக்காகப் பல பணிகள் ஆற்றுகின்றனர்.

எண்ணெயால் ஓடும் கப்பல் :

இக்கப்பலின் தண்ணீர் டாங்கும் மிகமிகப் பெரியது. இக் கப்பலின் இயந்திரத்துக்கு மணிக்கு 600 டன் தண்ணீர் வேண்டு மாம். பெரும்பாலான கப்பல்கள் நிலக்கரியால் செல்லுவனவை; ஆனால், குயின் எலிசபெத்து எண்ணெயால் ஓடும் கப்பல். 1,60,000 குதிரைப்பவருள்ள இயந்திரத்தையுடைய இக்கப்பல், பல நூறு டன்கள் எண்ணெய் கொள்ளும் டாங்கைத் தன்ன கத்தே கொண்டது.

ராடார் :

மிகுதியான மூடுபனியிலும் 50 மைல் தொலைவு வரை வழி தெளிவாகத் தெரிய உதவியளிக்கும் ராடார் (Radar) என்னும் செயற்கைக்கண் போன்ற கருவி, இக்கப்பலின் பிரயா ணத்தைத் தடைப்படுத்துவதில்லை. ராடார் என்பது, வானொ லியால் திசையறிய உதவுவது. ஆகாயத்திலுள்ள விமானங்கள் அல்லது கடலிலுள்ள கப்பல்களின் உதவியின்றியே, இது அவற்றின் திசையையும் இருப்பிடத்தையும் அறியும் ஆற்றல் வாய்ந்தது. சந்திரன், செவ்வாய் முதலிய கோளங்களுக்குச் செய்தியனுப்பிப் பதிலைப் பெறவும் ராடார் பயன் படுகிறது. வாணிகத்துக்காகப் பெருங்கடல்களில் மீன் பிடிக்கவும் ராடார் உதவுகிறது. எனவே, விஞ்ஞானத் துறையில் ராடார் கண்டு பிடிக்கப்பட்டது வியக்கத்தக்க முன்னேற்றம் என்றே கூற வேண்டும்.

கப்பலின் பெருமை :

குயின் எலிசபெத்து 850 முதல் வகுப்புப் பிரயாணிகளையும், 720 இரண்டாவது வகுப்புப் பிரயாணிகளையும், 745 மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளையும், 1200 வேலையாட்களையும் ஏற்றிக் கொள்ளுகிறது. இவ்வாறிருந்தும், இக்கப்பலுக்கு டிக்கட்டு வாங்குவதும் குதிரைக் கொம்பாய் இருக்கிறது. சில மாதங்க ளுக்கு முன்பே முயற்சி செய்தால், பெரும்பாலும் டிக்கட்டுக் கிடைத்துவிடும். ஆகாய விமானக் கட்டணத்தைக்காட்டி லும் மிகுதியான பணம் கொடுத்து இக்கப்பலின் முதல் வகுப்பு டிக்கட்டு வாங்கவேண்டியிருப்பதிலிருந்தும், இக்கப்பலில் பிர யாணம் செய்வதில் மக்களுக்குள்ள ஆர்வம் இத்தகையதென

அறியலாம், ஆறு மாதங்கட்கு முன்னரே டிக்கட்டு வாங்கிய என்னிடம், ஓராண்டுக்கு முன்பே டிக்கட்டு வாங்கியதாகச் சில நண்பர்கள் கூறிய போது, அவர்களைப் பார்த்து ஆச்சரியப்படுவதா, அல்லது அனுதாபப்படுவதா என்பது தெரியவில்லை!

இக்கப்பலின் ஒவ்வொரு பிரயாணத்திலும் புகழ் பெற்றவர் பலரைச் சந்திக்க இயலும். என்னுடன் பிரயாணஞ்செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள், கனடாநாட்டின் முன்னாள் முதல் அமைச்சர் மக்கன்சீ கிங், பிரான்ஸில் இந்தியாவின் தூதராய்த் தொண்டு செய்யும் சர்தார் எச். எஸ். மல்லிக்கு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இரு பகுதிகளின் பல உறுப்பினர் ஆகியோர். ரஷ்ய வெளி நாட்டமைச்சராயிருந்த மாலதோவ் இக்கப்பலில் தாம் சென்ற போது, சில வினாடி நேரம் இக்கப்பலை ஓட்டி மகிழ்ந்தனராம். ஒரு முறை ஒரு பிரயாணி இக்கப்பலில் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாளாம். அவள் அக்குழந்தைக்கு இக்கப்பலின் பெயரையே இட்டாளாம்.

நான் ஆறு நாட்கள் இக்கப்பலிலிருந்தும், இதன் எல்லாப் பகுதிகளையும் பார்க்க என்னால் இயலவில்லை. நல்ல வேளையாக இக்கப்பலில் ஏறியவுடன் இதைப்பற்றிய படங்களுள்ள விளக்கமான புத்தகம் ஒன்றைக் கப்பல் அதிகாரிகள் தந்தார்கள். அஃதின்றேல், கப்பலுக்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போக வழி தெரியாமல் துன்பப்பட்டிருப்பேன்.

அறைகளின் அமைப்பு :

முதல் வகுப்பு அறை ஒவ்வொன்றுக்கும் நீராடும் அறை ஒன்றும், கவலையின்றி உறங்குவதற்கான எல்லா வசதிகளும், நாற்காலிகளும், மேசைகளும், பெரிய கடிகாரம் ஒன்றும் இருக்கின்றன. அட்லாண்டிக்குப் பெருங்கடலைக் கடக்கும் போது ஏற்படும் (லண்டனுக்குப் நியூயார்க்குக்கும் உள்ள) 5 மணி நேர வேறுபாட்டைப் பல பகுதிகளாகப் பிரித்து, நாள்தோறும் சிறிது சிறிதாக மாற்றுகின்றனர். கப்பலின் இயந்திரங்களுள்ள அறையிலிருந்து நேரத்தை மாற்றியவுடன், எல்லா அறைகளிலுமுள்ள கடிகாரங்களின் நேரமும் தானே மாறும்படி மின்சாரமூலம் இவை அமைக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாம், மூன்றும் வகுப்பு அறைகளில் மேற்குறித்த வற்றினின்றும் சிறிது குறைந்த வசதிகள் உள்ளன. முதல் வகுப்பில் மட்டும் ஒவ்வொரு பிரயாணிக்கும் தனி அறை உண்டு.

கப்பலின் வேகமும் வருமானமும் :

சதாம்டனிலிருந்து நியூயார்க்கு வரையுள்ள 3088 கப்பல் மைல்களை (Knots) அதாவது ஏறக்குறைய 3500 சாதாரண மைல்களை இக்கப்பல் 4 நாள், 20 மணி, 45 நிமிட நேரத்தில் கடந்தது. அதாவது, இதனுடைய சராசரி வேகம் $26\frac{1}{2}$ கப்பல் மைல்கள், அல்லது சற்றேறக் குறைய முப்பது சாதாரண மைல்கள்.

முதல் நாள் பகல் 12 மணி முதல் மறு நாள் பகல் 12 மணி வரை கப்பல் எத்தனை மைல்கள் 'பிரயாணம் செய்திருக் கிறதென்பதும், பகல் 12 மணிக்குக் கப்பல் அட்லாண்டிக்குப் பெருங்கடலில் எந்த இடத்தில் இருந்தது என்பதும் நாள் தோறும் அறிவிப்புப் பலகையில் வெளியிடப்படும். பிரயா ணத்தில் பொழுது போவதற்காக இதை ஆதாரமாக வைத்துப் பத்துப் பிரயாணிகள் சேர்ந்துகொண்டு, 1 முதல் 0 வரை ஒவ் வொருவரும் ஓர் எண்ணை 12 மணிக்கு முன்பே சொல்லி, அன்றைய பிரயாண மைல் தொகையின் கடைசிச் சிற்றிலக்கத் துக்கு (Digit) ஒவ்வொரு ரூபாய் பந்தயம் கட்டுவர். அன்று கப்பல் 589 மைல்கள் பிரயாணம் செய்ததாக அறிவிக்கப்பட் டால், இத்தொகையின் கடைசிச் சிற்றிலக்கமாகிய 9 என்ற எண்ணைக் குறிப்பிட்டவர் 10 ரூபாய்களையும் பெறுவார் !

இக்கப்பல் லண்டனிலிருந்து அமெரிக்காவுக்குப் போய்த் திரும்பும் ஒவ்வொரு முறையிலும் 13,00,000 டாலர்களை இங்கி லாந்துக்குச் சேகரித்துத் தருகிறது.

ஆபத்துக்காலத்தில் உதவி :

'கப்பலுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால், பிரயாணிகள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் ? எந்த வழியாக வெளி யேற வேண்டும் ? நீரில் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள 'லைப்- பெல்டு' என்ற கருவியை எவ்வாறு உடலில் அணிய வேண்டும்?' என்பவைகளைப் பிரயாணிகட்கு அறிவிக்க எல்லாக் கப்பல்களி

லும் வாரம் ஒரு முறையாவது பயிற்சி (Drill) நடத்தவேண்டு மென்பது கப்பல் சட்டங்களில் ஒன்று. இக்கப்பலின் மாலுமி கள் இப்பயிற்சியை இரண்டு நாட்களில் நிகழ்த்தி, எல்லாவற் றையும் விளக்கமாகக் கூறி, ஒத்திகையைச் செவ்வையாக நடத் திககாட்டினார்கள்.

வானொலி நிலையம்:

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் நடைபெறும் வானொலி நிகழ்ச்சிகளை இக்கப்பலில் அஞ்சல் செய்கின்றனர். இக்கப்பலில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அந்நாடுகளின் வானொலி நிலையங்கள் அஞ்சல் செய்யவும் தக்கபடி இக்கப்பலில் வானொலி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

கப்பலின் பெயர்க்காரணம்:

புகழ் பெற்ற கப்பல்களுக்கு அவ்வந்நாட்டுப் பெரியார் களின் பெயரிடுதல் மரபு. அமெரிக்கர் தம் கப்பல் ஒன்றுக்கு ரூஸ்வெல்டு என்றும், மற்றொன்றுக்கு வாஷிங்டன் என்றும் பெயரிட்டுள்ளனர். கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம் பரம் பிள்ளை பெயரால், 1949 பிப்பிரவரியில் நம் நாட்டில் ஒரு கப்பல் மிதக்க விடப்பட்டதை நாம் அறிவோம். இங்கி லாந்தின் மிகப் பெரிய கப்பலாகிய குயின் எலிசபெத்துக்கு அந்நாட்டு அரசியின் பெயரே சூட்டப்பட்டிருக்கிறது.

கப்பல் கம்பெனி:

இக்கப்பல் குனர்டு வயிட் ஸ்டார் என்னும் ஆங்கிலக் கப்பல் கம்பெனியாரைச் சேர்ந்தது. இங்கிலாந்தின் பெரிய கப் பல்களான குயின் மேரி, அக்விட்டேனியா, மாரடேனி யா, கரோனியா, பிரிட்டானிக்கு என்பனவும் இப்புகழ் பெற்ற கம்பெனியைச் சேர்ந்தவையே. இவற்றுள் குயின் மேரி 81,235 டன் நிறையும், மற்றக் கப்பல்களுள் ஒவ்வொன் றும் 28,000 டன்னுக்கு மேற்பட்ட நிறையும் உடையவை.

கப்பல் கட்டப்பட்ட வரலாறு:

இக்கப்பல் கட்டப்பட்ட வரலாற்றை அறிவதும் இன்றிய மையாததாம். 7,000 ஒத்திகைகட்குப்பின் 2,000 சன்னல் கள் உள்ள இக்கப்பலின் அமைப்பு முடிவு செய்யப்பட்டது.

இதன் மிகப் பெரிய உருவை முன்னிட்டு இக்கப்பலைக் கட்டிய ஜான் பிரவுன் கம்பெனியார், கப்பல் கட்டும் தளமாகிய கிளைடு என்னும் ஆற்றையே அகலப்படுத்தி ஆழமாக்கினார்களாம்.

1936 டிசம்பரில் இக்கப்பல் கட்டும் வேலை தொடங்கிற்று. 1938 செப்டெம்பர் 27ல் மாட்சிமை தங்கிய எலிசபெத்து அரசியார் இக்கப்பலுக்குத் தம் பெயரிட்டு இதை மிதக்க விட்டனர்.

போர்த்தொண்டு :

1939ல் போர் தொடங்கியதும், இக்கப்பலும் தக்கபடி மாற்றி அமைக்கப்பட்டுப் போரில் நல்ல தொண்டு செய்தது. இஃது அந்த ஆறு ஆண்டுகளிலும், 8,11,000 போர் வீரர்களை மறைவாகப் பல இடங்களுக்குக் கொண்டு போக 5,00,000 மைல்கள் பிரயாணம் செய்தது. இக்கப்பலை மூழ்கச் செய்யும் ஜெர்மன் நீர் மூழ்கிக்கப்பலின் (U. Boat) மாலுமிகளுக்கு 10,00,000 ரூபாய் பரிசு அளிப்பதாக ஹிட்லர் வாக்குறுதி கொடுத்திருந்தாராம்.

போர் முடிந்ததும் மீண்டும் உல்லாசக் கப்பலாகத் திருத்தி அமைக்கப்பட்டு, 1946 முதல் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இக்கப்பல் ஓடிக்கொண்டிருக்கிறது.

வருத்தமும் மகிழ்ச்சியும் :

மிகப் பெரிய உருவமுள்ள கப்பலாயிருந்தமையால், இது செல்லும்போது மெல்லச் சென்றதாகவே எனக்குத் தோன்றிற்று. ஒருவருக்கும் சோர்வு தோன்றவில்லை. ஆறும் நாள் கப்பலை விட்டு இறங்க வேண்டிய நேரம் வந்த போது வருத்தப் படாதவர் யாரும் இல்லை. ஆனால், ஹட்ஸன் ஆற்றின் இரு மருங்குகளிலும் கப்பல்களும், இடையே சுதந்தரச்சிலையும், அவற்றிற்குப் பின்னே வானளாவும் கட்டடங்களுமுள்ள நியூயார்க்கு நகரமென்று வழங்கப்படும் இந்திரலோகம் (இயந்திர லோகம்) எதிரே தெரிந்த போது, அதைப்பார்க்கவும், அமெரிக்காவின் சுதந்தர மண்ணை மிதிக்கவும் விரும்பாதாரும் இருக்க முடியுமா?

சிறந்த நினைவுச் சின்னம் :

குயின் எலிசபெத்து ஒரு கப்பல் மட்டுமன்று ; சூரியன் மறைதல் இல்லாத பேரரசை ஏற்படுத்தியதற்கும், இரு பெரும் போர்களிலும் இங்கிலாந்து முடிவில் வெற்றி அடைந்ததற்கும் முதற்காரணமான இங்கிலாந்தின் கடற்படை வன்மைக்கு ஒரு சின்னமுமாகும்.

அட்லாண்டிக்குப் பெருங்கடலின் இரு கரைகளிலும் உள்ள ஆங்கிலம் பேசும் நாடுகளாகிய இங்கிலாந்து, அமெரிக்கா இரண்டையும் இணைக்கும் உறவுகளில் குயின் எலிசபெத்து மிகச்சிறந்த தொன்றாகும். கடலை வெல்ல மக்கள் கொண்டுள்ள உறுதிக்கு எடுத்துக்காட்டாக இக்கப்பல் மிளிர்கின்றது. கப்பல் கட்டுவதில் ஆங்கிலேயரின் மேன்மைக்கும் குயின் எலிசபெத்து, தக்கதொரு சான்றாகும். தம் அரசகுடும்பத்தாரிடம் ஆங்கிலேய மக்களுக்கு உள்ள உண்மையான அன்புக்கும் இக்கப்பலின் பெயர் ஓர் அடையாளமாய் விளங்குகின்றது.

5. ஔவையாரும் அதியமானும்

[ஆ. கார்மேகக் கோன்]

வடவேங்கடம், தென்குமரி என்னும் இவ்வெல்லைக்குட்பட்ட தமிழ் வழங்கும் உலகத்தின் ஒரு பகுதியாய் விளங்கிய சேரநாட்டில் தமிழ்ப்பழங்குடியாகிய பாணர் குடியிலே ஔவையார் என்னும் இந்நல்லிசைப் புலமை மெல்லியலார், பன்னூற்றாண்டுகட்கு முன்னர்த் தமிழகம் தழைக்கத் தோன்றினார்.

அந்நாளில் நம் தமிழ் மொழி மறுவற்ற மதிபோலத் தன்னொளி பரப்பி நன்னிலையுற்று விளங்கிற்று. தமிழ் நாடோ, ஒரு நாட்டின் அறிவு, செல்வம், கல்வி, நாகரிகம் முதலியவற்றின் வளர்ச்சிக்கு அந்நாட்டுப் பெண்டிரின் அறிவே கருவியாமென்ற நுண்மையை நன்கறிந்ததாகலான், 'ஆடவர் பெண்டிர் என்ற வடிவு வேற்றுமையினாலே இரு திறத்தாருள்ளும் உயர்வு தாழ்வு என்பதில்லை; அறிவு வேற்றுமையே இருவருள்ளும் கருதற்பாலதாம்' எனக் கொண்டு, ஆடவர் பெண்டிர் என்ற

இரு பாலார்க்கும் வேற்றுமையின்றி ஒரே தன்மையான அறிவைக் கொடுப்பதற்கு உடன்பட்டிருந்தது. அதனால், அந் நாடு, ஆண் பெண் என்ற பால் வேறுபாட்டை அறவே நீக்கி, விழுமிய கல்வியறிவை வேண்டுவோர்க்கெல்லாம் விழைந்து கொடுத்தது : பிறப்பில் இழிபு கருதாது, கடைநிலத்தோராயி னும் கற்றறிந்தவர்களைத் தலை நிலத்து வைத்து மகிழ்வு பூத் தது ; குடியிலும், தொழிலிலும், கோட்பாட்டிலும் பல் திறப் பட்ட நன்மக்களும் பகைமையின்றி ஒருங்கு குழுமித் தழுவி மகிழ இருந்தது ; இத்தன்மையெல்லாம் நம தண்டமிழ் நாடு கொண்டிருந்தமையினால், குறவர் மறவர் குயவர் பாணர்களது குடியினுள்ளும், அரசர் மரபினுள்ளும், குற மகள், இளவெயினி, காவற்பெண்டு, வெண்ணிக் குயத்தி, ஆதிமந்தியார், பாரி மகளிர், பூதப்பாண்டியன் தேவியார், வெள்ளி வீதியார், நப்பசலையார், நக்கண்ணை யார், பொன் முடியார் முதலிய பல நல்லிசைப் புலமை மெல்லியலார் தோன்றி, நம் தமிழ் நாட்டினுக்கு என்றும் பொன்றாப் புகழை நல்கினர். அக்காலத்து இந்நாட்டின் இவ்வியல்பால், நம் ஔவையார் தடையின்றி இளமையிலேயே இயற்றமிழ்க் கல்வியையும், தம் குடிக்குரிய இசை நாடகக் கலைகளையும் நன்கு பயின்று, தேர்ச்சியுற்று, நல்லிசைப் புலமை மெல்லியர் தலைவியராயும், விறல்பட ஆடும் விறலியராயும் விளக்கமுற்றிருந்தார்.

இங்ஙனமிருந்து இவர், தம் குல வாழ்க்கையாகிய பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டு, நம் தமிழகத்தில் நியாயமும் தியா கமும் வீரமுமிக்க திருவுடைய மன்னர் அவைக்களந்தோறுஞ் சென்று, தம் புலமைத் திறலையும், ஆடல் பாடல்களின் விறலை யும் வெளிப்படுத்தி, அவர்கள் மனமுவந்தளிக்கும் பெருஞ் செல்வங்களைப் பெற்று, வாழ்ந்து வருவாராயினர்.

இவர் காலத்தில் சேரநாட்டின் ஒரு பகுதிக்கண் விளங் கிய தகடூர் என்னும் ஊரில் அதியமான் நெடுமானஞ்சி என்னும் ஓர் அரசன் அரசு செய்திருந்தனன். அவன் சேரர்க்கு உறவினன் ; கடையெழு வள்ளல்களுள் ஒருவன் ; வீரமிகுந்த வன் ; மழவர் என்னும் ஒரு வகை வீரர்கள் அடங்கிய

படையை உடையவன். அவன் இவ்விதச் சிறப்புக்களோடு வண்மையும் மிகுந்தவனாய் விளங்குவதையறிந்த ஔவையார், அவனிடத்துப் பரிசில் பெறக் கருதி, அவனது தகடூரை அடைந்து, அவனைப் புகழ்ந்து பாடினர். அவ்வரசன் இவர்மீது பேரன்பு காட்டி உபசரித்தானாயினும், 'இப்போதே பரிசில் அளித்தால் இவர் அகன்றுவிடுவாராகையால், இவரைப் பிரிய நேரிடும்,' எனக் கருதிப் பரிசில் அளியாது, சில நாள் தாழ்த்திருந்தனன். ஔவையாரும் சின்னாள் அவனது அரண்மனைக்கண் தங்கியிருந்தவர், அவன் பின்னரும் பரிசிலளியாது நீட்டிப்பது கண்டு சினமிகுந்து, அவனை நேரிற்பார்ப்பதற்கும் விரும்பாது, அவன் வாயிற்காவலாளனிடத்துச் சில கூறிவிட்டுச் செல்லக் கருதினார். அதனால், காவலாளனை நோக்கி, "வாயில் காப்போய், வாயில் காப்போய், கொடையுடையோரது செவியிடத்துப் பொருள் விளங்கும் சொற்களாகிய விதையை விதைத்துத் தாம் நினைந்த பரிசிலாகிய தானியத்தை விளைவிக்கும் மனவலியுடையவர்களும், பெருமை பெறுதற்கே வருந்துகின்றவர்களுமான பரிசில் வாழ்க்கையுடைய புலவர்க்கு அடைக்காத சிறந்த வாயிலைக் காப்போய், குரிசிலாகிய நெடுமானஞ்சி, தன் தரம் இத்தன்மையது என்று அறியானோ? அதனை அறியாவிடினும், எம் தரத்தையேனும் அறியான்கொல்லோ? அறிவும் புகழுமுடையோர் அனைவரும் இறந்தொழிந்தாராக, இவ்வுலகம் வறிய இடத்தையுடையதாகிவிடவில்லையே! ஆகலான், இப்போதே புறப்படுகின்றோம்! எமது யாழ் முதலான கருவிகளை மூட்டையாகக் கட்டித் தூக்கிச் செல்கின்றோம்; இவனன்றி எமக்கு இல்லையோ இடம்? எத்திசைச் செல்லினும், அத்திசையில் எம்மை அன்போடு உபசரித்துச் சோறிடுவார் பலருளர்; இதனை நும் அரசனுக்குக் கூறிவிடுவாயாக," என முனிவுடன் மொழிந்து, அறிவும் புகழும் உடைய கொடையாரிடத்துப் பரிசில் பெறுதற்கு விரைந்தெழுந்தார்.

இங்ஙனம் இவர் சினந்து கூறிச் செல்லுதலை வாயில் காப்போனால் அறிந்த அதியமான் அஞ்சி, இவர் முனிவுக்கு அஞ்சி, விரைந்து வந்து, இவரைக் கண்டு, இவர் கொண்ட கோபந் தணிய வேண்டி நின்று, தனது கொடைமன்றத்துக்கு அழைத்துச் சென்று, வீற்றிருக்கச் செய்து, வரிசை மிக்க பரிசில் அள

வின்றி அளித்து, உணவிற்கு செல்லும் சிறந்த ஆடைகள் பலவும் கொடுத்து உபசரித்தான். உடனே ஔவையார் உவந்து, 'இத்தகைய வண்மையாளனைப் பரிசில் நீட்டித்தானென்று முனிந்தோமே!' என்று மிக வருந்தித் தம் மனத்தோடு கூறுபவராய், 'அதியமான், ஒரு நாளல்ல, இரு நாளல்ல, பல நாளும் பலரோடும் செல்லினும், முதல் நாள் கண்ட போது கொண்ட அன்பிற் சிறிதுங் குறையாத அன்பையே உடையான்; இவன் பரிசில் நீட்டிப்பினும், நீட்டியாதொழியினும், யானை கையில் எடுத்த கவளம் வாயினுட் செல்லுதல் தவறாதது போல, இவன் நமக்குப் பரிசில் தருதல் தப்பாது," என்று, அவன் பழகியோரிடத்து என்றும் ஒரு தன்மையாகக் கொள்ளும் அன்பையும் அருமையையும் மிகுத்துக் கூறி, வண்மையை வாழ்த்திப் புகழ்ந்து, அவனது மனையின்கண்ணே தங்கியிருந்தனர்.

இங்ஙனம் இருக்குங்கால் ஒரு நாள் அதியமான் ஒரு மலைப் பக்கத்துக்குச் சென்றிருந்தவன், அம்மலையின் பிளவிலிருந்த ஒரு கருநெல்லி மரத்திற் பழுத்து விளங்கிய கனியொன்றைக்கண்டு அதனை அரிதின் முயன்று பெற்றான். அவன், அதனை உண்டவர் நெடுங்காலம் உயிர் வாழ்வார் என்றறிந்தும், அக்கனியைத் தானுண்டு உயிர் வாழ்வதினும், தமது நாவன்மையால் சீரிய பாக்கள் இயற்றி உலகை இன்புறுத்தும் ஔவையார்க்கீதலே சாலப்பயனுடையதெனக் கருதி, அக்கனியின் பெருமையைக் கூறாமலே புலவர்க்குக் கொடுத்து, உண்ணும்படி செய்தான். உண்ட ஔவைப்பிராட்டியார், பின்னர்க் கனியின் விசேடத்தை உணர்ந்து, அதியமான் தன்னினும் தம்மையே மேம்பட மதித்துத் தாம் சாவாது நெடுங்காலம் வாழ்ந்திருக்கக் கருதியதற்கு வியந்து, அவனை நோக்கி, "வீரச் செல்வமுடைய அதிடர் கோமானே, பெரிய மலையுச்சியிற்பெற்ற அமிழ்தமான இனிய நெல்லிக்கனி பெறுதற்கரியது என்று கருதாமலும் அதன் பயனை வெளிப்படக் கூறாமலும் மறைத்துச் சாதல் நீங்க எமக்கு அளித்தாயாதலால், நீ சந்திர மவுலியும் நீல கண்டனுமாகிய சிவ பெருமான் நஞ்சையுண்டும் நிலை பெற்றிருப்பது போல, நெடுங்காலம் நிலைபெற்று வாழ்வாயாக!" என்ற கருத்தமைத்து, ஒரு செய்யுளைப் பாடி வாழ்த்தினார். பின்பு அவனுக்கு உயிர்த் துணையாய்ச் சிறந்து, அஞ்சியுடனிருந்து அவனது

அருள், அன்பு, வீரம், தியாகம், நியாயம் முதலிய குணங்களைப் புகழ்ந்து அவ்வப்போது பல கவிகள் பாடி அவனை மகிழ்வித்து வந்தனர்.

ஔவையார் அதியமானுடன் இங்ஙனம் அமர்ந்து வரும் நாளில், காஞ்சிமா நகரத்தை ஆண்டுகொண்டிருந்தவனாகிய தொண்டைமான் என்னும் அரசன், தனக்குள்ள படை வலி காரணமாக அதியமானைத் தன்னினும் மெலியவனெனக் கருதி, அவனோடு போர் செய்யச் சமயம் நோக்கியிருந்தான். இதனை உணர்ந்த அதியமான், தன் ஆற்றலையும், சிறப்பினையும், அஞ்சாமையையும் தூது மூலம் தொண்டைமானுக்கு அறிவித்தற்குக் கருதியவன், 'இவ்வருப்பெருஞ்செயலுக்குத் தக்கவர், நாவன்மையும், பாவன்மையும், அரசியலறிவும் மிக்க ஔவையாரே,' எனத் துணிந்து, அவரை அவனிடத்துத் தூது செல்ல வேண்டினன். ஔவையாரும் அவ்வரசியற்பெருங்காரியத்தைப் பின்னிடைவின்றி ஏற்றுக்கொண்டு, புறப்பட்டுப்போய்க் காஞ்சிமா நகரடைந்து, தொண்டைமானைக் கண்டார். அவனும் புலவராயும் தூதராயும் வந்த ஔவையாரை முகமன் உரைத்து உபசரித்தான். ஔவையார் அவனது அரண்மனைக்கண் அன்று உண்டியருந்தி இளைப்பாறித் தங்கியிருந்தனர்.

பின்னர்த் தொண்டைமான் தனது அரண்மனைக் காட்சியைப் பகையரசனாகிய அதியமானிடத்திருந்து வந்த ஔவையாருக்குக் காண்பிப்பான் போலத் தன் படைமிகுதியையும் பேராற்றலையும் உணர்த்த நினைந்து, இவரை அழைத்துச் சென்று பல இடங்களையும் காட்டி வந்தவன், தனது ஆயுதச்சாலைக்கு அழைத்து வந்து, அங்கு நெய் பூசி உறையிட்டு அலங்கரித்து அணி அணியாய் வைத்திருக்கும் ஆயுதங்களையெல்லாம் காட்டி நின்றான். ஒருவர் மனத்தது அறிந்து பாடும் ஆற்றல் வாய்ந்த ஔவைப் பிராட்டியாருக்கு அவனது உட்கிடையை அறிதல் அரியதாமோ? இவர் படைக்கலங்களைப் பார்த்து, அவனுக்குச் செருக்கடங்க அறிவு கொளுத்த நினைந்து சில கூறுபவராய், "இப்படைக் கருவிகளெல்லாம் போரில் பயன்படாமையால் மயிற்பீலி அணியப்பட்டு, மாலை சூட்டப்பட்டு, திரண்ட காப்பு திருத்தி, நெய் பூசி, காவலையுடைய அரண்மனைக்கண் வீணே

இருக்கின்றன ; தான் பெற்ற செல்வத்தைப் பல்லோர்க்கும் பகுத்துண்ணும் வண்மையுடைய எம் அதியமான் ஆயுதங்கள், பன்முறை போரில் பகைவரைக் குத்துதலான் கங்கும் நுனியும் முரிந்து, செப்பனிடக் கொல்லனது பணிக்களரியாகிய சிறிய கொட்டிலை அடைந்திருக்கின்றன," என்ற கருத்தையமைத்து, ஒரு பாட்டினைப் பாடி, அவனது படைக்கலத்தைப் புகழ்பவர் போல இகழ்ந்தும், அதியமான் படைக்கலத்தைப் பழிப்பவர் போலப் புகழ்ந்தும், குறிப்பால் தொண்டைமான் வீரத்தினும் தம் அதியமான் வீரமே சிறந்ததெனக் காட்டினர். அவ்வளவில் தொண்டையர் கோன் ஔவையாரை நோக்கி, "அம்மையீர், அப்படியாயின், நும் நாட்டுள் என்னோடு போர் செய்யும் வலிமையுடையாருமுளரோ ?" என வினவினான். அதற்கு அவர், "வேந்தே, நீ போர் செய்யக் கருதுவையாயின், எம்முடைய நாட்டின்கண் அடிக்குங் கோலுக்கு அஞ்சாது எதிர் மண்டும் பாம்பு போன்ற இளைய வலிய வீரருளர் ; அவரேயுமன்றி, மன்றின்கண் தூங்கும் மத்தளவாத்தியத்தின் காற்றடித்தலால் எழுந்த ஓசையைக் கேட்டாலே அது போர்ப்பறை என்று கருதி மகிழும் போர் விருப்புடைய எம்முடைய தலைவனும் உளன்," என்று அதியமானது போர் விருப்பத்தையும் அஞ்சாமையையும் எடுத்துக் கூறித் தொண்டைமானது தருக்கை அடக்கிவிட்டுத் தகடூர் வந்து சேர்ந்தார்.

இவர் காஞ்சிக்குத் தூதுபோய் மீண்ட சின்னாட்களுக்குப் பின்னர், திருக்கோவலூர் அரசனாகிய மலையமான் திருமுடிக் காரி என்பான், பல வேற்றரசர்களைப் போரில் வென்று அடக்கி, வெற்றி மிகுந்து, தனக்கு நிகராவார் ஒருவருமிலரென்று பெருமிதங்கொண்டிருந்தான், இதனை அறிந்த அதியமான், அவனது ஆற்றலை அடக்கித் தன் புகழை மேம்படுத்தக் கருதி, அவனோடு பகைமை கொண்டு, நால்வகைப் பெரும்படையோடும் போய், மலையமானது கோவலூர் மதிலை வளைத்தனன் ; கோவலூர் அரசனாகிய காரியும் காரிக் குதிரை ஊர்ந்து படையுடன் வந்தெதிர்த்தக் கடும்போர் புரிந்தனன். அதியமான் தனது வேலாலும், வாளாலும், ஆளாலும், கரியாலும், பரியாலும் காரியின் படையை முரியடித்துப் பெருஞ் சமர் நிகழ்த்தினான். அவ்வமயம் அதியமானுடன் போர்க்களஞ்

சென்றிருந்த ஔவையார், காரி, அதியமான் அஞ்சியின் போர் வெல்லுந் திறத்தையறியாளுய் வந்து பொருதலால், பல உயிர்கள் மடிவதற்கிரங்கி, அவனுக்கு அதியமானின் ஆற்றலை அறிவுறுத்திப் பணிந்து போகுமாறு கூறிப் போரை ஒழித்தற்குக் கருத்துக் கொண்டார். மலையமானையும் அவன் துணை வீரர்களையும் நோக்கி, "அதியமான் போர் செய்தற்கு நின்ற இடத்தினின்று பெயர்ந்து உலாவி உறையினின்றும் உருவிய வாட்கள் பகைவரது உடம்பின் தசையின் கண்ணே முழுகிப் பதிந்து கதுவாய் போய் வடிவிழந்தன: அவன் வேல்கள் குறும்பரின் அரண்களை வென்று, அவர்களது நாட்டை அழித்தலால், காம்பும் ஆணியும் அசைந்துகெட்டன; அவன் களிறுகள் கணைய மரத்தால் தடுக்கப்பட்ட கதவைப் பொருது பகைவரது அரணை அழித்தலால், பெரிய தந்தங்களிற்கட்டிய பூண்கள் கழன்றன; அவன் குதிரைகள் போர்க்களத்திற் பொருத வீரர்களது மார்பு உருவழியும்படி ஓடி உழக்குதலால், இரத்தக்கறை பட்ட குளம்புகளையுடையவாயின; அதியமானோ, நிலவுலகம் அடங்காத படையையும், கழல் வடிவாகவும் கிண்ணி வடிவாகவுஞ் செய்த செறித்த அம்புகள் துளைத்த கேடயத்தையுமுடையவன்; போர்க்களத்தில் அவனாற் கோபிக்கப்பட்டோர் பிழைத்தல் எங்கேயுளது? நெல் வளமிக்க உங்களுடைய ஊர்கள் உங்கட்கு உரியனவாக விரும்புவீர்களாயின், அவனுக்குத் திறை கொடுத்தல் வேண்டும்; அங்ஙனம் நீங்கள் கொடுக்க மறுப்பீர்களாயின், அவ்வுரிமையை நீங்கள் அடைய அவன் உடன்படுவானல்லன்; அவனது போர்த் திறத்தை நான் உள்ளவாறு சொல்லியும் நீங்கள் அதனை அறியீர்களாயின், உங்கள் மனைவியரை நீங்கள் பிரிதல் வியப்பன்று. ஆகையால், அதனை ஆராய்ந்து போர் செய்மின். எங்கள் வீரன், நாளொன்றுக்கு எட்டுத் தேரைச் செய்யுங் கைவன்மையுடைய தச்சன் ஒரு மாதகாலம் ஆராய்ந்து செய்யப்பட்ட ஒரு தேர் உருளையை ஒத்த விரைவும் வன்மையுமுடையவன்," என்று அதியமானது ஆற்றலையெல்லாம் எடுத்துரைத்தார். இங்ஙனம் இவர் உரைத்தும், மலையமான் வென்றியில் மிக்க வேட்கையுடையவனாதலின், தன்னுயிர்க்கும் பிறவுயிர்க்கும் இரங்காது எதிர் நின்று

போர் செய்து இறுதியில் அதியமான் அஞ்சிக்கு அஞ்சிப் புறங் கொடுத்தோடினான். அவனுடைய படைகளும் நிலை கலங்கிக் கலைந்தன. கோவலூர், அதியமானது ஆட்சிக்குட்பட்டது. அவனது போர் வெற்றியைக் கண்ட பரணர் என்னும் புலவர் பெருந்தகையும் ஔவையாரும் வியந்து அவனைப் புகழ்ந்தனர்.

இங்ஙனம் அவ்வதியமான், கோவலூரை வென்று கைக் கொண்டபின்னர் ஔவையாருடன் மீண்டு தகடூர் புகுமளவில் அவ்வமயத்து நீண்ட நாளாக மகப்பேறில்லாமலிருந்த தனக்குத் தவமகன் பிறந்திருக்கிறானென்று தெரிந்து, புதல்வன் பிறந்தவுடன் புதல்வன் முகத்தைத் தந்தை பார்த்து மகிழ வேண்டுமென்பது அறநூல் விதியாகலின், தான் பூண்ட போர்க் கோலத்தைக் களையாமலே விரைவிற்போய் மகன் முகத்தைக்கண்ணுற்றான். உடனிருந்த ஔவையார், அப்போது அத்தன்மையை, "கையின்கண் உள்ளது வேலே; காலின்கண் உள்ளது வீரக்கழல்; உடம்பின்கண் உள்ளது வியர்வை; கழுத்தின்கண்ணது பகைவர் படை பாய்ந்த ஈரம் புலராத பசிய புண்; பகைவரை வெகுண்டு பார்த்த கண், தவ மகனைக் கண்டும் சிவப்பு நீங்கினதில்லை; ஆதலால், இவன் சோபத்துக்காளான பகைவர் பிழைத்தலுமுண்டோ!" என வியந்து, அதியமானது வீரத்தைப் புனைந்துரைத்தார்.

இவர்கள் செய்தி இங்ஙனமாக, அதியமானஞ்சியால் வெல்லப்பட்டுத் தனது கோவலூரை இழந்த மலையமான், இழந்த ஊரை எவ்வாற்றாலேனும் மீண்டும் பெறக் கருதி, அதற்குத் துணை தேடி, முன்பு பல முறையும் போரில் தன்னைத் துணையாகப் பெற்றவனும் சிறந்த வீரனுமாகிய சேரமான் பெருஞ்சேரலிரும்பொறை என்னும் அரசனை அடைந்து, தனக்கு உதவி புரியுமாறு வேண்டினன். அவன் தன் நண்பனாகிய அவனுக்குத் துணை செய்ய ஒருப்பட்டுப் பெரும்படையோடு புறப்பட்டவன், வல்வில் ஓரி என்னும் வள்ளலுக்குரிய வளமிக்க கொல்லி மலையை முதற்கண் பொருது கைப்பற்ற வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டான். மலையமான் அதற்கிசைய, இருவரும் கூடிக் கொல்லி மலையை முற்றுகையிட்ட

னர். அவ்வமயம் ஓரி, மலையமானுக்குப் பகைவனாகிய அதியமான் நெடுமானஞ்சியைத் தனக்குத் துணையாக உதவும்படி வேண்டினான். அதியமான் தன்மீது படையெடுக்கக்கருதியிருக்கும் பெருஞ்சேரலிரும்பொறையையும், மலையமானையும் வலி தொலைப்பதற்கு இதுவே நல்ல தருணமென நினைத்து, தன் நட்பரசராகிய சோழனையும் பாண்டியனையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு, ஓரியின் கொல்லிக்கூற்றத்துக்கு வந்து, ஓரியுடன் சேர்ந்து, சேரமானோடும் மலையமானோடும் பெரும்போர் புரிந்தான். அப்போரில் பெருஞ்சேரல், அதியமானையும் சோழ பாண்டியரையும் வென்றோட்டி, அவர்தம் முரசுங்குடையுங் கவர்ந்து, ஓரியைக் கொன்று, கொல்லி மலையைக் கைப்பற்றிக் கொண்டான். அதியமான் தனது தகடூர்ப் போரில் மதிலினுள் மறைந்திருந்தான்; மலையமானும், பெருஞ்சேரலும் தகடூர்மேற் படையை நடாத்தி மதிலை வளைத்தனர். அதியமான் மதிலுள்ளிருந்து வெளி வந்து எதிர்த்துப் போர் செய்யாதிருந்தனன்.[1] பகைவர் மதிலினை வளைத்தலையும் அதியமான் வாளா இருத்தலையுங் கண்ட ஔவையார், அதியமானுக்கு அவனது ஆற்றலை எடுத்துக்காட்டிப் போரில் மனஞ்செல்ல ஊக்கமூட்டுவதற்குக் கருதி, அவனை அணுகி, "மலைச்சாரலிலுள்ள புலியானது சீறுமிடத்து, அதற்கு எதிர் நிற்க வல்ல மான் கூட்டமும் உளவோ? சூரிய மண்டலம் கொதித்து எழுமாயின், ஆகாயத்தினும், திசையின்கண்ணும் இருளுமுளதோ? அவை போல நீ போர்க்களம் புகுந்தால், இவ்வுலகத்தில் உனது நாட்டைக் கவர்ந்து ஆரவாரிக்கும் வீரரும் உளரோ?" என்று கூறினார்.

இது கேட்ட அஞ்சி, வீரங்கொண்டு போர் விருப்புற்று அஞ்சாது பகைவரை ஓட்டுதற்கு மதிற்புறத்துப் போர்க்களம் புகுந்து, பகைவர் வேல் வரினும் விழித்த கண் இமையாது வீரதீரமோடு போர் உடற்றினான். அப்போது பகைவர் விடுத்த படைகள் பல அதியமானது மார்பினும், கழுத்தினும், முகத்தினும் பட்டுப் புண்படுத்தின; அவ்வமயத்தும் ஔவையார்

---

1. "ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர் செல்லாது தன் மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின், அஃது உழிஞையில் அடங்கும்; அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதியமான் இருந்ததாம்" (தொல்-பொரு. 62 சூ. உரை. நச்.)

அதியமான் முன் சென்று, "பெருந்தகாய், பெருஞ்சமர் புரிந்து நீ விழுப்புண் பட்டபடியால், உன்னோடு எதிர்த்த அரசர் பலர், தங்களுக்கு யுத்தத்தில் இறவாமையால் உளதாகும் குற்றம் நீங்கும்படி இப்போது உன் வாட்போரில் மாண்டனர். இனி நீ வருந்திப் போர் செய்து வெல்ல வேண்டுவது யாதுளது?" என்று பின்னரும் அவனை ஊக்கினர்.

அதியமான், அப்புண்பட்ட நிலையிலும் தளராது போர் புரிந்தான்; இறுதியில் பெருஞ்சேரல் விடுத்த வேலொன்று, காற்றினுங் கூற்றினுங் கடுகி வந்து, அதியமான் அஞ்சியின் நெஞ்சிற்பாய்ந்து, ஊடுருவிச் சென்றது. அதனால், அதியமான் சோர்ந்து தேரிற்சாய்ந்து உயிர் துறந்தான். அந்தோ! அவ்வமயத்து அவனுக்கு இன்னுயிர் நண்பரான ஔவையார் எய்திய கௌவையை எங்ஙனம் கூறுவது! புலவர் அவன் இன்குணங்களை எல்லாம் நினைந்து நினைந்து வருந்திப் பிரிவாற்ருது புலம்புகின்றவராய், 'சோறு எல்லார்க்கும் பொதுவாதலால், அது சிறு அளவினதாக உள்ளபோதும், மிகப் பல கலத்தோடும் பலரோடுங்கூட உண்பான்; அது கழிந்ததே! மிக்க அளவினையுடைய சோற்றின்கண்ணும் மிகப்பலரோடுங்கூட உண்பான்; அது கழிந்ததே! உணவிருக்கும் இடமுழுதும் எங்களுக்கு (உண்டு களிக்க) அளிப்பான்; அது கழிந்ததே! அம்பும் வேலும் தைத்து உருவுமிடமாகிய போர்க்களம் முழுதும் தான் சென்று நிற்பான்; அது கழிந்ததே! நறுமணமுள்ள தன்னுடைய கையால் எம்முடைய தலையைத் தடவி அன்பு செய்வான்; அது கழிந்ததே! அதியமான் மார்பகத்துத் தைத்த வேல், அவன் மார்பில் மாத்திரம் தைத்ததன்று; அது பாணரது பாத்திரத்தின் துளையில் உருவி, இரப்போர் கையினுள்ளும் தைத்துருவித் தன்னாற் புரக்கப்படுஞ் சுற்றத்தாரது கண்ணின் கருமணி ஒளி மழுங்க, புலவரது நாவின்கண்ணேயும் போய் விழுந்தது. எமக்கு ஆதாரமாகிய எம்மிறைவன் எவ்விடத்துள்ளான்கொல்லோ! இனி இவ்வுலகத்தில் பாடுவாருமில்லை; பாடுவார்க்கொன்று ஈவாருமில்லை; குளிர்ந்த நீர்த்துறைக்கண்ணே பூக்கும் பகன்றைப்பூ, பிறராற் பறித்துச் சூடப்படாமல் வீணே கழிந்தாற்போல, பிறர்க்கு ஒரு பொருளைக் கொடாது மாய்ந்துபோகும் உயிர்கள் மிகப்பல: அத்தன்மையனே எம்மரசன்! அவனையின்றிக் கழி

கின்ற காலையும் மாலையும் இனி இல்லையாகுக!" என வருந்திக் கூறினார். பின்னர், துஞ்சிய அஞ்சியை, ஈமச் சிதையில் ஏற்றி எரியூட்டினர்; ஈமத்தீ அவனது உடலிற்பற்றியது. அப்போது ஔவையார், "ஈமத்தீ, இவனுடல் சிதையாமல் அவியினும் அவிக; அன்றிச் சிதையும்படி ஓங்கி எரியினும் எரிக; ஞாயிற்றை ஒப்பானது புகழ் உடம்பு ஒரு காலத்தும் அழியாது," என்று அவன் புகழ் உடம்பை வியந்து கூறி இரங்கினவராய்த் தகடூரின்கண்ணே தங்கியிருந்தனர்.

6. அன்னைக்கு

[டாக்டர் மு. வரதராசனார், M. O. L.]

அன்புள்ள அம்மா,

உன் கட்டளைப்படியே இது வரையில் நடந்தேன்; இன்று நடக்க முடியவில்லை.

"தமிழர்கள் உணர்ச்சி அளவில் ஊக்கம் மிகுந்தவர்கள்; வாய்ச்சொல் அளவில் வீரம் மிகுந்தவர்கள்; இந்த இரண்டும் மட்டும் பெற்றவர்களால் ஒரு நாடு முன்னேற்றம் அடைய முடியாது. கடமை ஒழுங்கு ஒன்று வேண்டும். இந்த ஒன்று மட்டும் இருந்து, மற்ற இரண்டும் இல்லாதிருந்தாலும் கவலையில்லாமல் தமிழ் நாடு எப்போதோ தலையெடுத்திருக்கும். நீ ஒரு தமிழன்; பழங்காலப் பிற்போக்குத் தமிழனாய் இருந்து வாயால் மட்டும் விளங்காதே; உணர்வால் மட்டும் உயராதே; செயலாலே சீர்ப்படு," என்று எனக்கு எழுதிய கடிதத்தை மறந்துவிடவில்லை. என் கடமையில் கண்ணுங்கருத்துமாய் இருந்து முற்போக்குத் தமிழன் தான் என்பதைக் காட்டப் போகிறேன்; பாடங்களை நன்றாகக் கற்று முதல் வகுப்பில் தேறப் போகிறேன். ஆனாலும், நேற்று வரையில் அமைதியாய் இருந்தது போல, இன்று இருக்க முடியவில்லை. ஆகையாலேதான் சில திங்கள் கழித்து இது போலக் கடிதம் எழுதுகிறேன்:

அம்மா, நான் எப்படி இன்று அமைதியாய் இருக்க முடியும்? உலகமே அழுகின்றதே! நான் மட்டும் புத்தக உலகத்தில் என்னை மறக்க முடியுமா?

உலகம் கண்ணீர் விடுகின்றது: ஒரு வீடு, ஒரு நகரம், ஒரு நாடு கலங்கவில்லை; உலகம் கலங்கி உருகுகின்றது. வீடு தோறும் இழவு, நகரந்தோறும் சாக்காடு நேர்ந்தது போல இருக்கின்றதே! ஒவ்வொருவர் முகமும் வாடிச் சுருங்கிவிட்டதே!

அம்மா, இமயமலை தலைகீழாய்ப் புரண்டிருந்தாலும், இவ்வளவு பெரிய அதிர்ச்சி உண்டாயிருக்காது. பூகம்பம் உண்டானாலும், ஒவ்வொரு பகுதிதான் நடுங்கும். ஆனால், உலகத்தார் உள்ளமெல்லாம் அதிரும் அதிர்ச்சி இந்திய நாட்டிலே டில்லியிலே நடந்துவிட்டதே!

வாழ்ந்த நாளிலும் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒவ்வொரு வகை மாறுதலை ஏற்படுத்தும் ஆற்றல் அந்தத் தூய மெல்லிய உடலுக்கு இருந்தது. உணர்வற்று வீழ்ந்த நாளிலும் எல்லோரையும் ஒரு சேரக் கலங்க வைக்கும் ஆற்றல் அந்த நல்லுடலுக்கு இருந்ததே!

புத்தர் வாழ்ந்தார்; அவர் வாழ்நாளில் லக்ஷக்கணக்கான மக்களின் வாழ்க்கையைத் திருத்த முடிந்தது. சாக்ரட்டிஸ் வாழ்ந்தார்; அவருடைய வாழ்நாளில் பதினாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை விளைக்க முடிந்தது. ஏசுநாதரும் அவ்வாறே. ஆனால், வாழ்நாளிலேயே கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கினவர் யார் அம்மா? காந்தியடிகள்—இந்தப் பெயரையும் நினைத்து, தம் மனத்தையும் தொட்டுப் பார்க்கட்டும்! அவருடைய பகைவரும் அவரிடமிருந்து கற்று வளர்ந்த புதிய முறைகள் சில உண்டு என்பதை உணர்ந்துகொள்ளார்களா?

எல்லோரும் அரசியல் காந்தியை அறிவார்கள். அரசியலில் அவர் பெருந்தலைவர் என்பதே பெரும்பாலோருக்குத் தெரிந்தது. ஆனால், இது முழு உண்மை அன்று; ஓரளவுதான் உண்மை. இன்னும் எண்ணிப் பார்த்தால், அவருடைய அரசியல் கொள்கையில் கருத்து வேறுபட்டவர் எங்கும் இருக்கின்றனர். அவருடைய அரசியல் கொள்கைகளுக்குச் செல்வாக்கு இருந்தாலும், உடன்படாமல் புறக்கணித்த தலைவர்களும் உண்டு; அறிஞர்களும் உண்டு; தொண்டர்களும் உண்டு.

ஆனாலும், அவருடைய அரசியல் நெறியே இன்று வரையில் பெற்றுள்ள வெற்றிக்கெல்லாம் காரணம். அவருடைய அறிவுரையே இன்று பல தலைவர்கள் உயர்வுக்குக் காரணம்; பல அறிஞர்கள் பெருமைக்குக் காரணம்; இந்தியாவின் தலை நிமிர்ந்த வாழ்வுக்கும் காரணம்.

அம்மா, மறக்க முடியவில்லை! நம் வீட்டில் நாம் பல நாள் காந்தியடிகளின் கொள்கைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த நாட்களை மறக்க முடியவில்லை! 'அரசியலில் அவர் சொல்வதில் இது மட்டும் சரி; அது சரியன்று,' என்று வாதாடினோம். ஆனால், ஒவ்வொரு நாளும் அவருடைய தொண்டு வாழ்வையோ, இயற்கை நெறியையோ, சமயக் கொள்கையையோ, அற ஒழுக்கத்தையோ, கடமை ஒழுங்கையோ முடிவில் குறிப்பிட்டு அங்கே ஒப்பற்ற நிலையை வணக்கத்தோடு போற்றி அடக்கத்தோடு அமைதியடையவில்லையா? அவரைவிடப் பெரிய அரசியல் அறிஞர்கள் இருக்கலாம். ஆனால், அவர் வாழ்ந்த வாழ்வை விடச் சிறந்த வாழ்வை—தூய வாழ்வைக்—குறிப்பிட வாய் இல்லாமல் அடங்கிவிட்டோம் அல்லவா?

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்."

என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழர் எழுதிவிட்டுச் சென்றார். இந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக அந்த ஒரு குறளுக்கு எடுத்துக்காட்டு இல்லாமலிருந்தது. காந்தியடிகளின் வாழ்வுதான் ஒரே எடுத்துக்காட்டாய் நின்றது. அன்று திருவள்ளுவர், உண்மையின் பெருமையினை உணர்ந்து, உணர்வுலகத்தில் நின்று எழுதினார். எழுதிய அவரைப் பற்றியே தமிழகத்தில் பலருக்குத் தெரியாது. ஆனால், அவர் உணர்ந்து எழுதிய கற்பனை அது. அந்த உண்மை, கற்பனையாகவே நிற்கவில்லை; ஓர் அரிய வாழ்வாய் மலர்ந்தது. அந்த மலர் வாடியது; சாம்பலானது. மதவெறியின் போர்வை போர்த்த அரசியல் வெறி, அந்த அருமை மலரைக் கசக்கி எறிந்தது.

அந்த ஒரு குறள் மட்டும் என்ன! திருவள்ளுவரின் அறத்துப்பாலில் உள்ள ஒவ்வோர் எழுத்திற்கும் எடுத்துக்காட்டான வாழ்க்கை அல்லவா அது?

எத்தனையோ நம்பிக்கைகள், எவ்வெவ்வாறோ தடுமாறும் நாட்கள், ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வருகின்றன. ஆனால், அறம் என்ற ஒன்று உலகத்தை ஆளும் சட்டமாய் இருக்கிறது என்பதை என்றும் தளரா நம்பிக்கையாகக் கொண்டு வாழ்ந்த வாழ்வு, அன்று மாலை அடங்கிய அந்தப் பெருவாழ்வு!

இன்னொன்றும் இந்த நேரத்தில் எனக்குத் தோன்றுகிறது: 'அடிகள் பெரியவர்; ஒப்பற்ற தலைவர்,' என்பதை உலகமெல்லாம் உணர்ந்துவிட்டது உண்மைதான். ஆனால், அவருடைய கொள்கைகளின் பெருமையை உணர்ந்தவர் எத்தனை பேர் அம்மா? அரசியலில் மட்டுமே அவர் இன்னவர் என்பதைப் பொது மக்கள் உணர முடிந்திருக்கலாம். இயற்கை, அறம், எளிமை, கடமை, ஒழுங்கு முதலியவற்றில் அந்த ஞாயிறு வீசிய ஒளியால் பயனடைந்தவர் மிக மிகச் சிலரே என்று எண்ணுகிறேன். அப்பா ஒரு நாள் கூறியது போல, காந்தியடிகளின் உயர்ந்த கொள்கைகள் பொது மக்கள் அறிவுக்கு எட்டாதவைகளே. பசியில்லாமல் உணவு விடுதிக்குச் சென்று உண்பது போல, கலையுணர்வு இல்லாமல் சினிமாவுக்குச் சென்று காண்பது போல, அன்பு இல்லாமல் திருமணத்திற்குச் சென்று ஆரவாரம் செய்வது போல, நாகரிகத்தின் பெயரால் கொள்கைகளை உணராமல் வாயால் புகழும் மக்கள் மிகுதியாய் இருக்கின்றார்கள். அதனாலேதான், அந்தத் தூய உடல் வாடிய அன்று இரவே, கொலையும் கொள்ளையும் தீயிடலும் துன்புறுத்தலும் தொடங்கச் சிலர்க்கு மனம் வந்தது. ஆனாலும், அவர்களும் தூயரக்கோலத்தோடு கண்ணீர் வடித்தார்கள் என்பதைக் கேட்கும் போது, அந்தக் கொடுமைகளுக்கு அவர்கள் காரணமல்ல, நெடுங்காலமாக நிலவி வரும் வெறியே காரணம் என்பது தெரிகின்றது.

அம்மா, என்னென்னவோ நினைவுக்கு வருகின்றன. தென்னாப்பிரிக்காவில் அவர் தொடங்கிய இயக்கத்திற்குத் தமிழ் மக்கள் துணையாய் நின்று அவரது அன்பையும் பெற்றார்கள். 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை,' என்னும் பழமொழியாலும் திருக்குறள் கருத்துக்களாலும் தமிழ் மொழி அவருடைய போற்றுதலைப் பெற்றது. தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத போது அவரே தமிழா

சிரியராய் இருந்து தொண்டு செய்ததும் நினைவுக்கு வருகின்றது. இன்னொன்றை நினைக்கும் போது நெஞ்சம் நெக்குருகுகின்றது! தமிழர்களின் பண்பாடும், தமிழ் மொழியின் கருத்து வளமும் அவர் மனத்தைக் கவர்ந்தது போலவே, தமிழ் நாட்டு வறுமையும் அவருடைய கோலத்தையே மாற்றிவிட்டதே! சேலத்திற்குத் தெற்கே தமிழ் மக்கள்—ஆண்களும் பெண்களும்—அரை நிர்வாணமாய் முழங்கால் வரையில் அரையாடை உடுத்து உழைப்பதைக் கண்ணால் கண்ட அன்றுதானே, அடிகளின் தலைப்பாகையும் அகன்றது! நீண்ட அங்கியும் அகன்றது! பத்து முழ வேட்டியும் அகன்றது! 'இவர்களுக்கு மானத்தை மறைக்கவும் கந்தல் போதவில்லை!' என்று கசிந்துருகித் தமிழ் நாட்டுக் குடியானவன் கோலத்தை அல்லவா அன்று முதல் மேற்கொண்டார்! அந்தக் கோலந்தானே உலகம் புகழ்ந்து வணங்கிய வறுமைத் திருக்கோலம்!

அம்மா, ஏதோ எழுதினேன், ஆறுதல் பெற.

அன்புள்ள மகன்

எழில்.

7. முப்பெருங்கவிஞர்

[R. P. சேதுப் பிள்ளை, B.A., B.L.,]

நல்லறிஞரது உள்ளத் தடத்தில் ஊற்றெடுத்துப் பொங்கும் ஆர்வத்திற் பிறப்பது இயற்கவியாகும். இத்தகைய கவி பாடும் நல்லியற்கவிஞர் உலகில் சிலரேயாவர். அன்னார் இயற்றும் அருங்கவிதையில் மாந்தர் அறிந்து உய்தற்குரிய விழுமிய உண்மைகள் அமைந்து மிளிரும். அவர் மொழிகளில் ஒளியும் இனிமையும் நிரம்பித் ததும்பும். இத்தன்மை வாய்ந்த கவிஞருள் ஒருவராகிய பாரதியார், தமிழ்நாடு செய்த தவப் பயனாகப் பொருனை நாட்டிற் பிறந்தார். அருந்தமிழ் மொழியுடன் ஆரியமும் ஆங்கிலமும் அளவொடு பயின்று, தம் உள்ளத்திலெழுந்த தள்ளரிய ஆர்வத்தால் இனிய தமிழ்ப்பாட்டு இசைத்தார்.

பழம்பெருமை வாய்ந்த தமிழகத்தின் அறிவையும், ஆண்மையையும், வளத்தையும், வாணிபத் திறத்தையும், ஆற்றையும் அருங்காற்றையும் அக்கவிஞர் போற்றிப் புகழ்துள்ளார். சோழநாட்டை வளநாடாக்கிய காவிரியும், தொண்டை நன்னாட்டின் நல்லணியாய்த் திகழும் பாலாறும், புலவர் நாவிற்பொருந்திய வைகையாறும், பொன் திணிந்த புனல் பெருகும் பொருனையாறும் தமிழ் நாட்டினை அழகு செய்யுந் தன்மையை நினைந்து பாரதியார் நெஞ்சம் தழைக்கின்றார். ஆயினும், நல்லறிவே நாட்டின் உயிரெனக் கருதிய பாரதியார், தமிழ் நாட்டிற்கு என்றும் அழியாப் பெருமை அளித்த நல்லியற்கவிஞரை நாவார வாழ்த்துகின்றார்.

"கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு."

என்றெழுந்த பாரதியார் பாட்டின் நயம் அறியத்தக்கதாகும். கல்வி நலம் படைத்த தமிழ் நாட்டிலே கம்பர் பிறந்தார்; இறவாத பெருங்காவியம் இயற்றினார்; தமிழ் நாட்டிற்கு அழியாத பெருமையை அளித்தார்; 'கல்வியிற்பெரியவர் கம்பர்,' என்ற அழியாத புகழ் மாலை பெற்றார். இத்தகைய கவிஞர் அருளிய காவியம் செந்தமிழ் நாட்டிற்குச் சிறந்ததோர் அணியன்றோ?

இன்னும் இம்மாநிலத்தில் வாழும் மாந்தர்க்கெல்லாம் ஒளி நெறி காட்டும் உயரிய கவிஞரைப் பிறப்பித்து நல்கிய பெருமையும் செந்தமிழ் நாட்டுக்கே உரியதாகும்.

"வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்றெழுந்த பாரதியார் வாய்மொழி, தமிழ் நயமறிந்தோர்க்குத் தேனினும் இனிப்பதாகும். திருவள்ளுவர் என்னும் ஞானச் செல்வர், பன்னூற்றாண்டுகட்கு முன்பு இந்நாட்டில் தோன்றினார்; உலகெலாம் இன்புற்று வாழுமாறு ஒளி நெறி காட்டினார்; இன்று உலகறிந்த கவிஞருள் ஒரு தனிக் கவிஞராய் ஒளிர்கின்றார். அக்கவிஞர் தென்னாட்டிற்பிறந்தவரேனும், எந்நாட்டிற்கும் உரியவர். அவர் பொருளுரை தென்மொழியில் எழுந்ததேனும், பன்மொழியாளர்க்கும் பொது

வுரையாகும். சமயக் கணக்கர் மதி வழி செல்லாது உலகியல் காட்டி உறுதிப் பொருள் நாட்டிய அக்கவிஞர் நிலைமிசை நீடு வாழ்கின்றார். இத்தகைய மதி நலம் வாய்ந்த கவிஞரைத் தன் அகத்தே தோற்றுவித்து வான் புகழ் கொண்ட தமிழ் நாட்டின் பெருமையைப் பாரதியார் வாயார வாழ்த்துகின்றார்.

இன்னும் சேரநாட்டின் செல்வத்தினும் செந்தமிழ்ச் செல்வமே சிறந்ததெனத் தேர்ந்து, இளமையிலேயே துறவறம் ஏற்று, தமிழர் குலமணி விளக்காய் விளங்கிய இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமென்னும் செம்மை சான்ற காவிய அமுதை அள்ளி உண்டு அளப்பரிய இன்பமுற்ற பாரதியார்,

"நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு."

என்று நம் தாய்நாட்டைப் புகழ்ந்து மகிழ்ந்தார். கற்போர் மனத்தைக் கவரும் திறம் வாய்ந்த நூல்களுள் சிலப்பதிகாரம் தலை சிறந்ததாகுமென்று பாரதியார் அறிந்துணர்த்தினார். இரும்பினை இழுக்கும் காந்தம் போலக் கற்போர் கருத்தினைக் கவருந் திறம் சிலப்பதிகாரத்தில் அமைந்திருத்தலை உணர்ந்த கவிஞர், 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று அச்செஞ்சொற் காவியத்தைப் போற்றினார். இனிய செந்தமிழ்ப் பனுவலாய் இலங்கும் சிலப்பதிகாரத்தைத் தமிழ்த்தாயின் கழுத்தில் இலங்கும் செம்மணி மாலையாகக் கருதி உள்ளம் தழைத்தார். தமிழ் நாட்டு மூவேந்தர் தகைமையையும், மூந்நாட்டின் சீர்மையையும், முத்தமிழின் நீர்மையையும் முறையாக இளங்கோ முனிவர் தொடுத்தமைத்த பாமாலை, தமிழ்த்தாயின் திரு மார்பில் ஆரமாய் அமைந்து அழகு செய்தற்குரியதன்றோ?

இத்தகைய பழம்பெருமை வாய்ந்த பைந்தமிழ் நாட்டிற் பிறந்தும், தமிழ் மொழியின் பெருமையையும் இனிமையையும் உணராது வறிதே காலங் கழிக்கும் இக்காலத் தமிழ் மக்கள் நிலை கண்டு பாரதியார் இரங்குகின்றார். முன்னோர் முயன்று தேடித்தந்த முழுமணிகள் மண்ணுள் மூழ்கி மறைந்து கிடப்ப, அவர் பின்னோராய நாம் வறிஞராய் இவ்வுலகில் வாழ்கின்

ரும்; பாலிருந்த பானையைப் பார்ப்பானை என்பதுபோல, தமிழறிஞர் மரபிற்பிறந்த நம்மையும் தமிழரெனப் பிற நாட்டார் வழக்குகின்றார்கள். இங்ஙனம் வாயிருந்தும் ஊமையராய், கண்ணிருந்தும் குருடராய், செவியிருந்தும் செவிடராய்த்திரியும் இக்காலத் தமிழ் மக்களை நோக்கி,

"நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்;
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்."

என்று கவிஞர் பரிவுடன் வேண்டுகிறார். நறுஞ்சுவை நிறைந்த தமிழின் நீர்மையைத் தமிழ் மக்கள் அறிந்து மகிழ்தல் வேண்டும்; 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்,' என்னும் முன்னோர் மொழியின் வழிநின்று, இனிமைவாய்ந்த தமிழ் மொழியை யாண்டும் பரப்புதல் வேண்டும். வீடுதோறும் தமிழின் முழக்கம்; வீதிதோறும் தமிழின் விளக்கம்; நகரமெங்கும் தமிழோசை; நாடு எங்கும் தமிழோசை; இவ்வாறாக எங்கும் தமிழ் முழக்கமே பெருமுழக்கமாய்ப் பொங்கி எழுதல் வேண்டுமென்பது பாரதியாரது பெருவிருப்பமாகும்.

8. இசை இன்பம்

[K. A. கிருஷ்ணன், M. A.]

தமிழ் மொழியானது பண்டைக்கால முதல் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்று மூன்று வகையாகப் பிரித்து வழங்கப்பெறும். இவ்வகையான பிரிவு வேறு எம்மொழிக்கும் இல்லாத சிறப்பியல்பாகும். அவற்றுள் ஒவ்வொன்றிற்கும் இலக்கியங்களும் இலக்கணங்களும் உண்டு. இயல், இசை, நாடகம் என்ற இம்முறையானது ஒன்றற்கொன்று இன்றியமையாத இயல்பினைக் காட்டுவதாம்.

இயற்கையில் தோன்றிய இனிய ஓசையைப் பொருள் உணர்த்தும் பாக்களோடு இணைத்து இசைத்துக் கேட்போர் உள்ளத்தை உருக்கிக் கிளர்ச்சி உண்டுபண்ணித் தன் வயப்

படுத்தப் பாடுவதே இசையாகும். பண்டைத் தமிழ் மக்கள் இசையை வெறும்புலன் நுகர்ச்சிக்காக மட்டும் பயன்படுத்த வில்லை; வாழ்க்கையின் குறிக்கோள் பல நிறைவேற்ற லுக்காகவும் பயன்படுத்தினமையாற்றான் அவர்கள் நல்வாழ்வு நடாத்தினார்கள்.

இசைத்தமிழைப் பற்றிய நூல்கள் பல தமிழில் இருந்தன. அவற்றுள் ஒன்றேனும் முழுமையாய் இன்று கிடைத்திலது. ஆனால், இங்குமங்குமாகச் சில சூத்திரங்கள் நூற்பெயருடன் கிடைக்கப் பெற்றுள்ளன. அவ்விசை நூல்களாவன: பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பஞ்சமரபு, இந்திர காளியம் முதலியன. இக்காலத்தில் வடமொழியில் வழங்கும் சுரப்பெயர்களாகிய ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழும், தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவற்றிற்கு இணையானவை; இவ்வேழிலிருந்து உண்டாவனவே பண்களும் திறங்களும். அவை பல வகைப் பட்டு வெவ்வேறு பெயர்களுடன் வழங்கும். இன்ன பண்ணை இன்ன காலத்தில் பாட வேண்டும் என்ற வரம்பும் உண்டு. உதாரணமாக, மாலைக் காலத்தில் பாடுதற்குரிய பண் செவ்வழிப்பண்; காலைக்குரியது மருதப்பண். இம்முறையில் பாடாவிட்டால், அதனைக் கேட்கும் மக்களுக்கும் விலங்குகளுக்கும் இன்பம் உண்டாகாது என்பது அறிஞர் துணிபு. இசையினால் ஆறறிவுடைய மக்களையும், ஐயறிவுடைய விலங்குகளையும், ஓரறிவுடைய மரஞ்செடி கொடி முதலியவற்றையும் வசப்படுத்தலாம் என்ற உண்மையினைப் பண்டைத்தமிழர் நன்கறிந்திருந்தனர். ஆகவே, இசையைக் கேட்டு அசையும் பொருளன்றி அசையாப் பொருள்கூடத் தன் தன்மை மாறுபடுவதாகக் கூறப்படுகிறது.

மலைகளில் தினைப்புனத்தைப் பறவை விலங்கு முதலியன அழித்துவிடாமல் குறமகள் பாதுகாப்பது வழக்கம். அங்ஙனம் பரண்மீதிருந்து பாதுகாக்கும்போது பறவைகள் தினையை உண்ண வரும். அப்போது குறமகள் இனிய குறிஞ்சிப்பண் பாடுவாள். பாடலைக் கேட்டு மயங்கிய பறவைகள் செயல்மறந்து நின்றுவிடுமாம். யானைகளுங்கூட இப்பாடலைக் கேட்டுத்

தினையை உண்ணாமலும், புடைபெயராமலும், நின்ற இடத்தி லேயே உறங்கிவிடுமாம். இதனை

'ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகன் மழகளி றுறங்கு நாடன்.''

என்னும் பாடலால் அறியலாம். அசுணமா என்னும் விலங்கு மனிதனைக் கொல்லும் கொடிய இயல்புடையது; இசையில் மிக்க நசையுடையது. இதனை வேட்டமாடுவோர் மறைந்திருந்து யாழில் இசையைப் பாடுவர். அது கேட்டு இது இன்புற்றிருக் கும்; அப்பொழுது வேடுவர் இன்னிசையை நிறுத்திக் குழப்ப மான கோர ஒலியுடன் பறையினை அடிப்பர். இன்னிசை கேட்டு இன்புற்றிருக்கும் அசுணமா, வல்லோசையைக் கேட்டதும் மயங்கி விழுந்துவிடும். பின்னர் வேடுவர் இதனைப் பிடித்துக் கொள்வர். இதனைக் கம்பர்,

"கோதில்யாழ்
நறையடுத்த வசுணநன் மாச்செவிப்
பறையடித்தது போலும்என் பாவமே!''

என்று கூறியுள்ளார்.

'நளகிரி' என்னும் மதம் பிடித்த யானை, உதயணன் யாழிசைக்கு ஆசானுக்குப் பணியும் மாணவன் போலவும் தந் தைக்கு வணங்கும் தனயன் போலவும் வணங்கியது என்பதனை

'அணியிழை மகளிரும் யானையும் வணக்கும்
மணியொலி வீணையும்''

என்னும் பெருங்கதை அடிகளால் அறியலாம். பாணரது யாழிசை, வழியில் செல்வோரைக் கொன்று வழிப்பறி செய்யும் கள்வர்களது உள்ளத்தில் உள்ள மறத்தை நீக்கி அருள் நீர்மை பெருகுமாறு செய்த செய்தியும் பண்டைத் தமிழ் இலக்கியத் தில் காணக்கிடக்கின்றது.

தென்னாடடைந்த இராவணனை அகத்திய முனிவர் இசை யால் வென்று இங்கு இராவண்ணம் செய்தார் என்ற வரலா

ஒன்றுண்டு. அகத்தியர் யாழிசை பாடிய போது இராவணன் தன் யாழை அங்கிருந்த கருங்கல்லின் மீது வைத்திருந்தான். அகத்தியர் இசைக்குக் கல் உருகி யாழினைப் பற்றிக்கொண்டது. அகத்தியர் இசையை நிறுத்தியதும் கல் முன்பு போல இறுகி விட்டதாம். இராவணன் யாழை எடுக்க முயன்று முடியாமல் முடிவில் அகத்தியரது யாழை வாங்கி இசை எழுப்பினன். அவ்விசை கல்லைக் கரைக்கும் அவ்வளவு இன்னிசையாய் இல்லாமையால் கல்லுருகவுமில்லை; யாழை எடுக்கவும் முடியவில்லை. முடிவில் அகத்தியரே கல்லுருக யாழிசைத்து அவ் யாழை மீட்டுக் கொடுத்தாராம்.

பண்டைத் தமிழர் தமது வாழ்க்கையை இசையோடு இணைத்துப் பண்புள்ள மக்களாய் வாழ்ந்தனர். இடைக் காலத்தில் இசை கரைந்தது. நாடகம் துடிப்பற்றது. இயற் றமிழ் மட்டுமே வளர்ந்தது. ஆனால், இக்காலத்தில் பலர் தமிழ் இசையை வளர்க்க முயற்சிகள் பல செய்கின்றனர். ஆங்காங்கே பல தமிழிசைக் கழகங்கள் நிறுவப் பெற்றுள்ளன. ஆகவே, உள்ளத்தை உருக்கி உணர்வை ஊட்டி இன்பத்தை அளிக்கும் தமிழிசை தழைத்தோங்கி வருகின்றது.

9. வழி காட்டி

(RADAR)

[ஏ. வி. குப்புரத்தினம், B. Sc.]

ஆகாய விமானம் போகிறது என்றால் யாருக்கும் தலையை ஒரு கணம் நிமிர்ந்து பார்க்காமல் இருக்க முடிவதில்லை. பறக்க வேண்டும் என்ற ஆசைகூட இருக்கிறது.

கடவுள் உடனடியாக நேரே எழுந்தருளி உடனே சுவர்க் கத்திற்கு அழைக்கிறார் என்று வைத்துக்கொண்டால், எத்தனை பத்தர்கள் இதற்குத் தயாராயிருப்பார்கள் என்பது எண்ணிப் பார்க்க வேண்டிய விஷயந்தான். அதே போல, இனமாக விமானத்திலே பறக்கலாம் என்று அறிக்கைவிட்டால் எத்தனை பேர் சற்றும் சிந்திக்காமல் முன் வருவார்கள்? எத்தனை பேர் தங்

கள் பயத்தை வெளிக்காட்ட வெட்கப்படுவார்கள்? எத்தனை பேருக்கு வெளிப்படையாகவே உதைப்பு எடுக்கும்? இதுவும் ஒரு பிரச்சினையே. "கடல் போல ஏதாவது இருந்தாலும், தண்ணீர் தாங்கிக்கொள்ளும்; ஏதோ அதிருஷ்டவசமாக மரக் கட்டையாவது மிதந்து வரும்; காற்றிலே ஏதுசார் ஆதரவு?" என்பது அவர் வாதம்.

சாதாரணமாக விமானங்கள் புறப்படுமுன், எங்கே போக வேண்டும், எந்தத் திசையில் பறக்க வேண்டும் என்பன போன்ற விவரங்களை முன் கூட்டியே விமானி, நிலைய உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிவித்தாக வேண்டுமென்ற செய்தி பலருக்குத் தெரியாது. விமானி ரேடியோ மூலம் நிலையத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ளலாம் என்பதையும் சிலர் மறந்து விடுகின்றனர். இப்படியிருந்துமா, பத்திரிகைகளிலே வாரம் தவறாமல் விமான விபத்துக்களைப் பற்றிச் செய்திகள் வருகின்றன!

போனது போகட்டும்: இனிமேல் பாருங்கள்! ராடார் (Radar) கருவி போர்க்காலத்தில் எதற்கும் பயன்பட்டது என்பது அனைவரும் அறிந்ததுதான்—எதிரி விமானம் எங்கே, எந்தத் திசையில், எவ்வளவு வேகத்தில் பறந்து வருகிறது என்பதைக் கண்டறிய முடிந்தது. இருட்டோ, மூடுபனியோ, ராடாரின் 'கண்' எதையும் துருவியறிய முடிந்தது. பெர்லின் முட்டுக்கட்டைத் தகராறு இருந்த காலத்திலும், உணவு நெருக்கடியைச் சமாளிக்க விமானங்கள் மூலந்தான் புயல் இருள் என்று பாராது உணவு அனுப்பப்பட்டது. இத்தகைய நிகழ்ச்சிக்கு ராடாரும், நிலையத்திற்கும் விமானிக்கும் தொடர்பு படுத்தும் ரேடியோவும் உயிர் நாடியானவை. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பல பகுதிகளையும் பின்னிப் பிணைக்க உதவும் ஆகாயச்சாலைகளில் விமானங்கள் அச்சமின்றிப் பறந்து திரிய இன்னும் சில நூதனமான மின்சாரக் கருவிகளைப் பயன்படுத்தப் போகிறார்களாம். இதற்கென்று அமைக்கப்பட்ட உத்தியோகக் குழு ஐந்து வருட காலத்தில் இதைச் சீர்படுத்திவிடத் திட்டமிட்டிருக்கிறது.

கண்ணுக்குப் புலப்படாத ஆகாய வழி! பல பகுதிகளையும் இணைக்கும் பல வழிகள்! விமானத்திலிருந்தும் விமான

நிலையங்களிலிருந்தும் ராடாரினாலும் ரேடியோவினாலும் வீசப் படும் கதிர் வழிகள், இந்த ரேடியோக் கதிரைப் பிடித்துக் கொண்டே வேண்டிய இடத்திற்குச் செல்லலாம். கதிரின் வழியை விட்டு விலகாமல் பறப்பதற்குத் தக்க கருவிகளை விமா னத்தில் வைத்திருப்பதனால், தண்டவாளத்தை விட்டு ரயில் விலகாமல் ஓடுவது போல, எளிதாகப் பறக்கலாம். விமானி யின் முன்னே உள்ள கருவிகளில் உள்ள முள் எப்படி எப்படி விமானத்தைத் திருப்ப வேண்டும் என்பதைக் காட்டிவிடும்.

சாதாரணமாக மேலை நாடுகளில் என்ன வழி கையாளப்படு கிறதென்றால், நான்கு திசைகளில் நான்கு விதமான ஒலிகளைத் தரும் ரேடியோ அலைகளை விமான நிலையத்திலிருந்து அனுப்பு வார்கள். குறிப்பிட்ட திசையில் பறக்க வேண்டுமானால் விமா னியின் காதோடு அணிந்திருக்கும் ரேடியோக் கருவியில் குறிப் பிட்ட ஒலி ஒரே மாதிரி கேட்டுக்கொண்டிருக்கும்படி விமானி பறக்க வேண்டும். கேட்கவில்லையானால், வளைந்து வளைந்து பறந்து இந்த ஒலி வரும் வழியைப் பிடிக்க வேண்டும்.

ஆனால், புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் கருவியில் கலங் கரை விளக்கத்தில் ஒளிக்கதிர் சுற்றிச்சுற்றி வருவதுபோல ஒரு ரேடியோ அலைக்கதிர் சுற்றிச்சுற்றி வரும். அதோடு சுற்றும் போது நேர் வடக்காக வரும் சமயத்தில் பிரத்தியேகமான ஒரு வித ஒலி கேட்கும். எனவே, பறக்கும் விமானிக்கு இரண்டு வகையான ஒலிகள் கேட்கும். இவ்விரண்டு ஒலிகளுக்கும் இடைவேளை அதிகமானால் விமானம் வடதிசையிலிருந்து அதிக தூரம் விலகிப் பறக்கிறதென்றும், இடைவேளை குறைவானால் வடதிசைக்கு அருகிலேயே பறக்கிறதென்றும் அறியலாம். இதை விமானியின் முன்னாலுள்ள கருவிகளே அறிவித்துவிடு கின்றன. ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு மட்டும் இத்தகைய கருவிகள் 400 இருந்தால்தான் அங்குள்ள எல்லா நிலையங்களை யும் இணைக்க முடியுமாம்.

விமானம் எவ்வளவு தூரத்திலிருக்கிறது என்பதையும் அறிய வேண்டும். விமானத்தின் ரேடியோவிலிருந்து ஓர் ஒலிக் குறிப்பு அனுப்பப்படும். விமான நிலையத்தில் அந்த ஒலிக் குறிப்புப் பிரதிபலிக்கப்பட்டு, விமானத்திற்குத் திருப்பி அனுப்

பப்படும். இந்தக் குறிப்பு நிலையத்திற்குப் போய் விமானத்துக்குத் திரும்பி வரப்பிடித்த நேரத்தைக்கொண்டு விமான நிலையத்திற்கும் விமானத்திற்கும் உள்ள தொலைவினைப் பர்லாங்கு அளவு வரையிலும் மின்சாரக் கருவிகளிலுள்ள முள் காட்டும். இந்த ரேடியோ ஒலிக் குறிப்புத் திரும்பி வரப் பிடிக்கும் கால இடைவெளி மிகமிகச் சிறிது; காதுகொண்டு கேட்டறிய முடியாதது. விமானத்தின் கருவிகள் தாமாகவே இக்காரியத்தைச் சாதிப்பதால், மோட்டார் வண்டியிலுள்ள கருவியில் தூரத்தை அறிவது போல அறிவது எளிதாயிருக்கிறது.

இதெல்லாம் ரேடியோக் கருவிகளின் கூத்துதான். ஒரு கருவி, ரேடியோக்கதிரிலிருந்து விமானம் ஒரு குறிப்பிட்ட தூரம் விலகிப் பிரயாணம் செய்ய வசதியளிக்கிறது. இன்னொரு கருவி, நிலையத்தில் விமானம் இறங்கும் பாதைக்கு எதிரில் அமைக்கப்பட்டிருக்கும். இதன் உதவியால் பாதைக்கு நேராக இறங்க முடிகிறது. விமானியாலே, அல்லது கருவியாலே ஏதாவது தவறு நேர்ந்தாலும், வேறொரு ராடார்க் கருவி ஒத்தாசை செய்கிறது. இவ்விரண்டும், விமானம் இன்னும் எத்தனை கெஜ தூரம் பறக்க வேண்டும்; விமானத்தின் சக்கரங்கள் தரையைத் தொட இன்னும் எவ்வளவு கீழிறங்க வேண்டும் என்பவற்றைக் காட்ட வல்லன. நிலையத்திலிருந்து அனுப்பப்படும் ராடார்க் கதிர், இறங்கி வரும் விமானத்தில் பிரதிபலிக்கப்பட்டு, மறுபடியும் நிலையத்தையே அடையும்; இது மின்சாரக் கருவியிலுள்ள ஒரு திரையில் அந்த விமானத்தின் உருவத்தை விழச் செய்யும். திரையின் நடுவே உருவமிருந்தால் சரி. இல்லையென்றால், விமானி விலகி வருவதாகத் தெரியும். கருவியை இயக்குபவன் ரேடியோ மூலம் விமானியை வலமாகவோ நேராகவே பறக்கும்படியாகச் சொல்லுவான்.

மேலும், அதிகமாக விமானப் போக்கு வரவு இருக்கும் இடங்களில் விமானங்களை ஒழுங்காகச் செலுத்தவும் ராடார்க் கருவிகள் செய்யப்பட்டுள்ளன. சுமார் 30 மைல் வட்டாரத்திற்குள் வரும் விமானங்களைப் பற்றி, பகல், இரவு, மழை, மூடுபனியுள்ள சமயங்களிலுங்கூட அறிவிக்கிறது. உயரமான இடங்களிலிருந்து இதைக் கவனித்து விமானங்களை ஒவ்வொன்

ருக இறங்கச் செய்து ஒழுங்குப்படுத்தவும் இவை பயன்படும் விமானிகளுடன் ரேடியோ மூலம் பேசுவதற்குச் சிற்றலைகளை உபயோகிப்பதால் ஒலி மிகவும் தெளிவாகக் கேட்கிறது. இத்தகைய வசதிகளை இப்போது வாஷிங்டன், சிக்காகோ, நியூயார்க்கு முதலிய நகரங்களில் கையாளுகிறார்கள்.

இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குள் தொலைக் காட்சியும் (டெலிவிஷன்) சீர்பெற்றுவிடும். அதையும் பயன்படுத்திக்கொண்டால், காரிருளும் மூடுபனியும் சூழ்ந்திருப்பினும், விமானத்திற்கு முன்னாலுள்ள மலை உச்சிகளும், முகிலும், புயலும், அருகில் வட்டமிட்டுத் திரியும் விமானங்களும் விமானியின் அறையிலுள்ள திரையில் தெரியும். மேற்கூறப்பட்ட வசதிகள் அமெரிக்க நாடுகளிலுள்ள பெரும்பாலான விமான நிலையங்களில் வழக்கத்தில் வந்துகொண்டிருக்கின்றன.

இப்போது இத்தகைய வசதிகள் போதாமையால், இருக்கும் கஷ்டங்களை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றுதான் அமெரிக்க விஞ்ஞானிகள் பாடு படுகின்றார்கள். விமானங்களுக்கு வழி காட்டும் இக்கருவிகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை எல்லா நாடுகளும் உணர்ந்து பின்பற்றும் என்பதற்கு ஐயமில்லை. இந்தச் சீர்திருத்தங்களெல்லாம் செய்தபின் வேண்டுமானால் ஒரு தரம் கட்டாயம் பறந்து பார்த்துவிடுகிறது என்று இப்போது பலர் எண்ணமிட்டுக் கொண்டிருப்பார்களென்பதற்கும் ஐயமில்லை.

10. மணிமேகலையும் புண்ணியராசனும்

[ஆ. கார்மேகக் கோன்]

சோழவள நாட்டிலே காவிரி கடலோடு கலக்கும் சங்கமுகத் துறையிலேயுள்ள சோழரது தலைநகரும் துறைமுகமுமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலன் என்னும் வணிகர் குலதிலகனுக்கு, மாதவி என்னும் நாடகக்கணிகை வயிற்றிற் பிறந்த மணிமேகலை என்பாள், தன் தந்தையாகிய கோவலன்

மதுரையில் பாண்டியன் நெடுஞ்செழியனால் கொலையுண்டிறந்த செய்திகேட்டு வருந்திக்கண்ணீர் விடுவதை ஒருவகையாக மாற்ற நினைந்த அவள் தாய் மாதவி, மணிமேகலையை நோக்கி, 'நீ தொடுக்கும் பூங்கண்ணி கண்ணீர் பட்டமையான் தூய்மை யொழிந்து ஐயனுக்கு ஆகாததாயிற்று; ஆதலால், சோலை சென்று புதுமலர் கொணர்க,' எனக் கூறினாள். கூறலும், அங்ஙனமே மணிமேகலை சுதமதி என்னும் தோழியோடு மலர் பறிப்பதற்கு உவவனம் என்னும் சோலைக்குச் சென்றாள். இதனை, முன்னமே மணிமேகலையை மனைவியாக அடைய விரும்பியிருந்த அந்நகரத் தரசன் கிள்ளி வளவன் புத்திரன் உதயகுமாரன் என்பான் அறிந்து, அவளைக்கவர இது தக்க சமயமெனக் கருதித் தேரேறி உவவனம் வந்தான். அங்ஙனம் அவன் வருவதையுணர்ந்த சுதமதி என்னும் தோழி மணிமேகலையைப் பாதுகாக்க, அவளை அச்சோலையிலுள்ள ஒரு பளிங்கறையுள் புகச்செய்து, உதயகுமாரனுக்கு அவன் கருத்துத் தவறு என எடுத்துக்காட்டிப் பல நீதிகளைக் கூறினாள். அதனால், அவன் வாளா திரும்பிச் சென்றுவிட்டான்.

பின்னர்ப் பளிங்கறையிலிருந்து வெளிப்போந்த மணிமேகலையும் சுதமதியும் உதயகுமாரனைப்பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது கோவலனது குலதெய்வமாகிய மணிமேகலா தெய்வம், கோவலன் மகள் மணிமேகலைக்கு முற்பிறப்பின் தொடர்பால் உதயகுமாரன்மீது செல்லும் மனத்தைத் தடுத்து, அவளைப் புத்த சமய வழியிற் செலுத்தி நற்கதி பெறச் செய்யக்கருதி, அவர்கள் அறிந்த ஒரு மடந்தை வேடங்கொண்டு அங்கு வந்து, அவர்களை நோக்கி, "நீங்கள் இங்கிருந்தால் மீளவும் உதயகுமாரனால் உங்களுக்குத் துன்பம் உண்டாகும்; ஆகையால், முனிவர்கள் வசிக்கும் சக்கரவாளக் கோட்டத்திற்குச் செல்லுங்கள்," என்று கூறி, அவர்களை அடுத்துள்ள சக்கரவாளக் கோட்டம் என்னும் இடத்திற்குச் செல்லும்படி செய்தது. அன்றிரவில் சுதமதியும் மணிமேகலையும் அங்கு உறங்கும்போது மணிமேகலா தெய்வம் வந்து, மணிமேகலையை மாய வித்தையால் மயக்கித் தழுவி எடுத்துக்கொண்டு ஆகாய வழியே முப்பது யோசனைத் தூரம் தெற்கே சென்று, கடல் சூழ்ந்த மணி பல்லவம் என்னும் தீவில் வைத்துவிட்டுச் சக்கரவாளக் கோட்டத்திற்குத் திரும்பி வந்து,

சுதமதியைத் துயிலெழுப்பித் தான் மணிமேகலையைத் தூக்கிச் சென்றதையும், அவள் முற்பிறப்பின் உணர்ச்சி பெற்று அற்றைக்கு ஏழாவது நாளிலே வருவாள் என்பதையும் சொல்லிச் சென்றது.

அப்பால் சுதமதி துயிலெழுந்து, மணிமேகலையின் பிரிவாலுற்ற பரிவால் வருந்திப் பொழுது புலர்ந்த பின் கவலையுடன் மாதவியை அடைந்து, நிகழ்ந்தவற்றைக் கூற, மாதவி மணியிழந்த நாகம் போலத் துன்பத்துள் மூழ்கியிருந்தாள்.

இவர்கள் இங்ஙனம் வருந்திக்கொண்டிருக்க, மணிபல்லவத்தில் கடலருகே மணலில் துயின்ற மணிமேகலை, துயிலுணர்ந்து, சுதமதியைக் காணப்பெறாது, இடமும் தோற்றங்களும் வேறாயிருப்பதை அறிந்து திகைத்து, சுதமதியை அத்தீவத்துப் பல இடங்களிலும் தேடியும் காணப்பெறாமையால், பல சொல்லிப் புலம்புகிறவள், கொலையுண்டிறந்த தன் தந்தை கோவலனை நினைந்து புலம்பிக்கொண்டிருந்தாள். அங்ஙனம் புலம்பிக்கொண்டிருப்பாள் முன்னர், இந்திரனால் இடப்பெற்றதும் பழம்பிறப்பை உணர்த்துவதுமான புத்தபீடிகை தோன்றியது. தோன்றலும், மணிமேகலை விம்மிதங் கொண்டு பரவசமாய்க் கரங்கள் தலைமேற்குவிய, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, பீடிகையை மும்முறை வலம் வந்து தொழுது, தன் பழம்பிறப்பு நிகழ்ச்சிகளையும் தெய்வம் தன்னை அங்குத் தூக்கிக்கொண்டு வந்ததையும் உணர்ந்து, அத்தெய்வத்தின் வருகையை எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது மணிமேகலா தெய்வம், மணிமேகலையின் பக்குவத்தை அறிந்து, ஆகாயத்தினின்றும் இறங்கி வந்து, அவளுக்கு முற்பிறப்பில் கணவனாயிருந்த இராகுலன் வரலாற்றையும் அவனே இப்போது உதயகுமாரனாய்ப் பிறந்திருக்கிறான் என்பதையும் கூறி, ஆகாய வழியே சஞ்சரிக்கச் செய்வதும், உணவின்றியே இருக்கச் செய்வதும், வேறு வடிவம் அளிப்பதுமாகிய மந்திரங்கள் மூன்றை அவளுக்கு உபதேசித்துவிட்டு அகன்றது.

அப்பால் மணிமேகலை, அத்தீவிலுள்ள புளினங்களையும், பொய்கைகளையும், பூஞ்சோலைகளையும் பார்த்துக்கொண்டே உலாவி வருகையில் பெண் ஒருத்தி எதிர்ப்பட்டாள்; அவள் மணிமேகலையை நோக்கி, "மிக்க துயரத்தோடு தனியே திரியும் நீ

யார் ?' என்று கேட்டாள். அதற்கு மணிமேகலை தன்னுடைய சென்ற பிறப்பின் செய்திகளையும் இப்பிறப்பின் வரலாற்றையும் கூறி, "உன் வரலாறு யாது?" எனக் கேட்க, அவள், "இத்தீவிற்கு அயலிலுள்ள இரத்தினதீவத்திலே மிக உயர்ந்து விளங்கும் சமந்தகூடமலையின் உச்சியிலே உள்ள புத்ததேவரின் அடியிணைப்படிமங்களைத் தரிசித்துவிட்டு இத்தீவிற்கு முன் ஒரு காலத்தில் வந்தேன்; அது முதல் இந்திரன் கட்டளையால் இத்தரும பீடிகையைக் காத்துக்கொண்டிருக்கிறேன்; என் பெயர் தீவதிலகை என்பது," என்று தன் வரலாறு கூறிப் புத்தபீடிகையின் மகத்துவத்தையும் அதனைத் தரிசித்து மணிமேகலை பழம்பிறப்புணர்ந்ததையும் புகழ்ந்து கூறினாள். கூறியவள், ஆபுத்திரன் கோமுகிப் பொய்கையில் முன் ஒரு நாள் விட்ட அக்ஷயபாத்திரத்தை மணிமேகலையின் கையிற்படுத்த எண்ணி, "இப்பீடிகைக்கு முன்னே மாமலர்க்குவளையும் நெய்தற்பூக்களும் கலந்து, கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சி ஒன்றுளது; அப்பொய்கையுள் அமுதசுரபி என்னும் அக்ஷயபாத்திரம் அமிழ்ந்திருக்கின்றது; அஃது ஒவ்வொருவருடத்திலும் புத்ததேவர் அவதார காலமாகிய வைகாசி சுத்த பூர்ணமை நாள்தோறும் மேலே வந்து தோன்றுகின்றது; அந்நாள் இந்நாளேயாம்; அது தோன்றும் வேளையும் இதுவே; இப்போது அப்பாத்திரம் அருளறம் பூண்ட உனது கரத்தில் வருமென்று கருதுகின்றேன். அதில் எடுக்கும் அன்னம் எடுக்க எடுக்க மேன்மேலும் வளர்ந்துகொண்டே வரும்; அதன் வரலாற்றைப் பின்பு புகார் நகரத்து அறவணவடிகளிடம் கேட்டுணர்வாயாக," என்று மணிமேகலைக்குச் சொன்னாள். சொல்லலும், மணிமேகலை அதனை விரைந்து பெறுதற்கு விரும்பிப் புத்தபீடிகையை வணங்கிக் கோமுகிப் பொய்கையை அடைந்து வலமாக வந்து நின்ற அளவில், அப்பாத்திரம் மணிமேகலையின் கையை அடைந்தது. உடனே அவள் அளவற்ற மகிழ்ச்சி எய்திப் புத்த தேவரின் திருவடிகளைத் துதித்து நின்றாள். இங்ஙனம் நின்ற மணிமேகலைக்குத் தீவதிலகை,

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்

பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி."

எனப் பசித்துன்பத்தின் கொடுமையையும்,

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே."

என அப்பசியை ஆற்றுவோரது சிறப்பையும் கூறி அறிவுறுத்தினுள்.

இதனை அறிந்த மணிமேகலை, "குழந்தையின் முகத்தைக் கண்டு பால் சுரந்தளிக்கும் தாய் போல, ஏழைகளது முகத்தைக் கண்டு இரங்கி, இப்பாத்திரம் மேன்மேலும் அவர்களுக்கு அமுது சுரந்தளிக்கும் அற்புதத்தைக்காணும் விருப்புடையேன்," என்று கூறித் தீவதிலகையோடு சிறிது நேரம் அளவளாவியிருந்து, அவளைப்பணிந்து விடைபெற்று,புத்த பீடிகையைத் துதித்து, ஆகாய கமன மந்திரத்தை உருவிட்டு மேலெழுந்து ஆகாயவழியே புகார் நகரஞ்சென்று, தன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மாதவி சுதமதி இருவரையும் கண்டாள்; அவர்கள் வியப்படையும் வண்ணம் அவர்களுக்கு முற்பிறப்பைத் தான் அறிந்தபடியே உணர்த்தி, "இது ஆபுத்திரனது திருக்கரத்திலிருந்த அமுத சுரபி; இதனைத் தொழுமின்," என்று அக்ஷய பாத்திரத்தைச் சுட்டிக் கூறித் தொழும்படி செய்தாள். பின்பு தவவழியைப் பெறும்பொருட்டு அறவணவடிகளை அடைவதற்கு அவர்களையும் அழைத்துக்கொண்டு அவர் இருக்கும் இடத்தை விசாரித்தறிந்து, அவரைத் தரிசித்துப் பணிந்து, உவவனஞ் சென்றது முதல் மணிமேகலா தெய்வத்தால் மணிபல்லவஞ் சென்று புத்த பீடிகையைத் தரிசித்துப் பழம் பிறப்புணர்ந்து அமுத சுரபியைப் பெற்றது வரையுமுள்ள நிகழ்ச்சிகளைக் கூறித் தனக்குத் தருமோபதேசம் புரிந்து ஆபுத்திரன் வரலாற்றையும் தெரிவிக்கும்படி வணங்கிக்கேட்டாள். அதற்கு அம்முனிவர் மகிழ்ந்து, "சில நாள் கழித்து உனக்குத் தருமோபதேசம் செய்வேன்; நீ உயிர்மருந்துபோன்றதாகிய இவ்வமுத சுரபியைக்கொண்டு பசிப்பிணியை உலகில் ஒழிப்பாயாக," என்று கூறிவிட்டு மணிமேகலை விருப்பப்படி ஆபுத்திரனது வரலாற்றைக் கூறத்தொடங்கி, அவன் பிறந்த

தும், வளர்ந்ததும், அமுதசுரபி பெற்றதும், மணிபல்லவத்தில் உயிர் நீத்ததும், பின்பு சாவகநாட்டில் புண்ணிய ராசனாய்ப் பிறந்து அரசு செய்வதுமாகிய வரலாறனைத்தையும் விரித்துக் கூறினார்.

பின்னர் மணிமேகலை, அறவணவடிகளின் கட்டளையின் படி அந்நகரத்து ஆதிரை என்னும் கற்புடைப் பெண்டின் கையால் முதன்முதல் அமுதசுரபியில் பிச்சையிடப் பெற்று, அதினின்றும் வளரும் உணவால் பசித்தோர் பசியைப் போக்கி, காயசண்டிகை என்னும் வித்தியாதர மங்கையின் தீராப்பசி யாகிய யானைத்தீயையும் (பஸ்மக நோய்) நீக்கினாள். பின் னும் பல விசேட நிகழ்ச்சிகளைக் காவிரிப்பூம்பட்டினத்துள் நிகழ்த்திவிட்டு, அமுதசுரபிக்கு உரியவனாகிய புண்ணியராசனைக் கண்டு புத்தபீடிகையைத் தரிசிக்கச் செய்து, அவனுக்கு அவ னது பழம்பிறப்பை உணர்த்தி நல்வழிப்படுத்தக் கருதினாள். அதனால், அவள் அறவணவடிகள், மாதவி, சுதமதி இவர் களிடம் விடை பெற்றுக்கொண்டு ஆகாய வழியே சென்று, சாவக நாட்டில் புண்ணிய ராசனது நகர்ப்புறத்து ஒரு சோலையை அடைந்து, அங்குள்ள ஒரு முனிவனை வணங்கி, "இந்நகரின் பெயர் யாது? இதனை ஆளும் மன்னவன் யாவன்?" என்று வினவினாள். அம்முனிவன், "இந்நகரின் பெயர் நாகபுரம் என்பது. இதனை ஆள்பவன் பூமிசந்திரன் மகனாகிய புண்ணியராசன். அவன் பிறந்த நாள் தொட்டு இந்நாட்டில் மழை வளம் பிழைத்ததில்லை. பூமியும் மரமும் பல பலன்களைச் சுரந்தளிக்கின்றன; உயிர்கள் நோயிகந்து சுகமாய் வாழ்கின் றன," என அவ்வரசன் பெருமை முதலியவற்றை அவளுக்கு விரித்துரைத்தனன். அவ்வமயம் புண்ணியராசன், தன் பெருந் தேவியோடு அச்சோலைக்குள் வந்து, ஆண்டுள்ள தரும சாவகர் என்னும் முனிபுங்கவரை வணங்கி, அறவுரை கேட்டு அங்கிருந்தவன், முனிவர் அருகிலிருந்த மணிமேகலையை நோக்கி, "ஈடுமெடுப்புமில்லாத இப்பேரழகினள், கையிற்பிச்சைப் பாத்திரமுடையவளாய் அறவுரை கேட்கின்றாள்; இவள் யார்?" என்று வினவினான். அதற்கு அருகே நின்ற சட்டை இட்ட பிரதானி அரசனை வணங்கி, "இந்நாவலந்தீவில் இந்நங் கையை ஒப்பார் ஒருவருமிலர். முன்னொரு காலத்தில் கிள்ளி

வளவனோடு நட்புச்செய்யக் கருதி, நான் காவிரிப்பூம்பட்டினம் சென்றிருந்த காலத்து அங்கேயுள்ள அறவணவடிகள் என்பார், இவள் வரலாற்றை விளங்கக்கூறினாரென்று முன்னே உரைத்திருந்தேனல்லவா? அவளே இவள்,'' என்று கூறினன். கூறலும், மணிமேகலை அரசனை நோக்கி, "அரசே, உன் கையிலிருந்த பிச்சைப் பாத்திரமே இது; இப்போது என் கையிற் புகுந்தது; செல்வக்களியால் தெரியாது மயங்கினை போலும்! சென்ற பிறப்பையும் நீ அறிந்திலை; என் செய்தனை! மணிபல்லவஞ் சென்று புத்த பீடிகையை வலங்கொண்டு தொழுதாலன்றி உனது பழம்பிறப்பின் செய்தியை அறியாய்; ஆதலால், அரசே, அங்கே விரைந்து வருவாயாக,'' என்று சொல்லிவிட்டுத் தான் எழுந்து ஆகாயவழியே சென்று, சூரியன் மறைதற்கு முன்னர் மணிபல்லவத்தில் இறங்கிப் புத்த பீடிகையை வலங்கொண்டு தொழுதாள். அது வழக்கம் போல அவளது பழம்பிறப்பை அறிவித்தது. அவள் அதனை வியந்து அங்கே தங்கியிருந்தனள்.

புண்ணியராசன், மணிமேகலை கூறிய செய்தியைக்கேட்ட அளவில் மிக வியப்புற்று, இப்பிறப்பின் வரலாற்றையும் சென்ற பிறப்பின் வரலாற்றையும் அறியவேண்டுமென்ற ஆசை தூண்டுதலால், அச்சோலையினின்றும் விரைந்து புறப்பட்டு நகரையடைந்து, தன்னை வளர்த்த தாயாகிய அமரசுந்தரியைக் கண்டு, தனது பிறப்பு வரலாற்றை உரைக்கும்படி கேட்டான். அவள் அவன் வரலாறு முழுவதையும் கூறினாள். அரசன் அதனைக்கேட்டு வருத்தமுற்று, அரசாட்சியில் வெறுப்புக்கொண்டு, தான் துறவியாய் மணிபல்லவம் செல்வதற்குத் துணிந்து, தன் கருத்தை வெளியிட்டான். அதனைக்கேட்ட சனமித்திரன் என்னும் மந்திரி, புண்ணியராசனை வணங்கி, "அரசரே, வாழ்க! என் சொற்களைக் கேட்டருளவேண்டும்: உம்மை நம் அரசர் பெறுவதற்கு முன்னர் இந்நாட்டில் பன்னிரண்டு வருடம் மழை பெய்யாமையால் வறுமை மிகுந்தது; உயிர்களெல்லாம் பசியால்வருந்தின; அக்காலத்தில் நீர் கோடைகாலத்தில் மழை தோன்றினாற்போலத் தோன்றினீர். அங்ஙனம் நீர் தோன்றிய பின் இந்நாட்டில் எல்லா வளங்களும் நிரம்பின; உயிர்கள் பசித்துன்பமுதலான துன்பங்களில்லாமல் வாழ்வனவாயின; நீர் இச்சமயம் இந்நாட்டை விட்டு நீங்குவீராயின்,

எல்லா உயிர்களும் தாயைப்பிரிந்த குழந்தைகள் போலக் கூவி அழாநிற்கும்; இத்தன்மையுடைய இவ்வுலகத்தை நீர்காவாமல், உமது நலத்தையே கருதிச் செல்லுதல் தகுதியன்று; எந்த நன்மையும் தன்னுயிர்க்கென்று நினையாது பிற உயிர்களுக்கே என்று கருதி உழைக்கும் புத்த தேவனது அறம் இஃதல்லவே!" என்று கூறினன். அரசன் அது கேட்டு, "மணிபல்லவத்தை வலங் கொண்டு வணங்க வேண்டுமென்று என்னுள்ளத்தில் எழுந்த வரம்பு கடந்த ஆசையைத் தணித்தல் அரிது; ஆதலால், நான் அங்குச்சென்று வருவேன்; யான் வருவதற்குப் பிடிக்கும் ஒரு மாத காலம் வரை இந்நகரைப் பாதுகாப்பது உமது கடமை யாகும்," என்று மந்திரியை நோக்கிக் கூறிவிட்டுப் புறப்பட்டு, வழிக்கொண்டு கடற்கரையை அடைந்து, மரக்கலமேறி மணி பல்லவத்தை அடைந்தான். உடனே மணிமேகலை எதிர் வந்து அழைத்துச்சென்று, அவனோடு அத்தீவை வலமாகச்சுற்றிப் புத்தபீடிகை அருகில் வந்து, "பழம்பிறப்பை அறிவிக்கும் தருமபீடிகை இது," என்று காட்டினள்; அவ்வளவில் அர சன் அதனைத் தரிசித்து அன்போடு வலங்கொண்டு துதித்தான். துதிக்கவே, அப்பீடிகை அவனுக்கும் பழம்பிறப்பின் செய்தியை நன்ருகத் தெரிவித்தது. அவன் அதனைத் தெரிந்து வியப் படைந்து, தனக்கு முற்பிறப்பில் ஒரு நாள் இரவில் அமுதசுரபி என்னும் அக்ஷயபாத்திரத்தை அளித்த சிந்தா தேவியைச் சிந்தித்து,

'அமுத சுரபி யங்கையில் தந்தென்
பவம்அறு வித்த வானோர் பாவாய்!
நாமாசு கழுவும் நலங்கிளர் திருந்தடி
பிறந்த பிறவிகள் பேணுத லல்லது
மறந்து வாழேன் மடந்தை!'

என்று துதித்தான். பின்னர் அவன், மணிமேகலையுடன் எழுந்து தென்மேற்குத் திசையிற்சென்று, கோமுகிப் பொய் கைக் கரையில் ஒரு புன்னை மரத்து நிழலிலே இருந்தான். இருக் குங்கால், அவர்கள் வருகையை அறிந்த அத்தீவின் காவல் தெய் வமாகிய தீவதிலகை, அங்கு வந்து அவர்களைக் கண்டு, புண்ணி யராசனை நோக்கிச் சில சொல்லத்தொடங்கி, "அக்காலத்தில்

இத்தீவில் உன்னை மறந்து தனியே விட்டுவிட்டு மரக்கலம் ஏறிச்சென்ற ஒன்பது செட்டிகள், பின்பு உன்னைக் காணாது வருந்தி இத்தீவிற்கு மீண்டு வந்து, உன்னைத் தேடி, நீ இறந்து போன வரலாற்றைத் தெரிந்து, தாங்களும் உடனே உண்ணா விரதம் பூண்டு உயிர் துறந்தார்கள்; அவர்களுடைய உடல் எலும்புகள் இவை; காண்பாயாக; அச்செட்டிகளது உபகாரத்தைப் பெற்று உடன் வந்தார் சிலர், அவர்கள் இறந்தது தெரிந்து பிரிவாற்றாது தாங்களும் உயிர் துறந்தார்கள். அவர்களுடைய உடல் எலும்புகள் இவை; காண். உனக்கு அரச பதவியை அளித்த அன்பு மயமான உனது பழைய உடம்பின் என்பு இப்புன்னை மரநிழலில் அலைகள் குவித்த மணலால் மூடப்பட்டிருப்பதையும் பார்ப்பாயாக; இங்ஙனம் உன்னுயிரையும் உனக்கிரங்கிய பிற உயிர்களையும் கொன்ற கொலைஞனாகிய நீயன்றோ, இப்போது சாவகநாட்டுப் புண்ணியராசனாய் விளங்குகின்றாய்! இஃது என்ன விந்தை!" என்று அவனைப் பழிப்பவள் போலப் புகழ்ந்து கூறினாள். அரசன், மணலைத் தோண்டித் தன்னுடைய பழைய உடம்பின் என்புகளைக்கண்டு ஆச்சரியமும் துக்கமும் கொண்டு மயங்கி நின்றான்.

புண்ணியராசனை நோக்கி இச்செய்திகளை உரைத்த தீவதிலகை, பின்பு மணிமேகலையை அன்புடன் நோக்கிக் கூறத் தொடங்கி, "மணிமேகலாய், உங்கள் நகரத்து அரசன் கிள்ளிவளவன், ஆண்டுதோறும் நடத்தும் இந்திர விழாவைச் செய்யாது மறந்தபடியால், மணிமேகலா தெய்வத்தின் சாபப்படி காவிரிப் பூம்பட்டினத்தை இப்போது கடல் கொண்டது; அரசன் முதலாயினோர் வேறிடம் சென்றனர்; அறவணவடிகளோடு உன் தாய் மாதவியும், தோழி சுதமதியும் யாதொரு வருத்தமுமின்றிச் சேரனது நகரமாகிய வஞ்சிமாநகரம் புகுந்தனர்; இனி நீ அவ்வஞ்சிமாநகரம் செல்வாயாக," என்று சொல்லிப் போய்விட்டாள்.

மணிமேகலை வஞ்சிமாநகரம் செல்லக் கருதியவள், பழைய உடம்பின் எலும்பைக் கண்டு மயங்கிய சாவகநாட்டரசனுக்குச் சிறந்த அறநெறியை எடுத்துரைத்து, அவனை அவனது நகரத்துக்குச் செல்லும்படி சொல்லிவிட்டுத் தான் ஆகாய கமன மந்தி

ரத்தை உருவிட்டு மேலெழுப்பி, வஞ்சிமாநகரம் புகுந்தாள். புண்ணியராசன் மரக்கலமேறிச் சாவக நாடு (Java Island) சேர்ந்து, தன்னகரம் புகுந்தான். அவன் பின்னர்ப் பழம்பிறப்பின் நிகழ்ச்சிகளை எல்லாம் எண்ணி எண்ணி, மணிமேகலையின் உபதேசப்படி துறவறம் புகுந்து முத்தி அடைந்தான்.

வஞ்சிமாநகர் புகுந்த மணிமேகலை, பல சமய வாதிகளைக் கண்டு உரையாடி அவர்களுடைய கொள்கைகளையெல்லாம் உணர்ந்துகொண்டாள். பின்னர் மணிமேகலை தன் தாய் மாதவியும் அறவணவடிகளும் காஞ்சிமா நகருக்குச் சென்றுவிட்டனர் என்பதைக் கேள்வியுற்று, அங்குச்சென்று, அறவணவடிகளைக் கண்டு தனக்குப் புத்த தர்மத்தை உபதேசிக்க வேண்ட, அவர் அங்ஙனமேயுபதேசித்து, "மனத்திருள் நீங்கும்," என்று கூறி, ஞானதீபத்தை நன்கு காட்டினர். மணிமேகலை, "பிறவித்துன்பம் ஒழிவதாக!" என்று அந்நகரிலேயே நோற்றுக்கொண்டிருந்தாள்.

11. பூகம்பம்

[P. T. செல்லப்பா, B. A., M. Sc.]

இயற்கையின் எழிலைக் கண்டு களிக்காத மனிதனில்லை; புகழ்ந்து பாடாத புலவனில்லை; அழகொழுக எழுதாத ஓவியனில்லை. இயற்கையோடு இணைந்த மானிட வாழ்க்கையே சாலச் சிறந்ததெனஅறிஞர் கூறுவர். இத்தகைய இன்பமும், எழிலும், விநோதமும் நிறைந்து விளங்கும் இயற்கையில் தோன்றும் பூகம்பம், எரிமலைகள், பேய்க்காற்று, பெருவெள்ளம் முதலிய கொடிய நிகழ்ச்சிகளை நினைத்தாலே உள்ளம் நடுக்குறும். இவ்வியற்கை இன்னல்களைக் களைவதில் இதுகாறும் மனிதன் வெற்றியடையவில்லை.

பீகாரில் 1934ல் பெரிய பூகம்பம் ஏற்பட்டது. மூன்று நிமிஷங்களில் பல நகரங்கள் அழிந்தன; பல்லாயிரக்கணக்கான மக்கள் மாண்டார்கள். அடுத்த ஆண்டில் குவெட்டாவில் பெரும்பூகம்பம் இரவில் ஏற்பட்டதனால், சுமார் 35,000 மக்கள் மாண்டு போனார்கள். 1950-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி இரவு 7-40 மணிக்கு அஸ்ஸாம் மாகாணத்தில் பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டது. இந்நில நடுக்கம் இது

வரை உலகில் ஏற்பட்ட பூகம்பங்களிலெல்லாம் மிகக்கடுமையானதும் பன்னாட்கள் நீடித்து நாசம் விளைவித்ததுமாகும். இந்தியாவின் சுதந்தர விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்த அஸ்ஸாம் மக்கள், சிதறி ஓடினார்கள் ; கீழே விழாமலிருப்பதற்காகத் தெருக்களில் சென்றவர் ஆங்காங்கே உட்கார்ந்துவிட்டனர். வீடுகளிலிருந்தவர் வெளியே வந்தனர். இந்நில நடுக்கத்தால் மலைகள் சரிந்தன; ஆறுகள் வெள்ளப் பெருக்கெடுத்துத் திசை மாறி ஓடின ; மேடுகள் பள்ளமாயின ; பாலங்கள் சாலைகள் முதலிய போக்குவரத்து வசதிகள் அழிந்தொழிந்தன ; ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்தார்கள் ; பல்லாயிரம் கால்நடைகள் நாசமாயின ; அஸ்ஸாமின் பூகோள அமைப்பே மாறிவிட்டதெனலாம்.

இத்தகைய கொடிய பூகம்பம் எப்படி ஏற்படுகிறதென்பதற்குப் பல நாட்டு மக்கள், பல கதை கூறுவார்கள். ஜப்பானியர், 'பூமிக்கடியில் ஓர் எட்டுக்கால் பூச்சி இருக்கிறது ; அதன் பெயர் ஜிஷின்முஷி. அது அசையும்பொழுது தன் மேலிருக்கும் பூமியையும் ஆட்டுகிறது,' என்பர். மங்கோலியர், பூகம்பம் ஒரு வாத்தால் ஏற்படுகிறதென்றும், அமெரிக்கர் ஓர் ஆமையால் ஏற்படுகிறதென்றும் கதை கூறினர். ஆனால், விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாகப் பூகம்பத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து உண்மைக் காரணத்தை ஒருவாறு அறிந்திருக்கின்றார்கள். முதலில் பூமி தோன்றிய வரலாற்றைப் பார்ப்போம் :

பல கோடி ஆண்டுகளுக்கு முன் ஞாயிறு தன்னைச் சுற்றிக் கிரகம் ஒன்றுமில்லாது தனித்து இயங்கிக்கொண்டிருந்த போது, திடீரென்று நட்சத்திரம் ஒன்று அதன் அண்மையில் வந்ததாம். அப்போது அவற்றிற்கிடையே ஏற்பட்ட கவர்ச்சி காரணமாக ஞாயிற்றின் சில பாகம் தெறித்தனவாம். அவ்வாறு தெறித்த பகுதிகளில் ஒன்றே நாம் வசிக்கும் பூமி என்று சொல்லப்படுகிறது. ஞாயிற்றினின்றும் தெறித்த இப்பூமி, நெருப்பு மயமாய் நெடுங்காலம் அந்தரத்தே சுழன்றுகொண்டிருக்கும் போது சிறிது சிறிதாகச் சூடு ஆறத் தொடங்கியது. இற்றைக்கு 60 கோடி ஆண்டுகளுக்கு முன் இப்பூமியின் மேலோடு குளிர்ந்திருக்கலாமென விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

பூமியின் மேலோடு குளிர்ந்த பின் பல இயற்கைக் குழப்பங்கள் நிகழ்ந்தன. ஞாயிற்றைப் பூமி சுற்றி வரும் பாதை மாறுபட்டதோடு, தன் நிலையினின்றும் சற்றுச் சரிந்தும் சுழல ஆரம்பித்தது. அப்பொழுது பூமியின் உள்ளே உள்ள நெருப்புக் குமுறி எழுந்து அனற்குழம்புகளை வெளியில் இறைத்தது. அதனால், பல தடவைகளில் நிலம் கடலாகவும், கடல் நிலமாகவும் மாறின. பெரிய எரிமலைகள் தோன்றின. பூமியின் வெப்பம் ஆறுதலால் உண்டான அதன் மேலோட்டின் கனம் 32 மைல் என நிலநூல் வல்லுநர் கூறுகின்றனர்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அதை மூடி, சூடு ஏற்றினால், நீர் ஆவியானவுடன் மூடியைத் தூக்கி எறிந்துவிட்டு வெளிக்கிளம்பும் சத்தி வாய்ந்தது. அது போல, பூமியின் நடுப்பாகம் இன்னமும் அனற்குழம்பாய் இருப்பதால், அவ்வனலின் சூட்டினாலும் அதிக அமுக்கத்தினாலும் அகப்பட்டுக்கொண்ட ஆவிப்படலம் தக்க சமயம் வாய்த்ததும் பூமியின் மென்மையான பகுதியினைத் தேடிப்பிடித்துப் பேரொலியுடன் வெடித்துக் கற்குழம்புகளையும் புகைப் படலத்தையும் கக்கும். இதற்கு எரிமலை என்பது பெயர். இவ்வெரிமலை வெடிப்பால் பேரதிர்ச்சி, பூமியின் மேற்பரப்புவரை பரவி, நில நடுக்கத்தை உண்டாக்குகிறது. இஃதொரு காரணம்.

இயற்கைக் குழப்புகளால் தோன்றிய பெரிய மலைகள் பூமியின் ஊடே சரியாக நிலைகொள்ள இறுகும். அப்பொழுது பூமியின் நடுவிலுள்ள கற்குழம்பு சுருங்கும். சுருக்கம் அதிகமாகின்ற பொழுது பூமியினுள் பிளவு தோன்றும். இப்பிளவு நெடுந்தூரம் பரவினால், பூமியின் மேல் பாகத்தில் திடீரென விரிசல் ஏற்படும். இதன் விளைவாகப் பெரிய மலைகளும் நிலமும் சரிந்து விரிசலில் விழுந்து பின் அதனை மூடிவிடும். சில சமயங்களில் விரிந்த இடம் தெளிவாகத் தெரியும். இந்நிலச் சரிவின் நடுக்க அலை வெகு தொலைவிற்குப் பரவி நில நடுக்கத்தையும் பீரங்கி முழக்கம் போன்ற பேரொலியையும் உண்டாக்கும். இவ்வதிர்ச்சி திடீரென ஏற்பட்டால், சேதம் பலமாயிருக்கும். இஃதுமொரு காரணம்.

கடலின் அடியிலுள்ள நிலப்பாகத்தில் சிலசமயங்களில் சில பாகம் அழுங்கிவிடுகின்றன. அப்போது அண்மையிலுள்ள

நிலப்பரப்பை நடுங்கச் செய்வதோடு கடல் அலை அதிக உயரம் கிளம்பிக் கரையோர ஊர்களை அழித்துவிடும். 1755ல் லிஸ்பன் அருகிலுள்ள கடலில் 60 அடி உயரத்தில் அலைகள் மேற்கிளம்பி அந்நகரத்தின் பல்லாயிர உயிரை இரண்டே நிமிஷத்தில் பலி கொண்டன. இத்தகைய அலை மோதலாலேதான் காவிரிப்பூம் பட்டினம், மாமல்லபுரம் முதலிய தமிழ் நாட்டுத் துறை முகப்பட்டினங்கள் அழிந்தன போலும்! இது மற்றொரு காரணம்.

பூமியில் விரிசல் ஏற்பட்ட இடத்தினின்றும் அதிர்ச்சி அலைகள் தோன்றுகின்றன. அவை இரண்டு வகைப்படும். ஒரு வகை அமுக்க அலைகள்; இவ்வலைகள் முன் பின்னுகச் செல்லும். மற்றொரு வகை குறுக்கலைகள்; இவ்வலைகள் கீழும் மேலுமாகச் செல்லும். அமுக்க அலைகளாலேதான் முதல் அதிர்ச்சி ஏற்படும். இவ்விரண்டு அலைகள் காரணமாக ஏற்படும் எதிர் அதிர்ச்சி பூமியின் மேற்பரப்பின்மீது பரந்து செல்லும். இவற்றிற்குப் பரப்பு அலைகள் என்பது பெயர். இவ்வலைகள் மெதுவாகச் சென்றாலும் அதிர்ச்சி பலமாய் இருக்கும்.

இந்நில நடுக்கத்தின் வேகத்தையும் செல்லும் தூரத்தையும் அளந்தறிவதற்கு நில நடுக்கப்பதிவு இயந்திரம் (Seismograph) என்ற கருவியை அமைத்திருக்கிறார்கள். அஸ்ஸாமில் நிகழ்ந்த பூகம்பச்செய்தியை முதன்முதல் டில்லியிலுள்ள நிலநடுக்கப் பதிவு இயந்திரம் அறிவித்தது. பம்பாய்க் கொலாபா நிலையத்திலுள்ள நிலநடுக்கப் பதிவு இயந்திரம், அஸ்ஸாம் பூகம்ப அதிர்ச்சி வேகத்தால் கெட்டுவிட்டதாம்.

பூகம்பம் எப்பொழுது எங்கு ஏற்படும் என்று முன் கூட்டி அறிவிக்கப்படும் நிலையில் இன்னும் விஞ்ஞானம் வளரவில்லை. ஆனால், பூகம்பத்தினால் பெரிய மாளிகைகள், பாலங்கள், அணைக்கட்டுகள் முதலியன முற்றிலும் நாசமாகா வண்ணம் நிருமாணிப்பதில் விஞ்ஞானிகள் ஒருவாறு வெற்றி கண்டுள்ளார்கள்.

12. பாரதியார் தமிழ்ப் புலமை

[நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார், M. A., B. L.]

சமீபத்தில் காலஞ்சென்ற சி. சுப்பிரமணிய பாரதியார் தந்நிகரில்லாத் தமிழ்ப்புலவர். நமக்கு நெருங்கிய காலத்தவராகவே, அவர் கவி நலத்தின் உயர்வை உள்ளபடி அளந்தறிவது அருமையாகும். வெறுப்பவரும் நயப்பவரும் நடுவுநிலையின்றி இவர் இயல்புகளைக் கடையிறந்து காண்பாராவர். நம் கால நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு நவீன ஆதரிசத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு நம்மிடையே பாடும் நம் காலப் புலவர் ஒருவரின் கவிகளை மிதமிஞ்சிப் புகழ்வாரும் வெறுத்து மிகப் பழிப்பாரும் பலராவர்; ஆனால், இத்தகைய புலவரின் கவிகளை, கவி நலம் அறிவதன்றி வேறு நோக்கங்கொள்ளாது, தம் உணர்வைக் கவரவிடாது படிப்பதும், படித்து அவற்றின் இயல்பை அளந்தறிவதும் மிகச்சிலர்க்கே ஆவனவாகும். நடுமை நல்லறிவாளர், பாரதியாரது கவித்திறம் அறிந்து கூறும் நய உரைகள் காணும் வரை, மற்றவர், இப்புலவர் கவிதை நலம் காண முயல்வது தவறென்பது தகாதன்றோ? ஆன வரை இத்தமிழ்ப் புலவர் கவி நலத்தை ஆராய்வோம்:

இவர் பாக்கள், கருத்துக்களை வருத்தமின்றி விளக்கும் பண்டைப் பாவலர் பளிங்கு நடை பயின்று, இளகி ஒளிரும் வெண்பொன் ஒழுக்கும், இனிய ஓசையும், திட்பமும், சுவையும் உடையன. இப்புலவர் நூல்களைப் படிப்பவருக்கு நிகண்டு அகராதிகள் வேண்டா; கள்ளமற்ற உள்ளமும், ஊன்றிய கவனமும், தமிழில் ஆர்வமும் உடையாருக்கு இப்புலவர் இதயம் வெள்ளிடை மலையாம். எளிய இனிய இவர் கவி நடை, நீரொழுக்கு உடையதேனும், வயிரத்தின் திண்மையும் ஒளியும் பெற்று நிற்கும்.

'நீலத் திரைக்கடல் ஓரத்தி லேநின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடை யேபுகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு.

'மாலைப் பொழுதிலொரு மேடைமிசையே
வானையும் கடலையும் நோக்கிஇருந்தேன்;
மூலைக் கடலினை அவ் வானவளையம்
முத்தமிட் டேதழுவி முகிழ்த்தல்கண்டேன்.'

இணைய உருகுபொன் ஒழுக்குடைய ஒப்பற்ற இனிய அடிகளைப் படிக்குந்தோறும் நாவும், கேட்குந்தோறும் செவியும் இனிக்கும்.

அலங்காரங்களுக்கெல்லாம் தாயான உவமையைக் கையாளுவதில் இப்புலவர் பண்டைப் பாவலர் பலருக்கும் இளையாதவர்; இக்காலத்தில் இணையற்றவர். வருந்தித்தேடிப் பொருந்தச் செய்யும் புலவர் பெருமுயற்சியை, நன்றி மறவாது சுமந்து காட்டும் பல புலவர் அணிகளைப்போலன்றி, பாரதியாரின் உவமைகள், இயற்கையினின்று இவர் வாக்கைத் தேடி வந்தடையும். கருத்துக்குப் பொருத்தம் உடைமையோடு, கேட்போர் மனத்தில் பதிந்து மறையாது உறையும் செவ்வி உடையவாம் இவர் உவமை அனைத்தும். இயற்கையினின்று எளிதிலெடுத்துத் தம் கவிதை அமுதருத்தி இவராளும் உவமைகள், இப்புலவர் கற்பனைத்திறனையும், ஒப்புணர் தேர்ச்சியையும் கவிவனை கைவினை முதிர்ச்சியையும், அநாயாச ஆட்சியையும் இனிது காட்டும். பழம்பாட்டுக்களைத் துருவி, பண்டை உவமைகளை உருவி, தம் புலமை நிறுவக் கருவியாக்கும் இழிசெயலை அறவே வெறுத்தவர் இப்புலவர்.

> ‘தேனை மறந்திருக்கும் வண்டும்—ஒளிச்
> சிறப்பை மறந்துவிட்ட பூவும்,
> வானை மறந்திருக்கும் பயிரும்—இந்த
> வையம் முழுதுமில்லை தோழீ!’
>
> ‘கண்ணன் முகமறந்து போனால்—இந்தக்
> கண்கள் இருந்துபயன் உண்டோ?’

என வருவன பல உவமைகளையுங் காண்க. உவமான உவமேய இயைபுகளும், அவைகளின் அழகும், கவிகளில் இவற்றின் அமைப்பும் விசதமாக எடுத்து விரிப்பதானால், இவற்றிற்கே பல வியாசங்கள் வேண்டும். கேவலம் பண்புகளையும் மனோபாவ எண்ணங்களையுமே உருவகப்படுத்தி, அவற்றின் உதவி கொண்டு, தம் கோள் நிறுவுதலில் இவர் கைவந்த சமர்த்தர்.

இவரைக் குற்றமற்ற மதுரகவி என்னலாம். இவர் சித்திர கவிக்கு மித்திரரல்லர். பண்டை முறைப்படி விஸ்தாரப்படுத்தி யாதொரு நூலுஞ் செய்ய இவர் விரும்பினதாய்த் தெரியவில்லை. வெளி வந்த ‘**பாஞ்சாலி சபதம்**’ ஒத்த சில சிறு காவி

யங்களையும், அச்சேருத 'சேற்றூர் உலா' அன்ன சில ஒரு துறைக்காதற்பனுவல்களையும் இவர் செய்ததுண்டு. இவர் இயற்றிய ஒரு பொருள் நுதலிய பல துறைக் கோவைகளில், 'கண்ணன் பாட்டும்,' 'சுதேச கீதங்களுமே' தலை நின்ற சிறப்புடையனவாம். கவிதொறுங்கனியும் தேனும், அடிதொறுங் கமழுங் கண்டும் தெவிட்டாத சுவை தருவனவாகும்.

பண்டு தொட்டுப் பாவலர் நால்வகைப் பாவிலும் இயற்றியுள்ள பனுவல்கள் ஆயிரக் கணக்கானவை. திருத்தக்க தேவரும், கம்பரும் விருத்தப்பாவை வீறு பெறச் செய்தது முதல், பிந்திய புலவரெல்லாம் பாக்களின் பண்பையும் பயனையும் அறவே மறந்து, விருத்தப்பா இனத்திற்கே அரசுரிமை தந்து வைத்தார். விருத்தமல்லாப் பல துறைப் பாவினங் கொண்டெழுந்து, விழுமிய தனிப்பனுவலாகப் புலவர் போற்றுவது, தற்கால உலகில் கலிங்கத்துப்பரணி ஒன்றே. இந்நிலையில் தமிழகத்தெழுந்த நம் புலவர், தனிப்பாசுரங்களால் தலைநின்ற தம் கவித்திறத்தை எவ்வகைப் பாவினுங்காட்ட வல்லராயினும், தாம் தொகுத்த பனுவல்கள் பலவும் இசையோடு பாடத்தகும் பாவினப் பாட்டுக்களைக்கொண்டே செய்து அமைத்து வைத்தார். நம் கவிஞரின் புதுக் கருத்துக்களுக்கும், நாடு மொழி மதங்களோடு குறுகாமல் மக்கள் நலத்தோடு விரிந்த விசால நோக்கத்துக்கும், உலக முழுதும் பரந்து வந்து நமது நாட்டையும் இடக்கும் புதுக்கிளர்ச்சிக்கும் மிகுந்த பொருத்தம் உடையதாகத் தம் கவி உள்ளம் கனிந்துருகி அலைந்தெழும் உணர்வு வெள்ளத்தை வழிப்படுத்தித் தமிழ்ப் பெருமக்களை ஊக்கி, அவர்க்கு ஆக்கம் தருவதற்கு இசை இனிக்கப் பாடுவதே கடன் என்றறிந்த புலவர், அக்கருத்து மேற்கொண்டும், இப்புது வழிப் புகுந்து, தமிழருக்குப் புதிய உணர்ச்சியும் தமிழுக்குப் புதுப் புத்தணிகளும் தேடித் தந்துளார்.

எதுகை மோனைகளைத் தேடிப் பொருளிழந்து திண்டாடும் பாக்களால் புண்பட்ட தமிழ் மகள், தொட்டதெல்லாம் பொன்னாக்கும் இவர் பாவன்மை வேதுபெற்று, ஆறுதலும் மகிழ்வும் அடைவாள். பாப்பா பாட்டு, முரசுக் கவிகளால் மிழன்று; பள்ளும், கிளிப் பாட்டும் பயின்று; விடுதலை, தாய்நாடு

பாடி; பாஞ்சாலி சபதம் கூறி; கண்ணன் பாட்டு, ஜீவன் முக்திகளில் வீறிய இவர் கவிதை நலம், பண்ணேறி விண்ணுயர்ந்து உலாவுவதாகும். சமயம், ஆசாரம், சமுதாய ஒழுக்கம் ஆகியவற்றுள் சம திருஷ்டியும், சர்வாபி அனுதாப நிறைவும் இவர் பாத்தொறும் பரவி விரவும். எனைத்தானும் தற்காலத் தமிழுலகில் இவரொத்தாரைக் காண்பதரிது; மிக்கார் இலராவர்.

13. முட்டை அளவு தானியம்*

[மொ. அ. துரையரங்கனார், M. O. L.]

ஒரு நாள் சில சிறுவர், உலர்ந்த கழனி ஒன்றில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அங்கு ஒரு வெடிப்பில் தானியம் போன்ற ஒன்றை அவர்கள் கண்டெடுத்தார்கள். அதன் நடுவில் பள்ளமாய் ஒரு கோடு இருந்தது. அந்தப்பொருள் ஒரு கோழி முட்டை அளவு பெரியதாய் இருந்தது. அவர்களுக்கு அஃது இன்னதென்பது புரியவில்லை. அவ்வழியே வந்த ஒரு வழிப்போக்கன் அதைக்கண்டான். அதைப்பார்க்க அவனுக்கும் மிக வியப்பாய் இருந்தது. எனவே, குழந்தைகளிடம் காலணாக் கொடுத்து, அதை அவன் வாங்கிக்கொண்டான். வாங்கிக்கொண்டவன், அதை அரசனிடம் கொண்டு போய், விநோதமான பொருள்களுள் ஒன்றாக நல்விலைக்கு விற்றுவிட்டான்.

அந்தப்பொருள் இன்னது என்பது அரசனுக்குப் புரியவில்லை. தன் நாட்டிலிருந்த அறிவாளர் எல்லாரையும் அரசன் வரவழைத்து, அதை இன்னதென்று அறிந்து கூறுமாறு அவர்களிடம் கொடுத்தான். அறிஞர் யாவரும் அஃது யாதாயிருக்கலாமென்று பல வகையாலும் ஆராய்ந்து பார்த்தனர். ஆனால், அவர்களுக்கும் விளங்கவில்லை. அவர்களது ஆராய்ச்சிக்கென அமைத்த அறையின் சன்னல் ஓரத்தில் அது கிடந்தது. ஒரு நாள் அந்த அறைக்குள் தற்செயலாக ஒரு பெட்டைக்கோழி புகுந்து, அந்தப் பொருளைத் தன் அலகால் குத்தி ஒரு துளை செய்தது. அதைக் கண்டதும் அந்த அறிஞர்கள், அஃது ஒரு தானிய மணியாய் இருக்க வேண்டும் என்று

* இது ருஷ்ய நாட்டு அறிஞர் தால்ஸ்தாய் என்பவர் எழுதிய கதையைத் தழுவி எழுதப்பட்டது.

முடிவு செய்துகொண்டு, அரசனிடம் சென்று, 'இது ஒரு தானியமணி,' என்றார்கள்.

அது கேட்டதும் அரசன் அளவில்லாத வியப்படைந்து, எப்போது எங்கே அப்படிப்பட்ட தானியம் விளைந்திருக்கலாம் என்பதைக் கண்டுபிடித்துக் கூறுமாறு அவர்களையே கேட்டான். அந்த அறிவாளிகள் மறுபடியும் அது குறித்து ஆராய்ந்தார்கள்; தாங்கள் பயின்ற நூல்களையெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள். ஆனால், அதைப்பற்றி, அவற்றால், அவர்கள் ஒன்றுமே அறிய முடியவில்லை. ஆகவே, அவர்கள் அரசனிடம்வந்து, "அரசரே, உங்களுக்கு நாங்கள் எந்தவகையாலும் தெளிவான விடை கூற முடியாது. நாங்கள் பயின்ற புத்தகங்களில் அது பற்றிய ஒரு குறிப்பும் கிடைக்கவில்லை. உழவர்களையெல்லாம் அழைத்துக் கேட்டால், ஒருவேளை உண்மை உணரலாம். ஒருவேளை அவர்கள் தங்கள் தந்தைமார்களிடமிருந்து எப்பொழுது, எங்கே அவ்வளவு பெரிய தானியம் விளையலாயிற்று என்பதை அறிந்திருக்கலாம்," என்று சொல்லி முடித்தார்கள்.

அது கேட்ட அரசன், வயது முதிர்ந்த ஓர் உழவனை அழைத்து வரும்படி சொன்னான். கிராமத்தார்கள், அவன் கட்டளைப்படியே ஒருவனை அழைத்து வந்தார்கள். அவன் வயது முதிர்ச்சியால் உடல் வளைந்திருந்தான்; அவன் தலை முடியும் தாடியும் நரைத்திருந்தன; உடலும் வெளுத்திருந்தது; வாயில் பற்களில்லை. அவன் இரு தடிகளை ஊன்றிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து, அரசன்முன் வந்து நின்றான்.

அரசன், அந்தத் தானிய மணியை அவனிடம் காட்டினான். கிழவனால் அதை நன்றாகப் பார்க்க முடியவில்லை; எனினும், அவன் அதைத் தன் கையில் எடுத்துத் தடவிப்பார்த்தான். சிறிது நேரம் பொறுத்து, அரசன், "கிழவா, இப்படிப்பட்ட தானியம் எங்கே விளைந்தது? நீ எப்போதாவது இத்தகைய தானியத்தை விலைக்கு வாங்கியிருக்கிறாயா? அல்லது உன்னுடைய வயல்களில் பயிரிட்டிருக்கிறாயா?" என்று கேட்டான்.

கிழவனுக்குக் காதும் சரியாகக் கேட்கவில்லை. அரசன் கேட்டதைப் புரிந்துகொள்வதற்கே அவனுக்கு நெடுநேரம்

ஆயிற்று. கடைசியாக அவன், "அரசரே, நான் இத்தகைய தானியத்தை என் வயலில் விதைத்ததும் இல்லை; அறுத்ததும் இல்லை; எப்போதும் விலைக்கு வாங்கினதாகவும் எனக்கு நினைவில்லை. நாங்கள் விலைக்கு வாங்கின தானியமெல்லாம் இப்பொழுதிருப்பன போலவே சிறியனவாயிருந்தன; என்றாலும், என் தந்தையாரைக் கேட்டுப் பாருங்கள். அவர் ஒரு வேளை இத்தகைய தானியம் எங்கே விளைந்தது என்பதை அறிந்திருக்கலாம்," என்றான்.

கிழவனுடைய தந்தையை அரசனுடைய வேலைக்காரர்கள் தேடி அழைத்து வந்தார்கள். அவன் வயதானவனாய் இருந்த போதிலும் ஒரே ஒரு தடியைத்தான் ஊன்றிக்கொண்டு வந்தான். அரசன் அந்தத் தானியத்தை அவனிடம் காட்டினான். அவன் பார்வை நன்றாகவேயிருந்தது. எனவே, அவன் அதை நன்றாக உற்று நோக்கினான். பின்பு அரசன் கிழவனைப்பார்த்து, "கிழவா, இத்தகைய தானியம் எங்கே விளைவது வழக்கம் என்பதைத் தயவு செய்து கூறுவாயா? எப்போதாவது இத்தகைய தானியத்தை நீ விலைக்கு வாங்கியிருக்கிறாயா? அல்லது உன்னுடைய வயல்களில் பயிரிட்டிருக்கிறாயா? சொல்," என்று கேட்டான்.

கிழவனுக்குக் காது சிறிது மந்தமாய் இருந்ததெனினும், அவன் தன் பிள்ளையைவிடச் சிறிது நன்றாகவே கேட்க முடிந்தது.

"இல்லையரசரே, நான் எப்பொழுதும் இத்தகைய தானியத்தை என் வயல்களில் விதைத்ததும்இல்லை; அறுத்ததும் இல்லை, என் காலத்தில் காசு என்பது ஏற்பட்டதில்லை. ஆகவே, நாங்கள் ஒன்றையும் விலைகொடுத்து வாங்கினதும் இல்லை. நாங்கள் ஒவ்வொருவரும் தனித்தனி தேவையான தானியத்தை விளைவித்துக்கொள்வோம்; தேவை உண்டானால், பண்டமாற்றுதலே நாங்கள் செய்துகொள்வோம். இத்தகைய தானியம் எங்கே விளைந்ததென்பது எனக்குத் தெரியாது. இந்தக்காலத்துத் தானியத்திலிருந்து கிடைப்பதைவிட எங்கள் காலத்துத் தானியத்திலிருந்து அதிக மாவு கிடைக்கும். அந்தத் தானியம் பெரியதாய் இருக்கும். ஆனால், இதைப்போன்ற தானியத்தை நான்

எப்பொழுதும் பார்த்ததே இல்லை. என்றாலும், என் தந்தையார் தம் காலத்தில் விளைந்த தானியம் எங்கள் காலத்தில் விளைந்த தானியத்தைவிட அதிக மாவு தரும் என்றும், அது மிகப் பெரியதாய் இருக்கும் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறேன். எனவே, என் தந்தையாரை அழைத்துக் கேட்டுப்பாருங்கள்,'' என்று கிழவன் சொன்னான்.

இது கேட்ட அரசன், கிழவனுடைய தந்தைக்கு ஆளனுப்பினான். அவன் தடியினுதவியில்லாமலே, எளிதாக நடந்து வந்தான். அவனுடைய கண்கள் தெளிவாய் இருந்தன; காதுகளும் நன்றாகக் கேட்டன. தெளிவாகவே அவன் பேசினான். அரசன் அவனிடம் அந்தத்தானிய மணியைக் காட்டினான். அவன் அதை உருட்டி உருட்டிப்பார்த்தான்; "ஆ! நான் இத்தகைய தானியமணியைக் கண்டு நெடுங்காலமாயிற்று!" என்று சொல்லிக்கொண்டே, அதில் சிறிது கடித்துச் சுவைத்தும் பார்த்தான்; "அதே இனத்தைச் சேர்ந்ததுதான்!" என்றான்.

"எப்பொழுது எங்கே இத்தகைய தானிய மணி விளைந்தது? நீ எப்போதாவது இத்தகைய தானிய மணியை விலைக்கு வாங்கினதுண்டா? உன் வயல்களில் எப்போதாவது விதைத்திருக்கிறாயா?" என்று அரசன் கேட்டான்.

அது கேட்ட அந்தக் கிழவன், "அரசரே, அக்காலத்தில், எங்கே பார்த்தாலும் இத்தகைய தானியமே விளைந்து வந்தது. இத்தகைய தானியத்தை உண்டுதான் நான் இளமை முதல் வளர்ந்து வந்தேன்; மற்றவர்களுக்கும் இதைக்கொண்டுதான் உணவளித்து வந்தேன். இத்தகைய தானியமே நாங்கள் விதைப்பதும், அறுப்பதும், அம்பாரமாக்குவதும் வழக்கம்,'' என்றான்.

அது கேட்ட அரசன், "ஐயா, முதல் முதல் நீ அதை எங்காவது வாங்கி வந்து விதைத்தாயா, அல்லது நீயே ஆரம்பத்திலிருந்து பயிர் செய்து வந்தாயா? சொல்,'' என்றான்.

அது கேட்ட கிழவன், சிரித்து, "அரசரே, என் காலத்தில் உணவுப்பொருளை வாங்குவது, விற்பது என்னும் பாவத்

தொழிலை நாங்கள் நினைத்தது கூட இல்லை. எங்களுக்குப் பணம் என்றாலே என்ன என்பது தெரியாது. ஒவ்வொன்றுக்கும் தேவைக்குமேல் தானியம் குவிந்து கிடக்கும்,'' என்றான்.

''அப்படியானால் உன் நிலம் எங்கே இருக்கிறது? நீ இத்தகைய தானியத்தை எங்கே பயிரிட்டாய்?'' என்று அரசன் கேட்டான்.

''என் நிலமா! கடவுள் படைத்த உலகம் முழுவதும் என்னுடையதுதான். எங்கே எங்கே உழுதேனோ, அங்கே அங்கே எல்லாம் நிலம் எனக்குச் சொந்தமே. நிலத்தை வாங்குவது, விற்பது என்பது அந்தக்காலத்தில் இல்லை. 'தனது' என்பது அக்காலத்தில் ஒன்றுமில்லை. உழைப்புத்தான் அக்காலத்தில் ஒவ்வொருவருக்கும் சொந்தமாய் இருந்தது,'' என்றான் கிழவன்.

''இன்னும் இரண்டு கேள்விகளுக்கு மட்டும் பதிலளிக்க வேண்டும்: அப்பொழுது இத்தகைய பெரிய தானியத்தைத் தந்த நிலம் இப்பொழுது ஏன் தருவதில்லை? உன் பேரன் இரண்டு தடிகளை ஊன்றிக்கொண்டு நடக்க, உன் மகன் ஒரே தடியை ஊன்றிக்கொண்டு நடக்க, நீ மட்டும் ஒன்றின் உதவியுமில்லாமல் நடக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறாயே! உன் கண்கள் நல்ல ஒளியை உடையனவாய் இருக்கின்றனவே! உன் பற்களும் நல்ல நிலையிலிருக்கின்றனவே! பேச்சும் தெளிவாகவும், கேட்பதற்கு இனிமையாகவும் இருக்கின்றதே! இந்த மாறுதல்களெல்லாம் எப்படி உண்டாயின?'' என்று கேட்டான் அரசன்.

''மக்கள் தங்கள் உழைப்பினால் வாழ்வதை விடுத்து மற்றவர்கள் உழைப்பைக்கொண்டு வாழத்தொடங்கிய நாள் முதல் இந்த மாறுதல்கள் ஏற்படலாயின. பழைய காலத்தில், மக்கள் கடவுள் சட்டத்தை மீறாமல் வாழ்ந்து வந்தார்கள்; தங்கள் உழைப்பால் கிடைத்தவற்றைத் தங்களுடையவை என்று பாராட்டி வாழ்ந்து வந்தார்கள்; மற்றவர்கள் உண்டாக்கியவற்றைத் தங்களுடையவை என்று எப்பொழுதும் வஞ்சித்ததே இல்லை,'' என்று கிழவன் பதில் கூறினான்.

14. நிலவளமும் நீர்வளமும்

(Fertility of Land and Irrigation Works.)

[Dr. J. S. பொன்னையா, M. A.,]

1. நமது தேசத்தில் நூற்றுக்கு எழுபத்தொன்பது பேர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஏன் இம்முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்களென்று ஆராயுங்கால், நமது தேசம் பயிர்த்தொழில் செய்வதற்கு ஏற்ற இயற்கை வளங்களுடன் நன்கமைந்திருப்பதே முக்கிய காரணம் என்பது விளங்கும்.

சிந்து கங்கை நதிகளின் சமவெளி :

2. வருடத்தில் ஏறக்குறைய முந்நூற்றறுபத்தைந்து நாளும் இரு கரையும் புரண்டோடும் சில பெரிய நதிகளும் மற்றும் அநேக சிறிய நதிகளும் நம் நாட்டில் உண்டு. வடவிந்தியாவில் சிந்து, கங்கை, பிரமபுத்திரா என்னும் பெரிய நதிகளும் அவற்றின் எண்ணிறந்த கிளை நதிகளும், ஆயிரக்கணக்கான மைல் பரப்புள்ள நிலங்களுக்கு நீர் வளம் அளிக்கின்றன. கங்கை சிந்து நதிகளின் நடுவே இருக்கும் சமவெளி, இரண்டாயிரம் மைல் நீளமும் இருநூறு முதல் ஐந்நூறு மைல் வரை அகலமும் உள்ளது. இப்பெரிய சமவெளி முழுவதிலும் ஒரு சிறு மலையேனும் குன்றேனும் காண்பதரிது. இங்கே வருடத்தில் 80 அங்குலத்திற்குமேல் மழை பெய்கிறது. ஆகையால், இச்சமவெளிப் பிரதேசம் முழுவதிலும் சிறுபான்மை கோதுமையும் பெரும்பான்மை நெல்லும் விளைகின்றன.

பர்மா நாட்டு வளம் :

3. இந்தியாவிற்குக் கிழக்கேயிருக்கும் பர்மா நாடு நிலவளமும் நீர்வளமும் நிரம்பியது. உலகத்தின் மற்றெல்லாப் பாகங்களைக்காட்டிலும் அங்கு மழை அதிகம். வருஷத்தில் சுமார் 400 அங்குலம் வரையும் அங்கு மழை பெய்கிறது. எனவே, நெடுந்தூரம் வரைக்கும் பச்சைக்கம்பளம் விரித்தாற்போல அழகாய்க் காணப்படும் நெல் வயல்கள் பல அங்குள்ளன. இந்தியாவின் நெல்விளைவில் 100க்கு 71 பாகம் பர்மாவில் விளைவதெனின், அந்நாட்டின் வளத்திற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

தென்னிந்தியாவிலுள்ள நதிகள் :

4. தென்னிந்தியாவிலும் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணை, காவேரி என்னும் பெரிய நதிகளும், பாலாறு, தாம்பிரபர்ணி முதலான சிறிய நதிகளும் பாயும் தீரங்கள் நெற்பயிருக்கேற்ற வளங்கள் நிறைந்துள்ளன.

நீர்ப்பாய்ச்சல் ஸ்தாபனங்கள் :

5. இயற்கையிலேயே அமைந்துள்ள இந்நதிகளைத் தவிர, வேளாண்மைக்கு அநுகூலமாக மனிதர் வெட்டியுள்ள கால்வாய்களும் (Canals) பலவுள. அவற்றுள் முக்கியமானவை பின் வருவனவாம் : 'ஷெர்ஷா' (Sher Shah) என்னும் மகமதிய அரசன், வடவிந்தியாவில் வெட்டியுள்ள 'சீனுப்' (Chenab) கால்வாய் அநேக மைல் நீளமுள்ளது. அது பாயும் தீரத்தில் ஆறு கோடி ரூபாய் மதிப்புள்ள கோதுமை வருடந்தோறும் விளைகிறது. 'பிரோஸ்ஷா' (Feroz Shah) என்னும் அரசன் வெட்டிய 'ஜம்னு' (Jumna)க் கால்வாயும் அவ்வளவு சிறப்பு வாய்ந்தது. அங்ஙனமே தென்னிந்தியாவில் விஜயநகர அரசரான கிருஷ்ணதேவ ராயர் கட்டிய 'துங்கபத்திரா' (Tungabadra) என்னும் கால்வாயையும், ராஜராஜசோழன் காவிரிநதியில் அணைக்கட்டி உண்டுபண்ணியிருக்கும் கால்வாயையும் கண்டு வியவாதவர் இல்லை. நாம் இங்குக் கூறினவை பெருங் கால்வாய்கள் : தேசத்தின் நாநாதிசைகளிலும் பரவிக்கிடக்கின்ற சிறு கால்வாய்களோ, எண்ணிறந்தன.

6. இவையன்றி, இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் போது அரியனவும் பெரியனவுமாகிய பல நீர்ப்பாய்ச்சல் ஸ்தாபனங்கள் (Irrigation works) ஆங்காங்கே அமைக்கப் பெற்றுள்ளன. காவிரி நதியிற் கட்டப்பட்டுள்ள மேல் அணைக்கட்டும் (Upper Anicut), கீழ் அணைக்கட்டும் (Lower Anicut) வியக்கத்தக்கன. மேட்டூர் என்னும் ஊருக்கருகில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டு (Mettur Dam) சமார் 7 கோடி ரூபாய்ச் செலவில் முடிவானது ; அதனுல், நீர்ப்பாய்ச்சலுக்குப் புதிதாகக் கொண்டுவரப்படும் நிலம் 3 லக்ஷம் ஏக்கர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வடவிந்தியாவில் 1933-ஆம் வருடத்திற் கட்டி முடித்த 'சுக்கூர் பாரேஜ்' (Sukkur Barrage) என்னும் நீர்த்தேக்கம் (Storage works) உலகத்தி

லுள்ள எல்லா நீர்த்தேக்கங்களிலும் பெரியது; அது 18 கோடி ரூபாயில் அமைக்கப்பட்டது; 80 லக்ஷம் ஏக்கர் நிலத்திற்கு நீர் வளம் அளிக்கிறது; இதுகாறும் வெறுநிலமாயிருந்து இந்நீர்த் தேக்கத்தால் வளம் பெறும் நிலையிலுள்ள 'சிந்து' (Sind) நாடு இனி 'நீல' நதி (the Nile) பாய்வதனால் வளம் பெற்றிலங்கும் எகிப்துத் தேசம் (Egypt) போலாகும் எனக் கருதப்படுகின்றது. மேலும், வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் ஆங்கிலேயரால் அமைக்கப்பட்ட சின்னஞ்சிறிய எண்ணிறந்த நீர்ப் பாய்ச்சல் ஸ்தாபனங்கள் வேறு பல உள்ளன. சுதந்தர இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட தேசியத் திட்டமிடும் கமிஷன், இந்தியாவின் உணவு உற்பத்தியைப் பெருக்கி நாட்டைத் தன் நிறைவுள்ளதாக்க, மத்திய நீர்ப்பாசன ஸ்தாபனத்திடம், நாட்டின் நீர்ப்பாசன மின்சார அபிவிருத்திக்காக 1800 கோடி ரூபாய்ச் செலவில் 15 வருஷத்திட்டமொன்றை இவ்வாண்டில் சமர்ப்பித்திருக்கிறது. இத்திட்டமும், ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களும் நிறைவேற்றி வைக்கப்படுமானால், புதிதாக 420 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்குமென்றும், அதிகப்படியாகச் சுமார் 140 லட்சம் டன் உணவு தானியம் கிடைக்குமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களினால் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதோடு, புதிதாக 70 லட்சம் கிலோவாட்டு மின்சாரமும் கிடைக்கும்.

7. நாட்டில் பல வேறு பாகங்களிலும் இப்போது 135 நீர்ப் பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவை அனைத்துக்கும் 590 கோடி ரூபாய் செலவாகும். இவற்றில் 12 பெரிய திட்டங்களும், 24 நடுத்தரத் திட்டங்களும், 99 சிறு திட்டங்களும் உள்ளன.

8. இத்திட்டங்கள் பூர்த்தி பெற 6 முதல் 10 வருடங்கள் பிடிக்குமென்றும், இவற்றின் விளைவாக மேற்கொண்டு 129 லட்சம் ஏக்கர்ப் புது நிலங்கள் சாகுபடிக்கு வருமென்றும், 43 லட்சம் டன் தானியம் அதிக மகசூலும், 20 லட்சம் கிலோவாட்டு மின்சாரமும் கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

9. நதிகளும் கால்வாய்களும் பாயாத மேட்டுப்பிரதேசங்களிலும் உள் நாட்டிலும் கணக்கற்ற ஏரிகளும் குளங்களும்

கிணறுகளும் வெட்டப்பட்டிருப்பதைக் காணலாம். இயல்பில் வேளாண்மை செய்வதற்குதவாத நிலங்கள் இத்தகைய செயல் முறைகளால் திருத்தப்பட்டுச் சோளம் கேழ்வரகு போன்ற தானியங்களும், எள் வேர்க்கடலை போன்ற எண்ணெய் வித்துக்களும், கரும்பு பருத்தி போன்ற விலையேறப்பெற்ற விளை பொருள்களும் விளைவிக்கத்தக்க சிறந்த நிலங்களாய் மாறியிருக்கின்றன.

வளங்குன்றிய பிரதேசங்கள் :

10. இயற்கையிலேயே வளம் நிரம்பிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று எனப் பூகோளசாஸ்திரிகள் கூறுவதற்கு நாம் மேற்காட்டிய உதாரணங்களே தக்க சான்றாகும். எனினும், நமது தேசத்தில் சிற்சில பாகங்கள் வளங்குன்றியவையாகக் காணப்படுகின்றன. வடவிந்தியாவில் *ராஜபுதனமும்* (Rajaputana) சிந்து நாட்டின் ஒரு பாகமும் அத்தகையன ; அங்கு வருஷத்தில் ஐந்து அங்குலம் மழைகூடப் பெய்வதில்லை. பர்மாவின் மத்திய பாகமாகிய '*அரக்கான் யோமா*' (Arakan Yoma) என்ற பிரதேசத்திலும் மழை மிகக்குறைவே. தக்ஷிண பீட பூமியிலுள்ள ஹைதராபாது மைசூர் முதலான பிரதேசங்களில் சில பாகங்கள் பெருங்கற்காடானவை. மேலும், சிந்து கங்கை நதிகளின் சமவெளிப் பிரதேசத்தைத் தவிர, மற்றெல்லாப் பாகங்களின் செழிப்பும் பருவக்காற்றுக்களின் (Monsoons) மூலம் பெய்யும் மழையைச் சார்ந்துதான் இருக்கிறது எந்த வருடத்திலேனும் மழை குறையின், அந்த வருடத்தில் வேளாண்மை கெட்டுப்படும்; இரண்டு மூன்று வருடங்களாகத் தொடர்ந்து மழை பெய்யாவிடின், நாட்டிற் பஞ்சமேற்பட்டுவிடும். இவ்வாறு அநாவிருஷ்டியால் ஏற்படக்கூடிய இடைஞ்சல்களைத் தடுப்பதற்காகவே நீர்ப்பாசன ஸ்தாபனங்கள் பெருஞ்செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

15. சாதுரியம்

[T. செல்வக்கேசவராய முதலியார், M.A.]

மனிதருடைய காரியசித்திக்குக் காரணம் சாமர்த்தியம். சாதாரண சாமர்த்தியத்தால் மாத்திரமே காரியங்கள் சித்தியாவது துர்லபம். இடம் காலம் முதலியவற்றிற்கேற்ற சாமர்த்தியத்தால் காரியசித்தி சுலபமாகும். இங்ஙனம் சமயோசிதமான சாமர்த்தியமே சாதுரியம் என்பது. கெண்டையைப் போட்டு வராலை இழுப்பதும், காற்றுள்ள போது தூற்றிக்கொள்வதும் சாதுர்யமே, 'கல்லைக் குத்துவானேன், கை நோகிறதென்றழுவானேன்?' என்று சும்மா இருப்பதும், 'மௌனம் கலக நாஸ்தி,' என்று சில சமயங்களில் பேசாமலிருப்பதும் சாதுரியமே.

> "கொக்கொக்க கூம்பும் பருவத்து ; மற்றதன்
> குத்தொக்க சீர்த்த விடத்து."

என்றதும் இதுவே.

> "வினையால் வினையாக்கிக் கோடல், நனைகவுள்
> யானையால் யானையாத் தற்று."

என்றபடி, கம்புக்குக் களைவெட்ட அழைத்துக்கொண்டு போய்த் தம்பிக்குப் பெண்கொள்ள முடிவுசெய்ததும் சாதுரியமேயன்றோ! அவ்விதமான சாதுரியம் லௌகிக சித்திக்கு இன்றியமையாதது. இது சிலருக்கு இயற்கையில் அமைந்திருக்கும் சமயோசிதமான சாமர்த்தியமாகையால், இதற்குப் பொது விதி இல்லை. ஆயினும், சில உபாயங்களை அறிந்திருப்பது உபயோகமாகும்.

எல்லாரியல்புகளும் அறிந்து ஒவ்வொருவரிடத்தும் மேதை மரியாதை தவறாமல் உபசாரமாக ஒத்து நடப்பது கஷ்டமன்று. அதனால், நஷ்டம் ஒன்றும் இல்லை ; எல்லாருக்கும் மகிழ்ச்சியே உண்டாகும். பணத்தால் விளையாத பல நன்மைகள் இதனால் விளையும். இங்ஙனம் எல்லாருக்கும் மகிழ்ச்சி உண்டாகும்படி நடப்பதை இளமையிலேயே பழகிக்கொள்ளல் வேண்டும். வயதேறின பிறகு இந்த வழக்கம் உண்டாவது ஏகதேசம். வேறு விசேஷத்திறமை இல்லாதவர் அநேகர், இவ்வித ஆசார உபசாரங்களால் லௌகிக சித்தி அடைகின்றனர் ; இவைகளை

அனுசரிக்காதவர், மிக்க திறமை வாய்ந்திருந்தும், வீணாக விரோதிகள் ஏற்பட்டு இடர்ப்படுவாராகின்றனர். மற்றவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும்படி நடப்பதனால் நமக்கு மகிழ்ச்சியே உண்டாவது அநுபவத்தில் பிரத்தியக்ஷமாகும்.

இங்ஙனம் நடப்பதில் முக்கியமாய்க் கவனிக்கத்தக்க உபாயங்களுள் ஸம்பாஷணை ஒன்று. எவரெவரோடு எதெதை எவ்வளவெவ்வளவு பேசலாம் என்பதறிந்து, நமக்குரிய வரம்பிலே நின்று பேச வேண்டும். பேச்சின் நிமித்தமாக வீண் வார்த்தை பேசுவது குற்றம். அதைக்காட்டிலும், பேசாதிருத்தலால் பிழை ஒன்றுமில்லை. பரிஷ்காரமாய்ப் பேசாமலிருப்பதும் யுக்தமல்ல. ஆவதற்கும் பேச்சே காரணம்; அழிவதற்கும் பேச்சே காரணம். ஆகையால், முன் பின் பார்த்து மிதமாகப் பேசுதல் வேண்டும். மிதமாகப் பேசுவதையும் பட்டுக்கத்தரித்தது போல ஒழுங்காகப் பேசுதல் வேண்டும்.

நாம் சொல்வதை மற்றவர்கள் கவனிக்கும் விதமாகச் சொல்லுதல் வேண்டும். வித்தியா மமதை திரவிய மமதை முதலிய காரணங்களால் பராமுகமாக இருப்பார் சிலர் உண்டு. நாம் அதைப் பாராட்டாமலிருப்பதே நன்மை. மற்றவர்கள் சொல்வதை நாம் கவனமாகக் கேட்பவர்கள் என்றறிந்தால், நம்மை உருக்கமுடையவர்கள் என்று கொண்டு, நம்மிடம் அன்பு அதிகரித்துச் சிலர் தம்முடைய கஷ்டநஷ்டங்களை நம்மிடத்தில் முறையிட்டுக்கொண்டு, தக்க யோசனை சொல்லும்படி வேண்டுவர். அதனால், அவர்களுக்கு ஹிதமான ஆலோசனைகளை எடுத்துரைத்தலான நன்மை நேரிடும்.

சாராயத்தை வார்த்துப் பூராயம் கேட்பார் சிலர். எச்சரிக்கை அற்றிருக்கிற சமயம் பார்த்து ஏதோ ஒன்றைக்கேட்டு, நாம் வெளியிடலாகாத ரகசியத்தைக் கிரகிக்க முயல்வர் சிலர். ஆதலால், வினாவிடைகளைக்கொண்டு அவர்களுடைய நோக்கத்தை உள்ளபடி அறிந்தே, வெளியிடக்கூடிய விஷயங்களை வெளியிடல் வேண்டும்; மற்றவைகளை அடக்கி வைத்தல்வேண்டும். 'மனத்தில் இருக்கும் ரகசியம், மதிகேடனுக்கு வாயிலே.'

கவிகளுடைய கருத்தின் ஆழத்தையும் கண்டறியலாம்: மனிதருடைய மனத்தின் ஆழத்தை உள்ளபடி கண்டறிவது எளிதன்று. 'நீராழங் கண்டாலும் நெஞ்சாழங் காண முடியாது.' உள்ளும் புறமும் ஒத்திருப்பவர் மிகச் சிலரே. அநேகர் நெஞ்சில் நினைப்பது ஒன்று; வாயினால் சொல்லுவது வேறொன்று. ஆகவே, வார்த்தையால் மனத்தை அறிவது அசாத்தியம். வார்த்தையின் அளவாக மாத்திரமே ஒருவனை நாம் சத்துருவென்றும் மித்துருவென்றும் கொள்ளலாகாது. முகத்துக்கு முகம் கண்ணாடி.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்."

வஞ்சனையில் பழகி முதிர்ந்தவர்களை முகத்தால் மாத்திரமே அறிவதும் எளிதன்று. முகத்தைக்காட்டிலும் கண்ணானது ஒருவன் கருத்தை நன்குணர்த்தும். மிக்க யூகை உள்ளவர்கள், கண்ணின் குறிப்பால் கருத்தை அறியலாம். அங்ஙனம் அறிந்து, அவரவர்களுக்கேற்ற விதமாக வார்த்தை சொல்லுவது, காரிய சித்திக்கு அனுகூலமாகும்.

கோபத்தால் ஒருவர் வெட்டெனப் பேசினாலும், நாம் பொறுமையோடு சாந்தமாக வார்த்தை சொன்னால், அவர் கோபம் தானே தணிந்து போகும். கோபத்துக்கிடங்கொடுத்தால் காரியம் கெடும். பயமுறுத்தியும் பலாத்காரம் பண்ணியும் ஆகாத காரியங்கள், நயத்தால் ஆகும். 'நயமொழியால் ஜயமுண்டு.'

பேசும்போது கரவடமில்லாமல் தெளிவாகவும் சுருக்கமாகவும் பேசுதல் வேண்டும். நிஷ்கபடமாய் நேர்மையாகப் பேசுவது நல்லதே. ஆயினும், ஓட்டை வாயாகப் பேசுவதும் சரியல்ல. நம்மைப்பற்றியாவது நமது சார்பிலாவது நமக்கு விரோதமாயாவது அதிகம் பேசுவது யுக்தமல்ல. வீண் மனஸ்தாபத்தையும் துக்கத்தையும் விளைவிக்கும் விஷயங்களை இடையிடையிலே சுட்டிப்பேசுதலாகாது. நிர்நிமித்தமாகப் பரிகாச வார்த்தைகள் பேசிச் சிநேகபங்கம் உண்டாக்குவது பேதைமை.

16. நல் மரமும் நச்சு மரமும்

[R. P. சேதுப்பிள்ளை, B.A., B.L.,]

ஒரு நாள் ஓர் அரசிளங்குமரன் தன் தோழனைத் துணைக்கொண்டு கானகத்தில் வேட்டையாடச் சென்றான். அங்கு அவன் வேட்டவாறு வேட்டையாட வேங்கையும் வேழமும் அகப்படாமையால், எங்கும் அலைந்து திரிந்து அலக்கணுற்றான். பசியால் மெலிந்து வெயிலால் உலர்ந்து இருவரும் தளர்ந்து சோர்ந்தார்கள்; அப்பொழுது நெடுந்தூரத்தில் ஒரு சிற்றூர் தோன்றக் கண்டு, அவ்வூரை நோக்கி மெல்ல நடந்து சென்றார்கள். கதிரவன் வெம்மையால் அரசிளங்குமரன் தலைநோயுற்றுத் தன் தோழனது தோளைப் பற்றிக்கொண்டு வழி நடந்தான். அவ்வூரின் அருகே வந்த போது இருவரும் மெய் சோர்ந்து நாவரண்டு அடி வைத்து நடப்பதற்கும் வலியற்றாராயினர். அப்போது இருவரையும் இன்முகங்கொண்டு எதிர் சென்று அழைப்பது போல இளந்தென்றல் எழுந்து வந்தது. அம்மெல்லிய பூங்காற்றின் இனிமையால் புத்துயிர் பெற்ற இருவரும், அகமும் முகமும் மலர்ந்து, தென்றல் எழுந்து வந்த திசை நோக்கிச் சென்றார்கள். அவ்வழியில் இளந்திரைகளோடு இலங்கிய ஒரு பொய்கை இனிது அமைந்திருந்தது. அப்பொய்கையில் விளங்கிய வெண்டாமரைகளில் அன்னங்கள் அமர்ந்து துயின்ற அழகு கண்களைக் கவர்ந்தது. நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் துயின்ற இயற்கை வனப்பைக் கண்ட இளவரசன், துணைவனை நோக்கி,

"தோயும் திரைகள் அலைப்பத்
தோடார் கமலப் பள்ளி
மேய வகையில் துஞ்சும்
வெள்ளை யன்னம் காணாய்!"

என்று தான் பெற்ற இன்பத்தைத் தோழனும் பெறுமாறு எடுத்துரைத்தான்.

அப்பொய்கையில் இலங்கிய அழகிய மலர்கள் முகமலர்ந்து இருவரையும் அருகே அழைப்பன போல அசைந்தன. அவ்வாவியின் தன்மையும் செம்மையும் கண்ட இருவரும் தாய்முகம் கண்ட சேய் போல மனம் களித்து அந்நல்லீரைப் பருகி மகிழ்ந்தார்கள். அருந்தாகத்தால் வருந்திய இருவருக்கும் திரை திரை

யாகத் தெண்ணீரை வாரி வழங்கும் தன்மை போல அடுக்கடுக்காக அலைகள் கரையருகே வந்து சேர்ந்தன. தாகம் தணிந்து மனமும் மெய்யும் குளிர்ந்த பின்னர், இருவரும் அக்குளத்தின் ஈரக்கரையில் இனிதமர்ந்து அங்கு வீசிய இளங்காற்றை நுகர்ந்து இன்புற்றார்கள். அப்போது அவ்வாவியின் அருகே கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் கனிகளைத் தாங்கி, குளிர் நிழல் விரித்து நின்ற ஓங்கிய மரமொன்றைக் கண்டார்கள். அதன் நிழலில் தங்கி இளைப்பாற எண்ணி இருவரும் அங்குச் சென்றார்கள். கதிரவன் வெம்மையைத் தடுப்பதற்கு ஓங்கிய பாசிலைப் பந்தர் வேய்ந்தாற்போல விளங்கிய மரத்தின் நிழலில் இருவரும் மேலாடையைப் பாயலாக விரித்து மெல்லிய இளங்காற்றில் இனிது துயின்றார்கள். மாளிகையில் அனிச்ச மலரினும் மெல்லிய மஞ்சத்தில் துயிலும் அரசிளங்குமரன், இலைகளாலும் தழைகளாலும் அமைந்த இயற்கைப் பந்தரின் கீழ் இனிது துயின்றான். அம்மரக் கொம்புகளில் பைங்கிளிகள் தாவி விளையாடுவதும் குயில்கள் மறைந்து நின்று கூவுவதும் மனத்தை மிக மகிழ்வித்தன. இத்தகைய இனிய நிழலில் இருவரும் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தார்கள். சில நாழிகை சென்ற பின்னர், தோழன் துயிலொழிந்து எழுந்தான். எங்கும் பசுமை நிறமும், பறவை ஒலியும், பழத்தின் மணமும் நிறைந்திருப்பினும், பசியின் கொடுமையைப் பொறுக்கலாற்றாது வருந்தினான்; கற்பகத் தருவெனக் கவின் பெற விளங்கிய மரக்கொம்புகளை நயந்து நோக்கினான்; அவற்றில் பொன் நிறமான பழங்கள் கொத்துக் கொத்தாய் எம்மருங்கும் இலங்கக் கண்டான்; அப்பொழுதே அம்மரக் கிளைகளின் வழியாய் மேலே சென்று இருவரது அரும்பசியைத் தீர்ப்பதற்குப் போதிய கனிகளைக்கொய்து வந்து துணைவனைத் துயிலினின்றும் எழுப்பினான். கனிகளின் நிறத்தைக் கண்டும், நறுமணத்தை நுகர்ந்தும், தீஞ்சுவையைத் துய்த்தும் இருவரும் இன்புற்றார்கள். பின்னும் சிறிது பொழுது அம்மரத்தின் நிழலில் அமர்ந்திருக்கையில், அரச குமரனது தலை நோய் மிகுந்தது. தலை நோய் தீர்க்கும் வகையறியாது, தோழன் திகைத்து, எவரேனும் அவ்வழி வருவாரோ என்று எதிர் நோக்கி இருந்தான். இவ்வாறு இருக்கையில் அவ்விடத்தை நோக்கி ஒரு முதியோன் வந்து சேர்ந்தான். "தலைக்

குத்தைத் தீர்க்கும் மருந்து உங்களிடம் உண்டோ?" என்று தோழன் அவனை வினவினான். அப்பொழுது முதியோன் புன்னகை பூத்து, "கையில் வெண்ணெயிருக்க நெய்தேடி அலையும் வெள்ளியரும் உண்டென்பதை இன்று நேராக அறிந்தேன்! இம்மரத்தின் பட்டையில் சிறிது செதுக்கி அதன் சாற்றைத் தலையிற் பிழிந்தால் எவ்வகைத் தலைக்குத்தும் தீர்ந்துவிடுமே!" என்று சொல்லி அப்பாற்சென்றான். இதை அறிந்த துணைவன் அளவிலா மகிழ்வடைந்து, அம்மரப்பட்டையின் சாற்றை மன்னன் மைந்தனது தலையிற்பிழிந்தான். சிறிது நேரத்தில் அரசிளங்குமரனது தலைக்குத்து அறவே ஒழிந்தது.

அந்நிலையில் தோழன், தலை நோய் தீர்ந்த தனி இளங்குமரனை நோக்கி, "ஐயனே, நாம் இருவரும் கானகம் சென்றது முதல் இதுவரையில் நிகழ்ந்த செயல்களை நினைவில் நோக்குவோமாயின், இவ்வுலகியல் இனிது விளங்குவதாகும். நாம் பசியாலும் வெயிலாலும் நலிந்து மெய் தளர்ந்து வருந்தும் நிலையில் இப்பொய்கை நம்மை அன்புடன் அழைத்து இன்முகங் காட்டித் தாகம் தணித்துத் தளர்வை மாற்றியது. அப்பால் இந் நல்மரம், நாம் தங்கி இளைப்பாறக் குளிர்நிழல் தந்து பசியாறப் பழங்கள் அளித்துத் தலை நோய் தீர்க்கவும் தனி மருந்தாய் அமைந்தது. இத்தன்மையை நோக்குங்கால், நல்லார் கைப் பட்ட செல்வத்தின் தன்மை நன்கு விளங்குவதாம். வறுமையால் வருந்தி வந்த விருந்தினரை இனிய முகத்தோடு ஏற்று அவரது குறையை நிறை செய்வதே அறிவுடைய செல்வர் செயலாகும். ஆற்று வழியாகவும் ஊற்று வழியாகவும் நன்னீரைத் தன் அகத்தே நிரப்பிக்கொள்ளும் பொய்கை போல, அறிவுடையார் பழுதறு வழிகளால் ஈட்டிய பெரும்பொருள் நிறைந்த பண்ணைகளாய் விளங்குவார்கள். நீர் நிறைந்த பொய்கை எப்பொழுதும் தண்மை வாய்ந்து விளங்குதல் போல, அறிவுடைய செல்வரும் ஈரம் வாய்ந்த நெஞ்சினராய் இலங்குவார்கள். தாகத்தால் வருந்துவோருக்குத் தடையின்றி நீர் வழங்கும் தடாகம் போல, கல்வியும் செல்வமும் பூத்த மேலோர், வறிஞர்க்கு வரையாது பொருள் வழங்கும் வள்ளல்களாய் விளங்குவார்கள். இன்னும், தமக்கென வாழாது பிறர்க்குரியாளராய் வாழும்

பெரியார்பால் அமைந்த செல்வம் ஊருணி நீர் போல ஊரார்க்கே முழுவதும் பயன்படுவதாகும். இதனாலேயே,

> "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
> பேரறி வாளன் திரு."

என்று நாயனார் அருளிப்போந்தார். இவ்வாறே பழுதறு பழங்களைத் தாங்கி நிற்கும் இப்பயன்மரம், தன் இனிய பழங்களால் பசிநோய் அகற்றி, குளிர்நிழலால் களைப்பை மாற்றி, பட்டையால் பிணியைப் போக்கிப் பல வகையாய்ப் பயன்படுதல்போல அறிஞரிடம் அடைந்த செல்வம் வறியார்க்குப் பல வகையாய்ப் பயன் படுவதாலேயே,

> "பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
> நயனுடை யான்கட் படின்."

என்றும்,

> "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
> பெருந்தகை யான்கட் படின்."

என்றும் நாயனார் பொருள் உரை எழுந்தது. ஆகவே, தண்மை வாய்ந்த தடாகம் போலவும், பழங்கள் நிறைந்த பயன் மரம் போலவும் வாழ்வதே பண்புடைமையாகும்," என்று இனிதாக எடுத்துரைத்தான். அரசிளங்குமரனும் அதன் உண்மையை அறிந்து அவ்வின்னுரையைப் பொன்போலப் போற்றினான்.

அப்பால் இருவரும் தமது ஊரை நோக்கிச் சென்றார்கள். செல்லும் வழியில் ஒரு சிற்றூர் குறுக்கிட்டது. அவ்வூரின் நடுவே செல்லும் போது இருவரும் முன் கண்டறியாத ஒரு மரத்தினைக்கண்டு வியந்து நின்றார்கள். அம்மரம் கவையாகிக் கொம்பாகிக் காட்டு மரம் போல ஓங்கி வளர்ந்திருந்தது. அதன் கொம்புகளிலும் கிளைகளிலும் கூரிய முள் நிறைந்திருந்தது. இலைகளும் தழைகளும் இல்லாது பட்ட மரம் போல நின்ற அதன் கிளைகளில் செவ்வைபாய்ப் பழுத்த பழங்கள் கொத்துக் கொத்தாய் அமைந்து கண்களைக் கவர்ந்தன. அம்மரத்தைக் கண்டு இருவரும் வியந்து நிற்கையில், அவ்வழியாக ஓர் இளைஞன் வந்து சேர்ந்தான். அவன் மரத்தருகே நின்ற இருவரையும் இனிது நோக்கி, "ஐயா, நீங்கள் இருவரும் அயலூரார் என்பதை ஐயமற அறிந்தேன். ஏனெனில், எவரும் இப்பாழான பழுமரத்தைக் கண்ணெடுத்தும் பாரார்கள். இம்மரத்தில் எங்

நாளும் இலைகளும் தழைகளும் இல்லாமையால், விலங்குகளும் இதனடியில் நில்லாது விலகிப்போம்; கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்த இக்கனிகள் நச்சுக் கனிகளாய் இருத்தலின், உண்டாரைக் கொல்லும் தகையனவாம்; இம்மரத்தின் கொம்புகளை விறகாக வெட்டி எரிப்பதற்கும் இதனிடம் அமைந்த முள் இடையூறாயிருக்கின்றது; இப்பாழ் மரம் கடுங் காற்றில் அகப்பட்டு முறிந்து வேரற்று விழ வேண்டுமென்று இவ்வூரார் இறைவனை நாளும் வழிபடுகின்றார்கள். இம்மரம் என்று விழுமோ, அன்றே இவ்வூருக்கு நன்றாகும்," என்று அதன் தன்மையை விரிவாகக் கூறிமுடித்தான். இதைக்கேட்ட அரசிளங்குமரன், முன் தங்கி இளைப்பாறிய மரத்தின் இனிமை யையும், இம்மரத்தின் கொடுமையையும் ஒப்பு நோக்கி நச்சு மரத்தில் அமைந்த நன்னிறக்கனிகள் பேதையர் கைப்பட்ட செல்வம் போலப் பிறர்க்கு இடர் விளைவிப்பனவாகும் என்று எண்ணி வருந்தினான் ;

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று."

என்னும் பொய்யா மொழியின் பொருளைத் தெளிந்தான். இத் தகைய செல்வம் நிறைந்த பேதையர், நிலத்துக்குச் சுமையாக வும், உலகத்திற்கு உற்ற தீமையாகவும் அமைந்திருத்தலால், அன்னார் அழிந்து ஒழிவதே நாட்டுக்கு நன்மை பயப்பதாகும். அறிவுடைய செல்வனை உலகம் போற்றும்; அறிவற்ற செல் வனை உலகம் தூற்றும்; அறிவுடைய செல்வனது ஆக்கம் கண்டு உலகம் களிக்கும்; அறிவிலாச் செல்வனது அழிவைக் கண்டு உலகம் மகிழும்; அறிவுடைய செல்வன் தன் பொருளைத் தக்கவாறு பயன்படுத்தி இம்மையிற்புகழும், மறுமையில் இன்பமும் எய்துவான்; அறிவிலாச் செல்வன் பயன்பட வாழும் பண்பறியாப் பேதையனாய் இம்மையிற்பழியும், மறுமையில் துன்பமும் எய்துவான்.

"நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு."

என்பது என்றும் பொய்யா மொழியேயாகும்.

17. புகழ்த்துறவு

[புலவர். வ. சுப. மாணிக்கம், M. O. L.]

களம் : காடு

காலம் : நண்பகல்

கூற்று : வல்வில் ஓரி, வன்பரணர், பண்ணன் முதலாயவர்

[தொலைவிலே மரச்செறிவுக்கிடையே வல்விலோரி வருகிறான். தலையில் திருமணி, முதுகின் வலப்புறத்தில் அம்பறாத் தூணி, இடத் தோளில் வில், மார்பில் அரசசின்னங்கள், காலில் குருதி தோய்ந்த கழல் என்றின்ன கோலமுடையவனை வன்பரணர் காண்கிறார்.]

வன்பரணர் : (வாய் பொத்தி) ஆரவாரஞ் செய்யாதீர்கள்! அககொலைஞன் இவனேதான். (மூக்கிற் கட்டு விரல் சேர்த்தி) இவன் யாராய் இருக்கலாம்! முன் பின் அறிந்த முகமாகவுந் தெரியவில்லை! கொலைஞன் என்பதிலும் ஐயமில்லை. ஒருகால், ஊன் விலை வாணிகத்திற்குக் கொல்லுபவனாக் இருக்கலாம்: (சிறிது தயங்கி) அப்படியானால் யானையையும் புலியையும் ஏன் கொல்லுகின்றான்?

பண்ணன் : ஐயா, யானையின் ஊனைப் புலிக்கு விற்பதற்கும், துறவிகட்குப் புலித்தோலை விற்பதற்கும் கொன்றிருப்பான்.

[ஓரி நெருங்கி வருகிறான். பல அணிகலன்களை வன்பரணர் பார்க்கிறார்.]

வன்பரணர் : நான் நினைத்தது பிசகு. இவன் சொல்லியதும் அப்படியே. இவன் ஆயிர நரம்பியாழ் போலும் பெருஞ் செல்வமுடையவன். மார்பிறகிடக்கும் முத்தாரம் ஒன்றே இவன் திருமகள் நோக்குடையவன் என்று காட்டுகின்றதே! கையில் மணிக்கடகங்கள் உடைய இவனோ இறைச்சி விற்கும் பாசவன்? (ஓரி அணிமையில் வர, அரசசின்னங்கள் விளங்குகின்றன.) யான் நினைத்த ஒவ்வொன்றும் பிழை. இவன் செல்வன் மட்டும் அல்லன்; ஓர் அரசன்; வேட்டுவ அரசன். வேட்டையாடி உயிர்களைக் கொல்லும் மறம் இவனுக்கு அறமேயாதலின், கொலைஞனும் அல்லன்; வினைஞனுமல்லன்; கொடியோனுமல்

லன். விளங்காதன எல்லாம் விளங்கிவிட்டன. கொடையாளனு அல்லனு என்பதும் இன்னுஞ் சிறிது போழ்தில் அறியலாம். (பாணர்களைப் பார்த்து) தவக்கம் வேண்டா. ஆகுளி தொடுமின். பண்ணை யாழிற்பாடுமின். (விறலியரைப் பார்த்து) வண்ணம் பாடுதிர். (விரைவாக) நம் பாண் தொழிலுக்கு அடையாளமான அந்தக் கரிய கோல் எங்கே? என் கையிற் கொடுப்பீர்.

[வல்வில் ஓரி அணிமையில் வரவே, எல்லாருந் தொழுதெழுகிறுர்கள். ஓரி இருந்து பாடும்படி கை கவித்து, ஒவ்வொருவரையும் இருக்கும்படி செய்கிறுன்.]

வன்பரணர்: (கைகூப்பி) அரசரே, ஒன்று சொல்ல அருளல் வேண்டும்.

ஓரி: நீங்கள் சொல்ல விழைவது இதுவெனத் தெரிந்துகொண்டேன். மிகப்பசியாக இருக்கிறீர்கள். (மான் தசைத் துண்டை நெருப்பில் வாட்டிக் கொண்டு வந்து) பாணர் தலைவரே, எல்லாரும் இதைத் தின்று பசியாறுங்கள்.

வன்பரணர்: (தின்றுகொண்டே) மன்னரே, யான் சொல்ல நினைத்திருப்பது வேறு.

ஓரி: உங்கள் உள்ளத்தை என்னுள்ளத்தால் அறிந்துகொண்டேன். நீடு பசித்திருப்பதால், மான் சூட்டினைத் தின்றவுடன் விக்குள் உண்டாகின்றது (ஆவின் நெய் போன்ற தேன் அடைத்த புட்டில்களை முன்னர் வைத்து) இந்நறவினைச் சிறிது சிறிது குடித்துக்கொண்டு, மான் சூட்டிறைச்சியை அருந்துங்கள்; அழிபசி நீங்கும்.

வன்பரணர்: (நறவையும் இறைச்சியையும் மாறி மாறி உண்டு) கோவே, நாங்கள், நாடு நாடாக ஊர் ஊராகப் போய் வரும் நாடோடிகள். ஓரிடத்திலாவது உங்களுக்கு ஒப்பாகச் சொல்லத்தக்க வேட்டுவரைக் கண்டதில்லை; உண்டென்று சொல்லக் கேட்டதுமில்லை. நீங்களோ மற்றைய வேட்டுவர்களுக்கு உவமையாகத் தக்கவர்கள். சேர வேந்தன் தனக்குப் பொறியாக வரைந்திருப்பது உங்கள் கை வல்வில் அன்றோ? (அம்பைக் கையில எடுத்துக்கொண்டு) வரிசையாக நிறுத்தினுல்,

சாய்கோணம் என்னும்படி, யானை செவி நுழைந்து, புலி வாய் பிளந்து, மானுடல் வழியாகப் பாய்ந்து, பன்றியின் குடர் சரித்து, உடும்புத் தலையில் செங்கோலாக நின்றது இவ்வம்பு என்றால், புகழ்ச்சிக்குரியது முனை மழுங்கிய இவ்வம்போ, அன்றி எய்த பெரியவன் வலிமையோ?

ஓரி: ஐயப்படாத பொருளில் ஐயப்படுகின்றீர். உயிரில்லாப் பொருளாகிய அம்புக்குப் புகழ் பழி என்ற வினைப்பயன் உண்டோ? வினையில் பொருள்களைக் கருவியாகக்கொண்டு வினை செய்தவனே அவற்றை எய்தற்குரியவன். பல்லுயிர்களைப் பதறக் கொன்றது அறநூல்கள் பழிக்குஞ் செயல்; ஆதலின், எய்தவன் பழியுடையவன் என்று சொல்ல ஏனோ தயக்கம்? அப்பழிச் சாவுகளை நேரிற்கண்டு, இறந்த உயிர்களிடம் இரக்கமும், இறவாத அவனிடம் கண்ணோட்டமுங் கொள்ளும் நீங்களே புகழ்ச்சிக்குரியவர்கள். (எதனையோ உள்ளத்துக் கொண்டு இங்ஙனம் புறம்பே தன்னைப் புகழ்கிறார்கள் என்று எண்ணியவனாய்) பெரும்பாணரே, பிறரிடம் இரந்து இரந்து எவ்வளவு நாள்தான் காய்பசியைத் தீர்த்துக்கொள்வீர்கள்? வெயிலில் அலைந்து கால்களுஞ் செருப்புப்போலத் தேய்ந்துவிட்டன! கண்களும் ஒளி மழுங்கின! அற்றம் மறைக்கும் அளவே ஆடையணிந்திருக்கிறீர்கள்! இளமையிலேயே முதுமைபடைந்துவிட்டீர்கள்! எவ்வுயிரும் விரும்பும் இசைக் கல்வியுடைமையினாலே, உயிரில் வறுமையும் உங்களை விரும்பி உயிர் பெற்றிருக்கின்றது. நாங்கள் வறியராயினும், உங்களை வண்மைச் செல்வராக்குவதே எங்கள் தொழில்.

[மார்பிற்கிடந்த முத்தாரத்தைக் கழற்றி அவர் மார்பிற் போடுகிறான். மற்றைய பாணர்கள் அது தங்கள் கழுத்திடைக் கிடப்பதே போல மகிழ்கிறார்கள்.]

வன்பரணர்: வள்ளலே, இந்த அம்பை உடையவரிடஞ் சேர்ப்பிக்க வேண்டுமென்றுதான் எடுத்துக்கொண்டு வந்தோம். இதனை உடைய வல்வில் வேட்டுவர் நீவிரேயாவீர். உங்களைக் காணுமுன், இதனை எய்தாரை வேறு விதமாக எண்ணியிருந்தோம். இப்பொழுதோ, கொடையிற்சிறந்த உங்களைக்

கண்டு, வேறு விதமாக எண்ணுகிறோம். ஆனால், இன்னும் ஓர் ஐயம் :

ஓரி : எம் புகழ்ச்சிக்கு உம் வறுமையே காரணம். ஐயம் நீர் கேட்பது இயல்புதானே! மனம் உவக்கும்; முகம் மலரும் பொருள் தர நினைப்பினும், இவ்வமயம் காட்டில் உறைதலின், வேறு கலன்கள் கொடுத்தற்கில்லாத வறியவனாயிருக்கிறேன். (கையிலணிந்திருந்த இரு மணிக்கடகங்களையுங் கொடுத்து) இன்னுந்தர விருப்பினன்.

வன்பரணர் : (பெருமகிழ்வோடு) என் ஐயம் நீங்கியது. மறத்தினுங் கொடையே விஞ்சியது என்ற தெளிவு பிறந்தது. கொடையரசே, உங்கள் குடை நிழலிற்பட்ட நாடும், இரவலர் புரவலராகிய உங்கள் பெயரும், எங்கள் செவி குளிர மனம் இனிப்பச் சொல்லியருளுக.

[இதனைச் செவி கைப்பக் கேட்ட ஓரி, தன் புகழ் கேட்க நாணி, ஒன்றுஞ் சொல்லாது மறைந்துவிடுகிறான்.]

வன்பரணர் : (அவன் சென்ற திசை நோக்கித் தொழுது) என்னுள்ளம் நிறையக் கண் மறையச் சென்ற இந்நம்பிவாழிய! ஆ உராய்வதற்கு நடுங்கல்லினுந் தம்பெயர் பொறிக்கும் மக்களுடைய இவ்வுலகத்து, இக்குரிசில் போல்வார் அரியரோ அரியர்! புகழ் வாங்கப் பொருள் விற்கும் வாணிக வள்ளல் இவரல்லர். மறுமையில் நற்பிறவியை அல்லது பிறவாமையைத் தரவல்லது என்று இம்மையில் கொடை செய்யும் வினையுடையாருமல்லர். குடி காத்தல் கருதி மகனுக்குத் தன் பொருளை விடுந் தந்தையுமல்லர். முதுமையிற் காப்பான் மகனென வளர்க்குந் தாயுமல்லர். வெயிலிற்காய்ந்தும், மழையில் நனைந்தும், பனியில் நடுங்கியும், வாடையில் உலர்ந்தும், பசி தணிக்குமளவே கூழைக் குடித்து, மானங்காக்குமளவே கோவணம் அணிந்து, மரமுதலா அரசனீறு எல்லா உயிர்க்கும் நினைப்பின்றி உழைக்கும் உழவனே இச்செம்மலுக்கு ஒப்பாவான். கல்லா மறவர் போலும் கல்லாக் கொடையாளி. (ஏதோ ஒரு நினைவு எழ, அவன் கொடுத்த முத்தாரத்தையும் கடகத்தையும் பார்க்கிறார்.) என்னே இவருள்ளத்தின் உயர்வு! இவற்றிற்கூடப் பெயரில் லையே! இவையெல்லாம் உடைமைப் பொருளல; பிறர் வைத்த

அடைக்கலப் பொருள்கள் என்ற நினைவினர் போலும்! தம்மையே பிறருடைமை என்ற துறவிற்கு வந்த ஆண்டகை, இவற்றைத் தமவாகக் கருதுஞ் சிறு செல்வரோ! தெரிந்து கொண்டேன். அம்பிற் பெயர் பொறியாத காரணம் அறிந்து கொண்டேன். தம் பெயரை மறத்தினும் அறத்தினும் வெளிப்படுத்த விரும்பாத மறையோரிவர். பெயரும் நாடுங் கேட்டதும், நாங்கள் துணுக்குறப் பின் வாங்கினரே! அஃது இவர்க்கு ஒக்கும். போரில் நெடுமொழி கூறப் பின் வாங்காப் பொருநர், புகழ் கேட்க நாணிப் பின் வாங்கல் ஒக்கும்! நடமாடத் தெரிந்த பிள்ளையை யாரே எடுத்துப் பாராட்டுவர்! தன் புகழ் பரப்புவதைத் தனது தொழிலாகவும் கடனாகவும் கொண்டுவிட்டானுக்குத் துணையாக யாரும் வாரார்; துணை வேண்டுவதுமின்று. கைப்பிள்ளையை முத்தி ஆரத்தழுவி அணைத்துச் செல்ல எல்லாருங் காதலிப்பது போலத் தன்னைப் புகழாதான் புகழே ஞாலத்துப் பலரால் சொல்லப்படுமன்றோ? ஆதலின், இத்தோன்றலின் புகழை மண் தேயப் பரப்புவதே நமது பிறப்பின் தொழிலாம். இப்பெருமகனார் பெயரை யாழிற் பண் படுத்துவதே நம் கல்வியின் பயன்.

வெளியன் : பெயர் தெரிந்தாலும் போதும். நாடு இதுவெனத் தெரிந்தாலும் போதும். இவற்றை ஏன் உடனே கேட்டீர்கள்? கேளாதிருந்தால் இவண் நெடிது தங்கியிருப்பார். கேட்டதால், கொடைஞர் கள்வன் போல மறைந்துவிட்டனர். சிறிது போழ்திருந்தாரேல், நாமும் இசை பாடியிருப்போம்: அவரும் பண்ணில் மயங்கியிருப்பர். பின்னர்ப் பெயரும் நாடுங் கேட்டக்காற் சொல்லியுமிருப்பர்.

பண்ணன் : அதனை முன்னர்த் தெரிந்துதான் புறப்பட்டுப் போயினர் போலும்!

வன்பரணர் : தம்மைப்பற்றிய முத்தமிழையும் முனிபவர்காண் அவர்; என்றாலும், முத்தமிழ் இத்தகையோரைப் பற்றாமலிருக்குமா? பண்ணிசைத்துக் கைம்மாறு காட்டுவர் என்று கருதிச் சென்ற அவர் புகழே புகழ்! தம் புகழ் தம் முன்னர்க் கூறக் கேளா அவர் நாணமே நாணம்! செய்ந்நன்றி எனைத்துணையும் எண்ணா அவர் கொடையே கொடை!

[அப்பொழுது வில்லேந்திய கையினராய்ச் சிலர் விரைந்து நடந்துகொண்டே, 'எம்மரசர் இவ்வழியாகச் சென்றதைக் கண்டதுண்டோ?' என்று வினவுகின்றனர்.]

வன்பரணர்: (விரைந்து) அவ்வள்ளலின் புகழ்ப்பெயர் யாதோ?

வந்தவர்கள்: (ஏளனமாக) அவர் பெயரை அறியாதிருக்கின்ற உம் பெயர் என்னவோ?

வெளியன்: (சிரித்துக்கொண்டு) இசையுலகிற் பெயர் போகிய வன்பரணர் என்றிவரை அறியாத உமது பெயர் என்னவோ?

மூவன்: (பரணர் மார்பின் ஆரத்தையுங் கைக்கடகத்தையுங் காட்டி) இக்கலன்கள் அவர் கையால் கழற்றி இவருக்கு எம் மனமார அணியப்பட்டவை.

வந்தவர்கள்: இவையுந் தருவார். இக்காடு கடந்து உதுக்காண் தோன்றும் கொல்லி மலை நாட்டிற்கு நீவிர் வருக. எல்லாந் தருவார்.

வன்பரணர்: (மகிழ்ந்து) உண்மை உணர்த்திய நீங்கள் யாரோ? உங்கட்கு என்ன கைம்மாறு செய்வோம்? (என்று பாடத் தொடங்குகிறார்).

வந்தவர்கள்: நாங்கள் அவரைப் பின் தொடர்பவர்கள். அவர் சென்ற வழி காட்டிய உங்கட்கு..........[ஒருவன் மோதிரத்தைக் கழற்றி அவர் விரற்கண் போடுகிறான். வந்தவர் எல்லாரும் விரைந்து புறப்பட்டுவிடுகின்றனர். பாணர்கள் கொல்லி மலையையும் ஓரியையும் பாடிக்கொண்டு அம்பையும் எடுத்துக்கொண்டு வழி நடக்கின்றனர்.]

உடைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கொடைமை யிலாத குணமே;—கொடைமை
உடையான் தொகுத்த துலகமே யாக
உடையான் இரப்பவனென் றோது.

18. எல்லோரா

[R. S. உருக்குமிணி, M.A.]

இராட்டிரகூட வமிசத்தைச் சார்ந்த முதலாம் கிருஷ்ணன் என்பான், தக்கிணபதத்தில் நெடுங்காலமாக ஆற்றல் பெற்றுச் செங்கோல் செலுத்திய சளுக்கியரைக் கி. பி. 757-ஆம் ஆண்டில் போரிலே புறங்கண்டு, வெற்றி மாலை புனைந்தான். தக்காணத்தில் இராட்டிரகூடப் பேரரசை நிறுவிய புகழுடைய இம் மன்னன், தான் பெற்ற வெற்றியைக் கொண்டாடக் கருதினன். இவன் தன் குல தெய்வமாகிய சிவபெருமானுக்கு ஆற்றுந் திருப்பணியாகவும் தன் வெற்றிக்கு அறிகுறியாகவும் மிகப் பெரிய கோவில் ஒன்றை அமைக்க வேண்டுமெனக் கருதினன். இதன்பொருட்டு ஆராய்வதற்காக அமைச்சரோடும் அந்தணரோடும் அத்தாணி மண்டபத்திற்புகுந்து அரியணையில் அமர்ந்தான்.

இராட்டிரகூடர்களுக்கு அரசனான கிருஷ்ண பூபதிக்கு 'அகால வர்ஷன்,' 'சுபதுங்கன்' என்பன போன்ற பல விருதுப் பெயர்கள் வழங்கி வந்தன. அரசன் அமைச்சரோடும் அந்தணரோடும் ஆலோசனை செய்த பொழுது ஆங்கு இருந்தவரெல்லாம் ஒரே மனமாகக் கைலை மலை போன்ற ஒரு கோயிலை ஆக்குதலே சாலச் சிறந்தது என உரைக்கலாயினர். 'கைலைமலை போன்றொரு கோயிலைக் கட்டுதல் மன்னவர்க்கு எளிதாமோ? அது விண்ணவர்க்குமாகாத செயலன்றோ?' என்னும் பேச்சுக்கள் மன்னனது அவையிலே எழுந்தன.

கி. பி. எட்டாம் நூற்றாண்டு சமயச் சண்டைகள் தொடங்கிய காலமாகையால், பாரத நாடெங்கும் சமயகுரவர்கள் தத்தம் சமயத்தைச் சார்ந்தவர்களின் தொகையைப் பெருக்க அல்லும் பகலும் தொண்டாற்றித் திரிந்தனர். அந்நாள் தந்தை வைணவ சமயத்தைச் சார்ந்தால், மைந்தன் சைவ சமயத்தை ஆதரித்த காலமாய் இருந்தது. அக்காலத்தில் மிகப் பெரிய வெற்றி பெற்ற அரசன், தன் வெற்றிக்கெல்லாம் தோன்றாத் துணைவராய் இருந்தவர் சிவபெருமானே எனக் கருதினால், கோனோக்கி வாழுங் குடிகளனைவரும் சைவ நெறியைச் சாராது இருப்பரோ? அரசனெவ்வழிக் குடிகளவ்வழியன்றோ?

அக்காலத்தில் சிவபெருமானுக்குக் கோயில் கட்டக் கருதிய மன்னவருள்ளத்தில் ஒரு கோயிலைப் பற்றிய எண்ணந் தான் எழுந்தது. அது முக்கண்ணனாகிய சிவபெருமான் உறைவிடமாகிய கைலை மலையேயாம். தண்பனி போர்த்த இமயச் சிமயமிசை உமை பங்கராகக் கொலு அமரும் இறைவரது கைலையை மண்ணுலகிலே பொய்யுடம்பு பெற்றுத் தோன்றிய எவருந் தம் ஊனக்கண்களாற் கண்டதில்லை. 'யான் கைலாயம் செல்கின்றேன்,' என எவரேனும் உரைப்பாராயின், அவர் மரணமடைவதையே சுட்டிப் பேசுகின்றாரெனப் பிறர் கருதுவரன்றோ! சிவபெருமானின் அன்பரான அப்பரும் பூதவுடம்போடு கைலையங்கிரிக்குச் சென்று இறைவரைக் காணும் பேறு பெற்றிலர். அவர் திருவையாற்றிலே புனித நீர்க் கரையிலே மனக்கண்ணாலேயே கைலையைக் கண்டுகளிக்க முடிந்தது. புராணங்களும் கைலையின் வனப்புக்களையெல்லாம் பல்வகையாகப் புகழ்ந்துரைக்கின்றன. சிவனடியார்களும் புனைந்துரைகளையெல்லாம் சிந்தனை செய்து தம்முள்ளத்திலே கைலைக் கோயிலைக் கட்டி எழுப்பினர். இராட்டிரகூட மன்னனது அவையிலே வீற்றிருந்த சிற்பநூல் வல்லாரொருவர், அக்காலத்தில் காஞ்சியம்பதியில் தண்குடை நிழலில் அரியாசனத்தமர்ந்து வீறுடன் விளங்கிய பல்லவனொருவன் கைலாச நாதர் ஆலயமொன்றைக் கட்டியதாகக் கூறினர். அப்பொழுது சிற்பக்கலை தேர்ந்த பெரியாரொருவர் எழுந்து, அரசனை நோக்கி, "மன்னரே, பல்லவனாக்கிய அக்கோயில் பழுதுடைத்து; கைலைமலை போன்ற கோயிலை அமைக்க வேண்டுமாயின், அஃது ஒரே கல்லால் அன்றோ ஆக வேண்டும்! கற்களையடுக்கிச் சேர்த்துக் கட்டுகின்ற கோயில் கைலை மலையாகுமோ? மிகப்பெரிய குன்றினை வெட்டியறுத்துச் செதுக்கிக் குடைந்து சித்திரப் பணிகள் அமைத்து ஆக்குவதற்கு உரிய மாண்புடையது அத்திருக்கோயில். அத்தகைய கோயிலொன்றை எழுப்புதற்கு ஏற்ற இடம் சிவயோகிகளின் தவப்பள்ளிகளையுடைய எல்லோராக் குகைகளேயாம். அங்குச் சமணரும் பௌத்தருங் குடி புகுந்து பாழியும் பள்ளியும் அமைத்து அக்குன்றினைப் பாழாக்குகின்றனர்," என்றார். இதனைச் செவியுற்ற மன்னன், 'அக்குன்றிலேயே கைலாசத் திருக்கோயிலை அமைத்துவிடுக,' என்று அப்பெரியா

ரிடம் கூறி, அன்னவர்க்கே அத்திருப்பணிப் பொறுப்பையும் அளித்தனன்.

எல்லோராக் குகைக் கோயில்களின் நடுநாயகமாய்த் திகழ்வது கைலாயக் கோயிலேயாம். இதனைப் பதினாறுவது குகைக் கோயிலாக வரிசை இலக்கம் இட்டுக் குறிப்பிடுவது வழக்கம். இக்கோயில் திருப்பணி முடிவுற்றுப் பதினொரு நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. பூமத்தியரேகையில் எழுகின்ற கதிரவனின் கொடிய ஒளியாலும் பருவ மழைகளாலும் பல்லாண்டுகளாகத் தாக்குண்ட போதிலும், இக்கைலாயக்கோயில் பழுதுறாது இன்றளவும் இருப்பதே இயற்கை அதிசயம் எனலாம். அன்றியும், பாரத நாட்டில், முகமதியப் படை சென்ற தலங்களில் இருந்த கோயில்கள் தகர்ந்து மண்ணோடு மண்ணாய் அழிந்து ஒழிய, இக்குகைக் கோயில்கள் அவ்வளவாக அழியாமல் தப்பிப் பிழைத்திருப்பதும் பெருவியப்பன்றோ? எனினும், விக்கிரக ஆராதனைக்குப் பகைவராய்க் காலந்தோறும் ஈங்குப் போந்தவர்கள் தமது கைவன்மையை இங்கேயும் காட்டாமற்போகவில்லை.

எல்லோராவின் குகைக்கோயில்களுள் தனி மாண்புடையதாய்க் கம்பீரமான தோற்றத்தோடு திகழ்கின்ற கைலாயக் கோயிலின்கண் ஆயிரக்கணக்கான சிற்பப் பொலிவுகளைப் பார்க்கலாம். ஈங்குள்ள காட்சிகள் யாவும் காணுந்தோறும் வியப்பைத் தருபவை. ஒவ்வொரு சிற்ப வேலைப்பாடும் தனித்தனி சிறப்போடு அமைந்தது. இவற்றை ஆக்கிய சிற்பிகளின் ஆர்வத்தையும் சிற்பக்கலையில் அவர்தமக்கு இருந்த பத்தியையும் ஈங்குள்ள சிற்பங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

நாம் கைலாயக் கோயிலில் நுழைந்ததும் முதன்முதல் இரண்டு மாடிகளோடு விளங்கும் நந்தி விமானத்தைக் காண்போம். இந்த விமானம் முழுவதிலும் வெகு உயர்ந்த சிற்ப வேலையின் நுட்பங்கள் நிறைந்துள்ளன; செதுக்கு வேலையும், பிறவும் வெகு கவர்ச்சியாய் அமைந்துள்ளன. இந்த விமானத்தின் அடியில் சிவபெருமானது ஊர்தியாகிய நந்தியின் சிலை உருவம் வெகு அழகாய் அமைந்துள்ளது. இந்த விமானத்தின் ஒரு பக்கத்தில் நிற்கும் கோபுரத்தையும், மற்றொரு பக்கத்தில் இருக்கும் தலைமைக் கோயிலையும் சேர்த்து இணைக்கின்ற கற்

பாலம் ஒன்று அமைந்துள்ளது. கூடத்தின் இரு மருங்கிலும் ஒரே அளவில் ஒரே அமைப்பாகச் செய்யப்பெற்றிருக்கும் இரண்டு கற்றூண்கள் அழகிய சிற்ப வேலைப்பாடுகளோடு விளங்குகின்றன. இக்கற்றூண்கள் நாற்பத்தொன்பது அடி உயரம் உடையவை. இவற்றின் வடிவமைப்பு வெகு நேர்த்தியாய் இருக்கின்றது. இவற்றின்மீது சிவபெருமானின் மூத்தலைச் சூலங்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு தூணின் அடியிலும் முழு அளவிலே செய்த கல்யானையொன்று நிற்கின்றது. இவை இமய மலையின்கண் இடையறாது கவிகின்ற கார்முகிலைக் குறிக்கின்றதெனச் சிலர் கருதுகின்றனர். இக்கம்பங்களின் இடப் பக்கத்தில் கங்காதேவியின் ஆலயம் முற்றுப்பெறாதிருக்கின்றது. இவ்வாலயத்தினுள் பல வகைச் சிற்பமாகச் செதுக்கியிருக்கின்ற சரஸ்வதி, கங்கை, யமுனை ஆகிய மூன்று நீர்த்தேவியரின் சிலையுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்மூன்று திருநதிகளும் இமயக் குன்றுகளினின்று எழுகின்றவையாதலின், தூய நதிகளாய் விளங்குபவை. சிற்பி, இத்தூய நதித் தேவியரின் சிற்பத்தைச் சூழ்ந்திருக்கும் நெற்றி மாடங்களில் தண்ணீர்த் தொட்டிகளை வெகு அழகாய்ச் செதுக்கியிருக்கிறான்.

சூழவுள்ள சிற்ப அலங்காரக் குவியல்களின் நடுவண் தொண்ணூற்றாறு அடி உயரமுடையதான விமானத்தோடு அமைந்த கைலாச நாதரது ஆலயம் அமைந்துள்ளது. இக் கோயிலின் விமானத்திற்கு அமைந்த அடிப்பீடம் இருபத்தேழு அடி உயரமுடையது. இந்தப் பீடத்தின் பக்கங்களில் தந்தங்களையும், துதிக்கைகளையும், தலைகளையும், பாதி உடலையும் வெளியே நீட்டிக்கொண்டு தோளோடு தோள் பொருந்த நிற்கின்ற கல் யானைகள் வரிசையாய் அமைந்துள்ளன. கைலாய விமானம் முழுவதையும் நாற்புறமும் வரிசையாக நிற்கின்ற கல் யானைகளின் முதுகின்மேல் தூக்கி வைத்திருப்பது போன்ற காட்சியைச் சிற்பி காட்டியிருக்கின்றான். இந்து சமய விரோதிகளின் கருங்கைகளால் பல யானைகளின் துதிக்கைகளும், தந்தங்களும், தலைகளும், காதுகளும், கால்களும் இரக்கமின்றித் தகர்க்கப்பெற்றுப் பாழான போதிலும், சில யானைகள் பழுதுபடாமல் இன்றும் இருக்கின்றன. இந்த மதகரிப் பீடத்தின்

மேல் அமைந்துள்ள கைலாய விமானம் உலகத்தின் எட்டாவது அதிசயமெனப் புகழ் பெற்றது.

கைலாயக் கோயிலுள் ஐம்பத்து மூன்று சம சதுர அடி அளவுடைய மணிக்கூடமும், கூடத்தின் கூரையைத் தாங்கும் பதினாறு தூண்களும் இடையறு வியப்பை விளைக்கின்ற அரிய பெரிய சிற்ப வேலைப்பாடுகளோடு விளங்குகின்றன. இக் கூடத்தினின்று மூலத்தானத்திற்குச் செல்கின்ற மணி வாயில் முழுவதும் சந்தனமரத்தில் செதுக்கிக் காட்டுகின்ற சித்திர வேலைப்பாடுகளையெல்லாம் சிற்பி வெகு திறமையாகச் செதுக்கிக் காட்டியிருக்கின்றான்.

இந்த மணிவாயிலைக் கடந்ததும் ஆறு படிகள் இறங்கினால், கைலாயப்பெருமானார் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் உட்கோயிலின்கண் புகலாம். இந்து சமயக் கோயில்களின் மூலத்தானம் இருள் மிகுந்த சிறு அறையாகவேயிருக்கும். அவ்வாறே இவ்விடத்திலும் மூலத்தானம் அமைந்துள்ளது. இதனுள் சிவலிங்கம் இருப்பதைக் காணலாம். உட்கோயிலின் திண்ணிய ஒற்றைக் கற்சுவர்களின்மீது நடு விமானம் வெகு மாட்சியான சிற்பப் பதுமைகளோடு அமைந்துள்ளது. கர்ப்பக் கிருகத்தைக் சூழச் சுற்று மண்டபம் அமைந்திருக்கின்றது. இதன்கண் பிள்ளையார், உமையம்மையார், முருகர் முதலியோர் ஆலயங்களும், அவற்றோடு வேறு இரு கோயில்களும் காணப்படுகின்றன. கைலாயக்கோயிலின்கண் சிற்ப நுணுக்கங்களோ, சிலை உருவங்களோ இல்லாத தூணையும் சுவரையும் காண முடியாது. புராணக் கதைகளைச் சித்திரித்துக் காட்டுகின்ற சிற்பங்களும், தாமரைமலரும், அன்னமும், கிளியும், மயிலும், பல்வகைக் கொடிகளும், தளிர்களும் அமைந்த போதிகைகளும், தூண்களும், தூண்களின் அடிப்பீடங்களும், உத்தரங்களும் முடிவிலா அலங்காரக் குவியலாக இக்கைலாயக் கோயிலின்கண் விளங்குகின்றன.

வால்மீகி இராமாயணத்தின் உத்தர காண்டத்தில், பதினாறாவது சருக்கத்தில் இராவணனது திக்கு விஜய வரலாற்றின் ஒரு பகுதி, சைவசித்தாந்தத்தின் மிகப் பெரியதோர் உண்மையை விளக்கும் திருஷ்டாந்தமாக அமைவது. இராவணன்

கைலையங்கிரியைப் பெயர்க்க முயன்றதும், சிவபெருமான் கால் கட்டை விரலால் கைலையங்கிரியை அழுத்தி அரக்கனது செருக்கை அடக்கியதும், அரக்கனது செயலால் கைலைக் குன்று குலுங்கியதும், அப்பொழுது ஊடிப் பிரிந்த உமையம்மையார் அஞ்சி ஓடி வந்து இறைவனைத் தழுவினதும், இராவணன் தன் கரங்களில் ஒன்றைப் பெயர்த்து அதில் தன் உடல் நரம்பை இழுத்துக் கட்டி வீணை ஒன்றைச் செய்து சிவபெருமானைப் போற்றிப்பாடி அருள் பெற்றதுமாகிய நிகழ்ச்சிகள் சிற்ப ஓவியக் கலைஞருக்குச் சிறந்த செய்திகளாயின. இந்நிகழ்ச்சிகளைக் கைலாயக் கோயிலை ஆக்கிய சிற்பியும் இராவணேச்சுவரனது ஆலயத்தில் வெகு அழகான பலகைச் சித்திரமாகச் செதுக்கி வைத்திருக்கின்றான். இவை, கண்ணாரக் கண்டு களித்தற் கேற்ற அழகேயன்றிப் புத்தக வாயிலாய்த் தெளிவதற்கமைந்த அழகன்று.

19. தென்னிந்திய வணிகம்*

(ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரை)

[S. K. கோவிந்தசாமி பிள்ளை, M.A.,]

தோற்றுவாய் :

இக்கட்டுரை, பழந்தமிழ் நாட்டின் வாணிபத்தைப் பற்றி ஆராய எழுந்தது. 'தென்னிந்தியா' என்ற சொற்றொடர், வடுக கன்னட நாடுகளையும் தன்னகத்தேயுடையதாயினும், இவண் அதன்கண் அடங்கிய தமிழகம் ஒன்றனையே குறிக்கும். இம் மூன்றும் ஒழிந்த மலையாளத்தைச் சொல்லாது விடுத்தது, பண்டைக்காலத்தில் மலையாளம் தமிழகத்துக்குப் புறம்பல்லவென்பது கொண்டேயாகும்.

தமிழகத்தின் வணிக வரலாறு மிக்க பழமை உடைத்து. இந்தியப் பெருங்கடலில் கலஞ்செலுத்தி எகிட்டு, பாபிலோன்,

* இக்கட்டுரையில் ஆசிரியரால் காட்டப்படும் நுணுகிய ஆராய்ச்சிக் குறிப்புக்கள் வகுப்பின் தகுதி பற்றி நீக்கப்பெற்றுள்ளன.

சால்டியா முதலான நாகரிகமுயர்ந்த நாடுகளோடு பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழர் பண்டம் மாற்றி வந்தனர். அதற்குச் சான்றாக எகிப்து நாட்டிலும், சிற்றாசியாவிலும் (Asia minor) மெசபட்டோமியாவிலும் மண்ணினுள் புதைந்திருந்தெடுக்கப்பட்ட பல சான்றுகள் இப்பொழுதும் நமக்குக் கிடைக்கின்றன. கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து நான்காம் நூற்றாண்டு வரை, தமிழர் உரோமப்பேரரசரோடு வர்த்தகம் செய்து வந்தனர். அதனால், தமிழர் அடைந்த செல்வம் கணக்கிட முடியாது. கிரேக்கரும் உரோமரும் பண்டைத் தமிழ் நூல்களில் 'யவனர்' எனப்படுவர். அவர்களுடைய வணிகத்தைப் பற்றியெழுந்த நூல்கள் மூன்றுள. அவையாவன, ஒரு கிரேக்க வர்த்தகன் எழுதிய செங்கடற்செலவும், டாலமி என்பான் எழுதிய உலக நூலும், பிளினி என்பவன் எழுதின இயற்கை நூலுமாம். இவ்வர்த்தகத்தைப் பற்றிய குறிப்புக்களைச் சங்க இலக்கியங்களில் நாம் காணலாம். யவனருக்குப் பின்னர் இந்தியப் பெருங்கடல் வர்த்தகம் அராபி நாட்டார்க்குச் சொந்தமாயிற்று. நாம் இவண் எடுத்துக்கொண்ட கால வரைக்கு முன்னர்ப் பல்லவர் என்ற ஓர் அரச குடியினர் தமிழகத்தை ஆண்டனர். அவர்கள் அரசாட்சியில், தமிழர் கீழ்த்திசையில் பர்மா, மலேயா, சாவகம், சுமத்திரா, சீயம் முதலிய நாடுகளோடு வணிகஞ் செய்து வந்தனர். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தமிழரின் பெருங்கலங்களும், அராபியரின் காற்றைப்போல வேகமுடைய கப்பல்களும், சீனர்களின் 'சங்க்' என்ற பெயரிய குன்றனைய நாவாய்களும் இந்தியப் பெருங்கடலிற் கூட்டங்கூட்டமாகக் கீழ்மேற்றிசைகளிற் பாய்களை விரித்து இங்குமங்கும் சென்றுகொண்டிருந்தன.

இக்கட்டுரையின் மூலங்கள்:

இனி, நாம் எடுத்துக்கொண்ட ஐந்நூறு ஆண்டுகளில் தமிழர் நடத்திய வர்த்தகத்தைப்பற்றி எழுதுமுன், அதைபற்றற்கு இன்றியமையாத மூலங்களை நாம் ஆராய வேண்டும். தமிழகத்தாரோடு வாணிகஞ்செய்த பல நாட்டாருள், அராபியரும் சீனரும் அவ்வணிகத்தைப்பற்றி நூல்கள் பல எழுதியுள்

ளார். மற்றும், தென்னிந்தியாவில் யாத்திரை செய்த இருவர், தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தொகுத்துச் சிறந்த நூல்கள் இயற்றியுள்ளார். அவற்றையொத்த நூல்கள் தமிழகத்தில் இதுகாறும் கிடைக்காது போயினும், அக்குறையைத் தீர்க்கச் சிறந்த கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

தென்னிந்திய வர்த்தகரும் அராபியரும்:

இந்தியப் பெருங்கடலில் வாணிபம் செய்தவர்களில் தலை சிறந்தவர் அராபியராவர். அவர்களுடைய விரிந்த வர்த்தகத்திற்கு ஏற்ற வண்ணம் அவர்கள் நாடும் இரண்டு பெரும்பூப் பகுதிகளுக்கு இடையே இயற்கையாய் அமைந்திருக்கிறது. யவனர் தமிழகத்தோடு வர்த்தகம் செய்யத் தொடங்கு முன்னரே, அராபியர் நம் நாட்டோடு வர்த்தகம் செய்து வந்தனர். பருவக்காற்றுகளின் பயனை உலகில் முதல் முதல் அறிந்தவர் அராபியரே. தென்மேற்குப் பருவக்காற்று வீசும் போது அராபியாவில் இருந்து புறப்பட்டுத் தென்னிந்தியாவை அடைந்து வர்த்தகம் செய்து பின் வடகிழக்குப் பருவக்காற்றோடு அவர்கள் தம் நாடு போய்ச் சேர்வர். முகமது நபி பிறக்கு முன்னரே அராபிய வர்த்தகம் மேற்கே ஸ்பெயினிலிருந்து கிழக்கே சீனம் வரை விரிந்தது. கி. பி. 300ல் அராபியர்கள் காண்டன் என்ற சீனத் தலைநகரில் குடியேறியிருந்தனர் என்று சீன நூல்களிலிருந்து நாம் அறிகிறோம்.

முகமது நபி தாம் நிறுவின மதத்தைப் பரப்பின பின்னர் அராபிய வர்த்தகம் முன்னிலும் பன்மடங்கு தழைத்தோங்கிற்று. சர். டி. ஆர்னல்டு என்பார், அராபியரின் வர்த்தக முன்னேற்றத்திற்குக் கீழ்க்காணும் காரணங்களைச் சொல்லுகின்றனர் :—

(1) முகமதுவுக்குப் பின் தோன்றின 'கலீப்' என்ற பட்டம் பெற்ற அரசர்களின் கீழ் அராபியரின் ஆட்சி கிழக்கே சிந்து நதிக் கரையிலிருந்து மேற்கே அட்லாண்டிக்குப் பெருங்கடலின் கரை வரை அகன்றிருந்தது. அரசியலின் பொருட்டு அதிகாரிகள் அவ்விரிந்த நிலப்பகுதியில் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்ய நேர்ந்தது. அதனால், அராபிய வர்த்தகம் கடல் போலப்

பரந்தது. 'வர்த்தகம் கொடியைப் பின் பற்றுகிறது,' என்ற ஆங்கிலப் பழமொழியின் உண்மை இவண் காணலாம்.

(2) முகமதிய மதமும் இவ்விதச் சிறப்புக்கும் விரிவிற்கும் தூண்டுகோலாய் இருந்தது. அம்மதத்திற்கு அதன் புறம்பாய் உள்ளோரைக் கொண்டுவரவேண்டும் என்ற கட்டளையை முகமது பிறப்பித்தவுடன், முகமதிய அரசர்களும், சாதாரண மக்களும் தம் மதத்தைப் பரப்பினர். மதம் விரிந்ததனால் வர்த்தகமும் விரிந்தது.

(3) மேற்சொன்ன இரண்டினும் சிறந்த காரணம் முகமதிய மக்களிடத்து வர்த்தகங்களுக்கு இருக்கும் சீரும் செல்வாக்குமே. 'தலை சிறந்த மதாசாரியருக்கு ஒப்பானவர் வர்த்தகர்,' என்றும், 'அல்லாவின் உண்மைத் தொண்டர்' என்றும் முகமது நபியே கூறியுள்ளார். 'ஒருவன் நல்ல நெறியுடையனா அல்லவா என்றறிதற்கு வர்த்தகமே உண்மையான சோதனை. கொண்டு கொடுக்கும் போதே ஒருவனின் அன்பும், சமயத்திட்பமும் வெளியாகும்,' என்றும், 'நான் இறக்க வேண்டியிருந்தால், அங்காடித் தெருவில் உவகையுடன் இறப்பேன்,' என்றும் காலிப் ஓமார் கூறுமிடத்து, அரசர்கட்கும் வர்த்தகத்தில் பெருமதிப்பு இருந்தது என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

இவையன்றி, அராபியர் நாடு பாலையாய் இயற்கையில் அமைந்திருந்ததும் இவ்வர்த்தக மேன்மைக்குத் தக்க காரணமாகும்.

அராபியரின் முக்கிய துறைமுகப்பட்டினம், செங்கடலுள் நுழையும் வாயிலில் அமைக்கப்பட்டிருந்த ஏடன்; அவ்வூரில் பல நாட்டினர் குழுமி இருந்தனர் என்றும், தென்னிந்திய வர்த்தகரும் அவண் இருந்தனர் என்றும் அறியக்கிடக்கின்றது. அராபியர் அங்கிருந்து புறப்பட்டுச் சிர்ருசியா, பாக்தாது, மோசல், டமாஸ்கஸ், பாஸ்ரா, சோமாலி முதலிய இடங்களில் கிடைக்கும் பொன்னிழையால் புனைந்த விலையுயர்ந்த ஆடைகள், டமாஸ்கஸ் நகரத்தில் செய்யும் புகழ் பெற்ற பட்டுத்துணி வேலைப்பாடமைந்த கண்ணாடிப் பொருள்கள், ரோசாப்பூவிலிருந்து எடுத்த பனிநீர் அத்தர் போன்ற நறுமணப் பொருள்கள், நறுநாற்றம் பொருந்திய மரப்பிசின்கள், பெருங்காயம், காண்டா

மிருகத்தின் கொம்பு, இவை போன்ற மற்ற விலையுயர்ந்த பொருள்களையும் தம் கலங்களில் ஏற்றிக்கொண்டு, 'மிளகு நாடு' என்று அராபிய நூலாசிரியர்கள் எல்லோராலும் புகழ்ந்து கூறப்பட்ட சேரநாட்டுக் கடற்கரைப் பட்டினங்களான கொல்லம், கோழிக்கோடு முதலியவைகளை அடைந்து, பின் பாண்டி நாட்டுத் துறைமுகமாகிய காயலுக்குச்சென்று, அவணிருந்து சோழநாட்டுத் துறைமுகங்களான தொண்டி, பாசி, நாகப்பட்டினம், காரைக்கால், காவிரிப்பூம்பட்டினம் முதலியவற்றைச் சேர்வார்கள். பின், வடகிழக்குப் பருவக்காற்று வீசுகின்ற காலத்து மலைபடு பொருள்களான மிளகு, ஏலம், இலவங்கம், இஞ்சி, சந்தனம், அகில், சப்பான் மரம், தேக்கு மரம் முதலியவைகளாலும், கடல்படு பொருள்களான 'பூனைக்கண்' என்ற மணிகளாலும், சோழநாட்டில் நெய்த நூலும் பட்டும் விரவிய பூந்துகில்களாலும் தம் கலங்களை நிரப்பிக்கொண்டு, அராபியாவை அடைந்து, அவணிருந்து எகிப்து நாட்டில் சிறந்து விளங்கிய அலெக்சாண்டிரியாத் துறைமுகத்துக்கும், பாஸ்ரா, மோசல், இராக்கு, பாக்தாது, சிற்றாசியா முதலான இடங்களுக்கும் அப்பொருள்களை அனுப்புவர்.

தென்னிந்தியாவோடு அராபியர் நடத்திய குதிரை வர்த்தகம் :

அராபியர் நம் முன்னோருடன் நடத்திய வர்த்தகத்தில் அவர்கட்குப் பெரிய வருவாயைக் கொடுத்தது குதிரை வர்த்தகமே. நம் நாட்டரசர்களான சேர சோழ பாண்டியர்கள் எக்காலத்தும் போர்மேற்செல்லுதலில் விருப்பமுடையவராய் இருந்ததால், படைக்குக் குதிரைகள் வாங்க வேண்டியிருந்தது. இக்குதிரை வர்த்தகத்தைப்பற்றி மார்க்கோ போலோவும் அப்துல் வாசாபும் தத்தம் நூல்களில் விரித்து எழுதியுள்ளார்கள். அவர்கள் கூற்றுக்களை அப்படியே இவண் எடுத்து எழுதுவோம் :

மார்க்கோ போலோ சொல்லுவதாவது; "இந்நாட்டினர் குதிரை வளர்ப்பதில்லை ; ஆகையால், ஆண்டுதோறும் குதிரைகளை இறக்குமதி செய்வதில் கணக்கில்லாத பொருளைச் செலவிடுகின்றனர். கிஷ், ஹார்மூஸ், டோபிர், சோபிர், ஏடன் முத

லான பட்டினங்களில் உள்ளார் பெருந்தொகையான குதிரைகளைத் தொகுத்து, சுந்தரபாண்டியனும் அவன் தம்பிகளும் ஆள்கின்ற நாட்டுக்கு அவைகளை அராபியர் கொணர்கின்றனர். அங்கு ஒரு குதிரைக்கு 500 'சாகி' பொன் கொடுத்து அதை (தென்னிந்தியர்) வாங்குகின்றனர். ஐந்து அரசர்களும் ஆளுக்கு 2000 குதிரைகள் ஆண்டுதோறும் வாங்குகின்றனர். அவ்வளவு குதிரைகள் அவர்கள் வாங்குவதற்குக் காரணம் என்னவெனில், ஆண்டு முடிவுக்குள் நூறு குதிரைகள் கூட மீந்திருப்பதில்லை. அவையெல்லாம் இறந்துவிடுகின்றன. குதிரையை எவ்வண்ணம் நடத்துவது என்பதை அவர்கள் அறியார்; அவர்கள் நாட்டில் இலாடம் அடிப்பார் இல்லை. அராபியக் குதிரை வர்த்தகரும் தம் நாட்டு இலாடக்காரர் தென்னிந்தியா செல்லாமல் பார்த்துக்கொண்டனர்."

அப்துல் வாசாப் எழுதியதாவது: "மல்லிக் இஸ்லாம் ஜலாலுடினுக்கும், அராபியக் குதிரை வர்த்தகருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி ஆண்டுதோறும் கிழ்த் தீவிலிருந்து 1400 குதிரைகள் மாபாருக்குக் கொணர்ந்து இறக்க வேண்டும். ஒரு குதிரையின் விலையாவது 220 செம்பொன் டினார் எனத் திட்டம் செய்துள்ளார். அபுபக்கர் அரசாண்ட காலத்தில் ஆண்டுதோறும் 10,000 குதிரைகள் மாபார், (தமிழ்நாடு) கம்பாயத்து முதலான இடங்களுக்கு ஏற்றுமதியாயினவென்றும், அவற்றின் விலை 22,00,000 டினார் என்றும் அராபிய நூலாசிரியர்கள் கூறுகின்றனர்."

"குதிரைகள் அவண் அடைந்தவுடன், அவைகட்குப் பச்சையாய் உள்ள பார்லி அரிசியை அருத்தாமல் நெய்யளைந்த பார்லியையும், காய்ச்சின பசுவின் பாலையும் கொடுக்கின்றனர்.

யாரே கன்னலைக் காக்கைக் களிப்பார்?
யாரே பிணந்தனைக் கிள்ளைக் களிப்பார்?
பிணத்தைக் காக்கைக் கிடல் வேண்டும்
கன்னலைக் கிள்ளைக் கிடல் வேண்டும்.
யாரே கழுதைக் கணிகலனிடுவர்?
யாரே பசுவினுக்கு வாதுமையளிப்பார்?

அவர்கள், குதிரைகளை நாற்பதுநாள் கொட்டிலில் கயிறுகளினால் கட்டிக் கொழுக்கும்படி செய்கின்றனர். அதற்குப் பின்

ஞல் அவற்றை வெளியிற்கொணர்ந்து பழக்காமலும், சேணம் இடாமலும், தென்னிந்தியப் போர் வீரர்கள் பைசாசங்கள் போலச் சவாரி செய்கின்றனர். சில நாட்களில் வலியும், வேகமும், சுறுசுறுப்பும் உடைய குதிரைகள் மெலிவடைந்து, தளர்ந்து, பயனற்றனவாகின்றன.........ஆகையால், குதிரைகளை அடிக்கடி இறக்குமதி செய்ய வேண்டிய காரணம் ஏற்படுகிறது.''

சீன வர்த்தகம் :

தென்னிந்தியாவுக்கும் சீன தேயத்துக்கும் இடையேநடந்த வர்த்தகம், பல நூற்றுண்டுகளாக அராபியரிடம் இருந்தது. ஏழாவது நூற்றுண்டின் தொடக்கத்திலேதான் சீனர் ஆண்டுக்கொரு முறையாவது தூரதேயங்களுக்குக் கப்பல்களை அனுப்ப ஆரம்பித்தனர். சீனர் புத்த சமயத்தினர் ஆனபடியாலும், அவர்கட்கு இந்தியா புண்ணிய பூமியானபடியாலும், அவர்களில் சிலர் அடிக்கடி இந்தியாவுக்குப் போந்து, புத்தரின் பிறப்பிடம் முதலான தலங்களைக் கண்டு செல்வது வழக்கம். ஏழாவது நூற்றுண்டுக்கு முன் இந்தியாவுக்கு வந்தவர்கள் தரை வழியாய் வந்துகொண்டிருந்தாலும், அதற்குப் பின் வந்தவர்கள் நீர் வழியாய் வரத் தலைப்பட்டனர். அவர்கள், கான்டன் பட்டினத்திலிருந்து புறப்பட்டுச் சுமத்திராவையடைந்து, அங்கிருந்து நேர் மேற்கே சென்று ஈழத்தீவையடைந்து, அங்கிருந்து மலையாளத்திலுள்ள கொல்லத்துக்குப், வடவிந்தியாவிலுள்ள தம்மலுக்கும் செல்வது வழக்கம். சீனத்திலிருந்து இந்தியாவுக்கு நீர் வழியாக வருவதற்கு மூன்று திங்களாகும்.

சீனவர்த்தகம் தழைக்கத் தழைக்க, கான்டன் பட்டினத்துக்குப் பல நாட்டுக் கலங்கள் வர ஆரம்பித்தன. அதனுல், சீன அரசியலுக்குப் பெருத்த வருவாய் கிடைத்தது. இவ்வருவாயைப் பாதுகாக்கவும், சுங்கம் வாங்கவும், வெளி நாட்டு வர்த்தகரைக் கண்காணிக்கவும், கப்பல் வர்த்தகச் சோதனையாளர் என்ற ஓர் அதிகாரியை அரசாங்கத்தார் நியமித்தனர்.

சீனக்கப்பல்கள் 'சங்க்' எனப்படும். அவை பிற நாட்டுக் கலங்களைக்காட்டிலும் உருவத்தில் பெரியவை. சீனவர்த்தகர், கான்டனிலிருந்தோ, செயிட்டனிலிருந்தோ புறப்படும் போது, அழகிய சித்திர வேலைப்பாடமைந்த சீனக் கோப்பைகளையும்,

விலையுயர்ந்த பட்டாடைகளையும் தம் கலங்களில் ஏற்றிக் கொண்டு, வரும் வழியிலுள்ள சம்பா, சீயம், மலையா, சுமத்திரா, சாவகம் முதலான இடங்களில் சிறப்பாகக் கிடைக்கக்கூடிய ஈயம், செப்பு, ஆமையோடு, பவளம், அகில், கரிக்கோடு, நறுமணங்கமழும் மரப்பிசின்கள் முதலிய பொருள்களையும் ஏற்றிக் கொண்டு, தென்னிந்தியாவிலுள்ள நாகப்பட்டினம், கொல்லம், கோழிக்கோடு, மங்களூர் முதலான துறைமுகங்களைச் சேர்வார்கள். வடகிழக்குப் பருவக்காற்று வீசுங்காலத்தில் சீனர் இந்தியாவுக்குப் போந்து, மழைக்காலத்தைத் தமிழகத் துறைமுகங்களில் கழித்துப் பின் தென்மேற்குப் பருவக்காற்றுடன் தம் கலங்களைச் செலுத்திச் சீனத்தை அடைவர்.

சீனதேயத்துக்கு நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் முக்கியமானவை முத்தும் மிளகுமே. மிளகு ஏற்றுமதியைப்பற்றிச் சொல்லுமிடத்து, "அலெக்சாண்டிரியாத் துறைமுகத்துக்கு ஒரு கப்பல் மிளகு போகுமானால், சீனத்துக்கு அது போல நூறு மிளகுக் கப்பல்கள் சீனத்திலுள்ள செயிட்டன் துறைமுகத்துக்குச் செல்லும்," என்று ஓர் ஆசிரியர் கூறுகிறார். மேற்சொன்ன பொருள்களைத் தவிர, மலையாளத்தின் விரைப்பொருளும், நீலமும், உறையூரில் செய்யப்பட்ட பூந்துகிலும், சோழநாட்டில் சில இடங்களில் செய்யப்பட்ட கண்ணாடிச்சாமான்களும், பாக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. "சோழ நாட்டுத் துறைமுகங்களில் இறக்குமதியாகும் பொருள்கள்மேல் அதிகமான சுங்கம் போடப்படுவதால் பிற நாட்டு வர்த்தகர்கள் அங்கே போவதில்லை," என்று சௌ. சு. குவா கூறுகிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் சோழப் பேரரசு வீழ்ந்து போனதனால், நாடு சீர் கேடுற்ற காலை, பல்வேறு சிற்றரசர்கள் தலைக்குத் தலை அதிகாரம் செய்ய ஆரம்பித்ததனால் விளைந்த கேடாயிருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது.

சோழநாட்டுத் துறைமுகப்பட்டினங்களில் பண்டைக் காலத்தில் தலைசிறந்து விளங்கிய புகார், கடல் வெள்ளங்களால் சிதைக்கப்பட்டுப் புகழ் குன்றி மங்கிக் கிடந்தது. ஆகையால், மார்க்கோ போலோ தம் நூலில் 'பட்டினம்' என்று கூறுமி

டத்தும், இபன்பதூத 'பட்டினம்' என்று சொல்லுமிடத்தும் அவர்கள் புகார் என்ற காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிப்பிடாமல், நாகப்பட்டினத்தையே குறிப்பிடுகின்றனர். நாகப்பட்டினத்தில் சீனர் வதிந்தனர் என்பதற்குப் பதினான்காம் நூற்றாண்டின் இடையில் எழுதப்பட்ட 'தாவோயி சிலியோ' என்ற சீனநூல்,சீனமொழியில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று, நாகப்பட்டினத்துப் புத்தப் பள்ளியில் இருந்ததாகக் கூறலே சான்றாம். அக்கல்வெட்டுக் கீழ் வருமாறு : 'இந்தத் திருப்பணி, ஹீடான் சுவானுடைய மூன்றாவது ஆண்டின் எட்டாவது திங்களில் முடிவு பெற்றது." இன்னும், சீனநாட்டின் நாணயங்களும், சீனப் பீங்கானில் அழகு பெற அமைக்கப்பட்ட படிபங்களும் நாகப்பட்டினத்தில் கண்டெடுக்கப்பட்டிருத்தலும் இதையே வலியுறுத்தும்.

குறிப்புரை

I. கடவுள் வாழ்த்து

1. இச்செய்யுள், இராமலிங்க சுவாமிகள் அருளிய திருவருட்பாவில் முதல் திருமுறையிலுள்ள மகாதேவ மாலையிற் சேர்ந்தது. இராமலிங்க சுவாமிகள் சிதம்பரத்துக்கு வடமேற்கிலுள்ள மருதூரில் 1823-ஆம் ஆண்டில் தோன்றியவர். இப்பாடல் சுவாமிகளது சமரசப்பான்மையையும் பத்தி நெறியையும் உணர்த்தும், இவர் வாக்குப் படிப்போருள்ளத்தைக் கரைக்கும் பத்திச்சுவையும் இனிமையும் மலிந்தது.

சமயம் - மதம். கங்கு - எல்லை. சோடை - சோர்வு. தரு - மரம். தடம் - குளம், செங்குமுதம் - செவ்வாம்பல்.

2. இச்செய்யுள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் முதலாயிரம் என்ற பிரிவுளடங்கியது. இதனை அருளிய குலசேகர ஆழ்வார் திருவஞ்சைக்களத்தில் சேரர் பரம்பரையில் திடவிரதருக்கு மைந்தராய் அவதரித்து, அரசராய் விளங்கியவர். இவர் காலம் 9 ஆம் நூற்றாண்டென்பர். இவர் இராமாவதாரத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர்.

இருள் இரிய - இருள் கெட. நெற்றி - உச்சி. துத்தி - படப்புள்ளி. பணம் - படம். அனந்தன் - ஆதிசேடன். பொன்னி - காவிரியாறு. அணை - மெத்தை. திரைக்கையால் - அலையாகிய கையால் (உருவகம்). வருட - தடவ. பள்ளி கொள்ளும் - நித்திரை செய்யும். கருமணி - கருமாணிக்கம்; மரகதம். கோமளம் - அழகு, பெருமாளுக்கு ஆகுபெயர்.

3. இச்செய்யுள் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகத்தைச் சேர்ந்தது. இவர் சோழ நாட்டில் சீகாழிப் பதியில் சிவபாதவிருதயர் பகவதியார் என்பார்க்குப் புத்திரராய்த் தோன்றியவர். இவருடைய தெய்விக வரலாற்றின் விரிவைப் பெரிய புராணத்தில் காண்க. இவர் காலம் கி. பி. 640 (நரசிம்மவர்மன் காலம்).

தரளம் - முத்து. வலஞ்சுழி வாணன் - திருவலஞ்சுழியில் வாழ்பவன். வாணன் - வாழ்நன்; மரூஉ. இத்தலம் கும்பகோணம் தாலூக்காவிலுள்ளது.

4. இச்செய்யுள், திருநாவுக்கரசர் அருளிய தேவாரத் திருப்பதிகமாகும். சைவசமய குரவருள் ஒருவராகிய இவர், திருமுனைப் பாடி நாட்டில் திருவாமூரில் வேளாண் குலத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் மருணீக்கியார். இவர் சம்பந்தரோடு சமகாலத்தவர்.

சங்கநிதி பதுமநிதி - சங்கம் பதுமம் என்னும் எண்ணையுடைய செல்வங்கள் ; சங்குவடிவாகிய நிதி, பதும (தாமரை) வடிவாகிய நிதி என்பாருமுளர். இந்நிதிகள் குபேரனுக்குரியவை. ஏகாந்தர் - ஒருவனையே சேர்ந்த அடியார். அங்கம் - அவயவம். தொழுநோய் - குட்ட நோய். ஆ - பசு. சடைக்கரந்தார் - சடையில் மறைத்தார்.

5. இது தேசீய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடல்களில் சரஸ்வதி தேவியின் புகழ்ப்பகுதியைச் சேர்ந்தது.

கொள்ளை - மிகுந்த. கவிதை - பாடல். கள்ளம் - வஞ்சகம்.

II. நீதிப்பகுதி

1. அறநெறிச்சாரம்

இதனை இயற்றிய ஆசிரியர் முனைப்பாடியார். இவர் சமண சமயத்தவர்; என்றாலும் இதிலுரைக்கும் நீதிகள் எல்லாச் சமயத்தினரும் மேற்கொள்ளத்தக்கவை.

1. பொறை - பொறுமை. செம்மை - நடுவுநிலைமை. ஒன்று இன்மை - தனக்கென்று ஒரு காரியஞ் செய்யாமை (பிறர்க்கென்றே செய்தல்). திறம்பா - கெடாத.

2. வன்சொல் களை கட்டு - கடுஞ்சொல்லாகிய களையைப் பிடுங்கி. வாய்மை எரு அட்டி - உண்மையாகிய எருவை இட்டு. ஈன்ற - ஈனுவதாகிய. பைங்கூழ் - பயிர். சிறுகாலை - இளம்பருவத்தே.

3. வைகலும் - நாள்தோறும். மெல் என்றல் - மென்மையடைதல். சால - மிகுதியும். கீழ்கட்கு - கீழ்மக்கட்கு.

4 காய்வதன்கண் - வெறுக்கப்படும் பொருள்களிடத்தில். காய்தல் உவத்தல் அகற்றி - வெறுப்பு விருப்பு நீக்கி.

5. அலர்கதிர் - பரந்த கிரணங்களையுடைய. ஞாயிற்றை - சூரியனை. சில கற்றார் - சிறிது படித்தவர்கள். அச்சு ஆணி - தேரின் அச்சில் செருகும் கடையாணி.

2. இனிது நாற்பது

இதனை இயற்றிய ஆசிரியர் பூதஞ்சேந்தனார் என்னும் புலவராவார். இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் நால் நாற்பதில் ஒன்றாகும். இனிய பல பொருள்களை ஒவ்வொரு செய்யுளிலும் கூறும் நாற்பது செய்யுள்களை உடைமையால் இப்பெயர் பெற்றது. இனியது நாற்பது, இனியவை நாற்பது என்றும் பெயர் வழங்கும்.

1. ஏவது - ஏவிய வேலையை (வினையாலணையும் பெயர்; தொகுத்தல்விகாரம்). மாறு - மறுக்காத. நவை-குற்றமான வழி. இளங்கிளை - பிள்ளை. நவை - ஐயந்திரிபு என்னும் குற்றமுமாம். கோள் - கொள்ளுதல். தேரின் - ஆராயுமிடத்து. 'திசைக்கு நட்புக்கோள் இனிது' எனக் கூட்டுக.

2. முன் - முதன்மையாக. மா ராயன் - சிறந்த அரசன். கோல் — செங்கோல் (நல்ல அரசாட்சி), கோடி - வளைந்து.

3. தானம் - ஸ்தானம்; நிலைமை. ஊனம் - குற்றம்.

4. நட்டார் - நட்புச் செய்தோரை. பட்டாங்கு - உண்மை நெறி. முட்டில் - (முட்டு இல்) குறைதல் இல்லாத. தக்க உழி - தகுந்த இடம் (தொகுத்தல விகாரம்).

5. சலவரை - வஞ்சகரை. சாரா - சேராமல். மலர் தலை - பரந்த இடத்தையுடைய. ஞாலத்து - உலகத்தில்.

6. நன்று - நன்மையை. நூல் தேற்றாதார் - நூலைக்கற்றுத் தெளியாதவர். புதைத்தாலும் - விதைத்தாலும். நாறுத - முளையாத.

3. திருக்குறள்

திருக்குறள்: ஆசிரியர் - திருவள்ளுவர். இந்நூல் சங்க மருவிய நூல்களாகிய பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றாகும். இந்நூலில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவும், 133 அதிகாரங்களும், 1330 குறள் வெண்பாக்களும் உள்ளன.

1. மாசு - குற்றம். அனைத்து அறன் - அவ்வளவே அறமாவது; (அதாவது) உண்மையறமாம். ஆகுலநீர - ஆரவாரத்தின் நீர்மையை (தன்மையை) உடையன. பிற - அஃது (உண்மையறம்) ஒழிந்த சொல்லும் வேடமும்.

2. அழுக்காறு - பொறாமை. அவா - (ஐம்புலன்களின் மேற் செல்கின்ற) ஆசை. வெகுளி - சினம். இழுக்கா - (இந்நான்கினை யும் கடிந்து. இயன்றது - இடையறாது நடைபெறுவது.

3. ஒருவனுடைய இல்வாழ்க்கை, (மனைவி மக்கள் முதலிய வர்கள்மேல் செலுத்தத் தகும்) அன்பினையும், (பிறருக்கு உதவும்) அறத்தினையும் உடையதானால், அது உயர்ந்த தன்மையும் சிறந்த பயனுமுடையதாகும்.

4. அறத்து ஆற்றின் - அறத்தின் வழியே. புறத்து ஆற் றின் - அதற்குப் புறம்பாகிய நெறியில்; இல்லை விட்டு வனத்துச் செல்லும் நிலையில். போஒய் - உயிரளபெடை. எவன் - யாது? இல்வாழ்க்கையின் சிறப்பு இதனால் கூறப்பட்டது.

5. இல்லவள் - மனைவி. மாண்பானால் - நற்குண நற்செய் கையளானால். மாணாக்கடை - அச்சிறப்பில்லாதவளாகியவிடத்து.

6. கற்பு நலத்தின் சிறப்பு இதனாற் கூறப்பட்டது. பெருந் தக்க - மேம்பட்டவை. திண்மை - கலங்கா நிலை.

7. மகற்கு - (மகன் + கு) - புதல்வனுக்கு. அவை - கற்றோர் அவை; சபை. இதனால் தந்தை கடன் கூறப்பட்டது.

8. இதனால் புதல்வன் கடன் கூறப்பட்டது. உதவி - கைம் மாறு. என் நோற்றான் - (மகனது அறிவும் ஒழுக்கமுங் கண்டார் இவன் தந்தை இவனைப் பெறுதற்கு) என்ன தவம் செய்தானோ. சொல் - சொல்லை நிகழ்த்துதல்; அதாவது பிறர் அங்ஙனம் சொல்லும்படி ஒழுகுதல். கொல் - அசை.

9. எல்லாம் தமக்குரியர் - (பிறர்க்குப் பயன்படாமையின்) எல்லாப்பொருளையும் தேடித் தமக்கே உரியவாக்கிக்கொள்ளுவர். என்பும் உரியர் பிறர்க்கு - தம்முடைய எலும்பையும் மற்றவர் களுக்கு உரியதாக்குவர்; அதாவது தமது உடம்பையும் பிறர்க் குதவுவர்.

10. அறியார் - அன்பினது தன்மையறியார். சார்பு - துணை. மறம் - தீமை.

11. 'இருந்தோம்பி இல் வாழ்வது' என்பதனை, 'இல் இருந்து ஓம்பி வாழ்வது' என மாற்றுக; மனைவியுடன் வீட்டிலிருந்து பொருள்களைப் போற்றி வாழ்வது என்பது பொருள். விருந்தோம் பல் - விருந்ினரைப் பேணுதல். விருந்து - புதியராய் வந்தவர். வேளாண்மை - உபகாரம்.

12. சாவா மருந்து - சாவை நீக்கும் மருந்து; அமிர்தம். புறத்தது ஆ - வீட்டுக்குப் புறத்தே இருப்ப. வேண்டற்பாற் றன்று - விரும்பத்தக்கதன்று.

13. இதனால் இன்னா கூறுதலின் குற்றம் கூறப்படுகிறது. இனிய - இனிய சொற்கள். உளவாக - உண்டாயிருக்க. காய் கவர்ந்தற்று - காய்களை நுகர்ந்ததனோடு ஒக்கும்.

14 காலத்தினால் - (ஒருவருக்கு இன்றியமையாது வேண்டப் பட்ட) காலத்தில்; வேற்றுமை மயக்கம். மாண - மிக.

15. பயன் தூக்கார் - கைம்மாறு கருதாது. நயன் தூக்கின் - நயத்தை ஆராய்ந்து பார்த்தால்.

16. தக்கார் - நடுவுநிலைமை உடையவர். எச்சம் - அவர்களுக் குப் பின் எஞ்சி நிற்பது. நன்மக்கள் தக்கார்க்கு உண்டா தலும், தகவிலார்க்கு இல்லையாதலும் பெரும்பான்மை. எச்சம் என்பதைப் புகழ் என்று கொள்ளுதலும் உண்டு.

17. சமன் செய்து சீர் தூக்கும் - முதற்கண் சமனாய் நின்று பின்னே தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்கும். கோல் - துலாக்கோல். கோடாமை - சாயாமை.

18. ஆர் இருள் - தங்குதற்கரிய இருள், நரகம்.

19. யா காவார் ஆயினும் - காக்க வேண்டிய பிற எல்லா வற்றையும் காவாராயினும். சோகாப்பர் - தாமே துன்புறுவர். சொல் இழுக்குப்பட்டு - சொற்குற்றப்பட்டு.

III. கதை

1. சிலப்பதிகாரம்

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று போற்றப் பெற்று ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாய் விளங்கும் இது சேர மன்னன் நெடுஞ்சேரலாதன் மைந்தரும், சேரப் பெருமன்னனா கிய செங்குட்டுவன் தம்பியாருமாகிய இளங்கோவடிகள் இயற் றியது. இவரது காலம் கடைச்சங்கத்திறுதியாகிய கி. பி. இரண் டாம் நூற்றாண்டு எனக்கொள்வர். இது, இயலிசை நாடகமாகிய முத்தமிழும் விரவி வருதலின் இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுளாகும்.

கவுந்தி அடிகள் தம்மோடு மதுரை வந்து புறஞ்சேரியில் தங்கிய கோவலனும் கண்ணகியும் இனி இப்புறஞ்சேரியில் இருப்பது தகாது, ஊருக்குள் போதலே நன்று என்று கருதி, ஆங்கு வந்த மாதரி என்னும் ஆய்ச்சியிடம் கண்ணகியை அடைக்கலமாக ஒப்புவித்த செய்தி இக்கதையில் விரித்து உணர்த்தப்படும்.

வண்ணச்சீறடி மண்மகள் அறிந்திலள் - அழகிய சிறிய அடியை முன் மண் மகளும் கண்டறியாள்; அதாவது அகம்விட்டுப் புறப்பட்டறியாள். இவள் கால் கொப்புளங்கொண்டு நிலத்திற் பாவவில்லை என்றுமாம். தன் துயர் காணு - தனது துயரென வேருகத் தனித்துக் காணுத. (கணவனது துயரைத் தன் துயராகவே கருதி என்க.)

முளையிள - இள்முளை என மாற்றுக; இளைய முளை போன்ற. முதக்குறை - சிறிய பருவத்தே பெரிய அறிவினையுடைய. செல் சுடர் - சுருங்கின சுடரையுடைய. மறித்தோள் நவியம் - ஆட்டு மறியையும் கோடரியையுமுடைய தோளிலே; நவியம் மறி எனக் கூட்டுக. மிளை - காவற்காடு. கிடங்கு - அகழி. வளைவிற்பொறி - வளைந்து தானே எய்யும் எந்திரவில். கரு விரல் ஊகம் - கரிய விரலையுடைய குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறி. பரிவுறு வெந்நெயும் - காய்ந்திறைத்தலாற் சேர்ந்தாரை வருத்தும் நெய்யும். பாகடு குழிசியும் - செம்புருக்கும் மிடாவும் (அல்லது) அங்ஙனம் இறைத்தற்குப் பாகு காயும் குழிசிகளுமாம். தொடக்கு- கழுக்கோல் போலக் கழுத்திற்பூட்டி முறுக்கும் சங்கிலியும். (கயிற்றுத் தொடக்கும் ஆகும்.)

கழு - கழுக்கோல். புதை - அம்புக்கட்டு. புழை - (அம்புவைக்கும்) அறைகளும். ஞாயில் - குருவித் தலைகள். நாட்கொடி - நாள் தோறும் வென்று வென்று எடுத்த கொடி. நுடங்கும் - அசையும். கோவலர் மடந்தை - மாதரி (இடைக்குலப் பெண்.)

2. பெரிய புராணம்

ஆசிரியர், சேக்கிழார்; ஊர், தொண்டை நாட்டுக் குன்றத்தூர்; காலம், 12-ஆம் நூற்றுண்டு; ஆதரித்த அரசன் - அநபாய சோழன்.

மலாடர் கோமான் - மலையமான் நாட்டிலுள்ளவர்க்கு மன்னவர் ஒருவர் (மெய்ப்பொருள் நாயனர்), சார்பு ஒன்று இல்லார் - வேருெருபற்றுக்கோடு இல்லாதவராகிய நாயனர், ஏழிசை - குரல்

துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்; ஓடை — நெற்றிப்பட்டம். பரிபவப்பட்டு — அவமானப்பட்டு. சீலம் - பக்தி. அற்றத்தில் - சமயமறிந்து; முத்தநாதன் - முத்தநாதன் என்னும் பகையரசன். படைகரந்த - உடைவாளை உள்ளே மறைத்த, புத்தகம் கவளி - புத்தகப்பை, கறுப்பு - கோபம். தவிசு - ஆசனம். பத்திரம் வாங்கி - (அதனுள் இருந்த) உடைவாளை எடுத்து, அப்பரிசே செய்ய-அவ்வெண்ணப்படியே செய்ய (வாளால் வெட்ட). இறை-நொடிப்பொழுது. நமர்-நம் பெரியவர்; செற்றவர் தம்மை-கோபித்துக்கொள்ள வந்தவர்களை, சொல் திறம்-உண்மை வார்த்தையை; ஆயத்தார் — சுற்றத்தார்; மன்று - கனகசபை; இமையப்பாவை - பார்வதி. கும்பிடும் கொள்கை ஈந்தார் - கும்பிட்டுக் கொண்டிருக்கும்படியான சிறந்த பேற்றைக் கொடுத்தருளினர்.

3. கம்பராமாயணம்

ஆசிரியர்—கம்பர். ஊர் - சோழநாட்டுத் திருவழுந்தூர்: ஆதரித்தவர் - திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல்; காலம், 12-ஆம் நூற்றுண்டு.

1. கணக்கிறந்த - கணக்கைக் கடந்த; அளவற்ற. நாவாய்-படகுகள். வேலை - சமுத்திரம். விற்பிடித்த வேலை - வில்லை ஏந்திய சேனையாகிய சமுத்திரம். கொங்கு - தேன். தண்தார் - குளிர்ச்சி பொருந்திய மாலை. குறி - பெயர்.

2. கல் காணும் - மலையையொத்த. அல் - இருள். மழை காணும் - மேகத்தை ஒத்த. மணி நிறம் - நீல நிறம். நிற்காணும்-உன்னைக் காணும்.

3. தந்தை துணை - தன் தந்தையாகிய தசரதனுக்கு (ஆலோசனைக்குரிய) நண்பன்; சுமந்திரன். சொல் முன்னே - சொல்லைக் கேட்ட அளவிலே. துரிசு - குற்றம். என் முன்னே - என்னைக் குகன் காணு முன்பே.

4. தம்பி - சத்துருக்கன். துன்று - நெருங்கிய. நறுங்குஞ்சி-நறுமணமுள்ள தலை மயிர். துண் என்றான் - திடுக்கிட்டான்.

5. வற்கலையின் உடையானை - மரவுரியாகிய உடையை உடையவனை. மாசு - அழுக்கு. மெய்யானை - உடம்பையுடையவனை. கல் கனியக் கனிகின்ற - கல்லும் குழைந்துருகும்படி உருகுகின்ற. நின்றொழிந்தான் - செயலற்று நின்றுவிட்டான்.

6. நம்பி - ஆடவர்களிற் சிறந்தவனாகிய பரதன். தலைக் கொண்டான் - மேற்கொண்டுள்ளான். திசை நோக்கி - (இராமனும் இலக்குமணனும் போன) திக்கைப் பார்த்து.

7. உண்டு இடுக்கண் ஒன்று - உளதாகிய துன்பம் ஒன்று. உலையாத - கெடாத. குறிப்பு - கருத்து. நெறி காமின்கள் - வழியைப் பாதுகாத்திருங்கள்.

8. வந்து எதிரே தொழுதானை - (நாவாயில்) வந்து நேரே தொழுத குகனை. மலர் இருந்த அந்தணன் - பிரமன். அந்தணனும் தனை வணங்குமவன் - பரதன். 'மலரிருந்த அந்தணனும் தனை வணங்குமவன் வணங்கினான்' என்க. அவன் - அந்தக் குகன். அடி வீழ்ந்தான் - (பரதனது) அடியில் வீழ்ந்தான். தகவு உடையோர் - தகுதியுடையவரது; பெரியோரது. சீர்த்தியான் - மிக்க புகழையுடையவன்; பரதன்.

அடியில் வீழ்ந்து வணங்கிய குகனைப் பரதன் தழுவினான் என்க.

9. தழுவின - தழுவப்பட்ட; தழுவிய. புளினர் - வேடர். எழுவினும் - கணைய மரத்தினும்; தூணினுமாம். முந்தையோர் முறை-முன்னோர்களின் முறைமை; அஃதாவது, மூத்த மகனுக்கே அரசுரிமையை அளிக்கும் முறை.

10. கிராதர் - வேடர். மீட்டும் - மறுபடியும். விம்மினன் - (உடப்பு) பூரித்தான். தீட்ட அரு மேனி மைந்தன் - சித்திரத்தில் எழுதுதற்கும் அரிய அழகு வாய்ந்த உடம்பினையுடைய பரதனது. பொய் இல் உள்ளத்தன்-பொய்யில்லாத மனமுடையவன்; குகன்.

11. தாதை - தந்தை. தரணி - பூமி; கோசலநாடு. நீத்து - விட்டு. சிந்தனை - கவலை. தேக்கி - நிறைத்து. தெரியில் - ஆராய்ந்தால். நின் கேள் ஆவரோ - உனக்கு ஒப்பாவரோ; ஓகாரம் எதிர்மறைப் பொருளது.

12. ஏழை - அறிவில்லாதவனாகிய. எயினனேன் - வேடனாகிய நான்; இரவி - சூரியன். கற்றை - தொகுதி. தவிர்க்கும் ஆறு போல் - மறைக்கும் விதம் போல. ஆறு என்பதில் று, தொக்கது. உரவு - வலிமை.

13. இயைவன - பொருந்துவனவாகிய மொழிகள். பொருவு இல் - ஒப்பற்ற. அனையவற்கு - பரதனுக்கு. அமைவில் - தகுதியாக. அவற்கு - அப்பரதனுக்கு. குணங்கொடு அன்றே - நற்

குணங்கள் காரணமாக அல்லவா? நிமிர்ந்த காதல்-(இராமபிரானிடத்துக் குகனுக்கு) மிக்க அன்பு உண்டாயது.

14. அருள் தரு வாரி - கருணைக் கடல். செவ்வழி - நன்னெறி. நம் முன் - நம் தமையனாகிய இராமன். குகனையும் தன் உடன் பிறந்தோரில் ஒருவனாக இராமன் கொண்டதனால், அவ்வாறே பரதனும் கொண்டு 'நம்முன்' என்றான்.

15. கார் - மேகம். படுத்த - பரப்பிய. வார்சிலை - நீண்டவில். வள்ளல் - வரையாது அருளும் தன்மையுடைய இராமன். பள்ளி படுக்கை. பருவரல் பரவை - துன்பக் கடல். புனலால் - நீரால். மண்ணு நீராட்டும் - கழுவும் (மண்ணுதல் - கழுவுதல்).

16. என் பொருட்டினால் - என் நிமித்தமாக. இயன்றது - நேர்ந்தது. அயின்றனை - புசித்தாய். குயின்று - பதித்து. கொள்வேன் - ஏற்றுக்கொள்வேன்.

17. தூண் தர - தூணை ஒப்ப. நிவந்த - உயர்ந்துள்ள. சூழல் - இடம். நிமிர்ந்த நேயம் - மிகுந்த அன்பு. பொழுது நீத்தது யாண்டு - இராப் பொழுதைக் கழித்தது எங்கே?

18. அல்லை ஆண்டு - இருளை ஒத்து. துஞ்ச - உறங்க. கங்குல் எல்லை - இரவின் முடிவெல்லை. நயனம் இமைப்பிலன் - கண்ணை இமைத்தானில்லை; கண் மூடவில்லை.

19. என்பத்தை - என்று குகன் குறியதை; 'என்பதை' என்பதன் விரிவு. ஒத்த தோற்றத்தேமில்-பிறப்பினால் ஒத்த எங்களில். அவன் - இலக்குமணன். அன்பத்துக்கு-அன்புக்கு; அத்து, சாரியை.

20. அரும்பொடியில் - படுக்க ஒண்ணாத புழுதியில். தெவ் இடைதர - பகைவர் பின்னடையும்படி. கோமான் - கோமானே. செறி - நெருங்கிய. ஏற்றினையாயின் - கரையேற்றினையானால். வெவ்விடர்க் கடல்-வெம்மையாகிய (கொடிய) துன்பக்கடல்.

21. தமரை - தம் இனத்தவரை. வெள்ளிக்குன்று - கைலாய மலை. குனிக்கும் - (முன் வில்லாக) வளைத்த. அம் பொன் குவடு - அழகிய பொன் மலையான மேருமலை. மானம் - விமானம்; முதற் குறை.

22. நங்கையர் நடையின் அன்னம் நாணுறு செலவின் நாவாய் - பெண்களின் நடை போன்ற நடையினையுடைய அன்னங்கள்

வெட்கப்படும்படியான செலவையுடைய படகுகள். அமைதி - தன்மை. அமரர் வையம் - தேவருலகம். இங்கொடு அங்கு - இவ்வுலகினின்று அவ்வுலகுக்கும் அவ்வுலகினின்று இவ்வுலகுக்கும்.

23. வரம்பு இல் - அளவற்ற. சிந்தனை யாவது - கருத்து என்ன? சிருங்கிபேரியர் கோன் - சிருங்கிபேரமென்னும் ஊரிலுள்ளார்க்குத் தலைவனாகிய குகன். சுந்தரம் - அழகிய. வரி - கட்டமைந்த. எந்தையே - என் தந்தை போன்றவனே.

24. குரிசில் - பரதன். குரகதம் - குதிரை. தேர்வலானும் - தேரைச் செலுத்த வல்ல சுமந்திரனும். வரிசையின் வழாமை நோக்கி - (இடங்களில்) ஏற்றவேண்டிய முறை தவறாமல் பார்த்து. மரபுளி - மரபினால். கரி - யானை. பரி - குதிரை. கணக்கறு கரை இல் வேலை - கணக்கற்ற கரை இல்லாத (சேனைக் கடலானது). எரிமணி - விளங்குகின்ற இரத்தினங்களை, திரையின் வீசும் - அலைகளால் வீசுகின்ற.

4. தேம்பாவணி

இதனை இயற்றிய ஆசிரியர், பெஸ்கி (Constantius Beschi) என்னும் வீரமாமுனிவர். இவர் ஐரோப்பியர். வட இத்தாலி தேசத்தில் வெனிஸ் நகருக்கு மேற்கேயுள்ள காஸ்டிகிலியோன் (Castiglione) என்னுமூரில் கி. பி. 1680-ஆம் ஆண்டில் பிறந்தவர். 1706-ஆம் ஆண்டில் இந்தியாவிற்குக் கிறிஸ்தவமத போதகராய் வந்தவர். தமிழ் நாட்டில் மதுரை முதலிய நகரங்களில் தங்கித் தமிழ்ப் புலவர்களையடுத்துத் தமிழ் மொழியைக் கற்றுச் சிறந்த புலவராய்த் திகழ்ந்தார். தமிழ் மொழியில் அகராதி, சில இலக்கணங்கள், பிரபந்தங்கள், வசன நூல்கள் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். கீழ்வரும் பாடல்கள், தேம்பாவணி முதற்காண்டம் 10-வது மகவருள் படலத்தைச் சேர்ந்தவை. இப்பகுதியில் ஏசுநாதர் அவதாரம் கூறப்பட்டுள்ளது. தேம்பாவணி காவியச் சுவைகள் மலிந்து கற்போர் உள்ளங்களிக்கும் இனிமை வாய்ந்தது.

1. இலையை மூன்றினும்-பிள்ளையைப் பெறுமுன்னும் பெறும்போதும் பெற்றபின்னும் (முக்காலத்தும்). இழிவில்கன்னி - அழியாதகன்னி. இத்தன்மை பிறபெண்டிர்க்கு அருமையாகலின் 'உலகமூன்றினும் உவமை நீக்கிய' என்றார். அலகு இல்-அளவில்லாத. மூன்றனுள்-கர்த்தாவாகிய மூன்றுட்களில்; அவர்கள் பிதா, மகன், பரிசுத்த ஆவி (The Holy Ghost) எனப்படுவர்.

2. வைகல்-நாள் (தேதி). ஐ+ஐந்து-இருபத்தைந்து. ஆதி நாள் - ஞாயிற்றுக்கிழமை. ஆதிநாதன் - இயேசுவை. நல்கினள்-பெற்றாள்.

3. சொக்கு - அழகு; வடிவு. அளா (அளாவு) உரு - கலந்த உருவம் (விகாரம்). மிக்கயேல் ஒடு காபிரியேல் - தேவ தூதர்கள்.

4. பொதிர்...மணம்போல் - தான் குறைபடாமல் பூ முகை வாசனை விட்டதுபோல. மகவு-பிள்ளை (உரிச்சொல்). ஈன்றனள்-(கன்னியழியாமல்) பெற்றனள். சேயோடு-குமரன் கண்களோடு; கண்கள் கலந்தகால்-தன் கண்கள் கலந்து பார்த்த போது. வெஞ்சுடர்காண் - சூரியனைக்கண்ட. முழு இந்து எனு - பூரணசந்திரன் போல; இன்பமுகத்தோடு விளங்கினான் என்க.

5. காந்தள் - கார்த்திகைப்பூ; செங்காந்தள். ஏந்த-ஏந்திய; உயர்ந்த. நீவி-தடவி. ஆய்ந்தநூல்கடந்த ஆர் உணர்வு-ஆராய்ந்தடைந்த கல்விகளைக் கடந்த ஞானம். கடந்த+ஆர் - உணர்வு கடந்தார்; உணர்வு - தொகுத்தல்.

6. தெருள் - தெளிவு. திரை - கடல் (ஆகுபெயர்). உண்டி-ஊண்களை. பொழிந்தனன் - தருகின்ற நாதன். மருள் சுரந்த வடுக்கெட - மயக்கத்தால் வந்த பாவங்களை நீக்குதற்கு. அருள் சுரந்த அமுது-அன்பு நிறைந்த பால். தாய் தர நுங்கினான்-தாய் கொடுக்க உண்டான்.

7. இந்துநேர் - பிறையைஒத்த. மீன்கண்-விண்மீன் போன்ற கண். இண்டை நேர்முகம் - தாமரை மலரை ஒத்த முகம். நீர்மையால் - தன்மையால். கந்தம் நேர் நளிர் தாது நேர் உடல் - வாசனை பொருந்திய குளிர்ந்த மகரந்தத்தையுடைய (மலரை) ஒத்த உடம்பு. நாதன் - தேவகுமாரன். கன்னி - கன்னித்தாயின். அம்புயச் சந்த நேரிய கையால் - சிறந்த கைத்தாமரையின்மேல். தாம நேரிய முத்து என - ஒளி விட்ட முத்தின் சாயலாக. சூசை தேர நோக்கினன் என்க. சிந்து - இன்பக்கடல். மூழ்கு - மூழ்கி. தேற - உண்மை தெளிய. தாமரை, முத்துப் பிறக்கும் இடங்களில் ஒன்று.)

8. நோக்கில் தீட்டலும் - கண்ணில் ஒற்றி. நீர் - கண்ணீர். காண்மலர் - புதிய மலர் போன்ற. கழல் - திருவடி (ஆகுபெயர்). சென்னி - சிரசு. சித்தம் முற்றலும் - மனம் ஓங்கி.

9. அரும்பும் தென்காலே - வீசுகின்ற தென்றல் காற்றே; அரும்புதி - வீசு. துளித்த - துளியாய். நானத்தேன் - வாசனைத் தேன். அரும்பு - வீசு. விளித்த - அழைத்த. நாகு மாங்குயில் காள் - இளங்குயில்காள் (நாகு இளமைப்பெயர்). தேன் பாவை - தேன் போன்ற இசைப் பாட்டை. நான் கனிய - நான் களிகூர. அன்பு துயிலா - அன்பு குறையாமல்.

10. கண்படட்டு - கண் மூடி. கருணாகரன் - கிருபைக்கு இடமானவன். உளையும் - வருந்தும். பொருவா - பிற நிகராத. மண்பட்டு - பூவுலகத்தைச் சூழ்ந்து. மருள் - மயங்குகின்ற. எண்பட்டு - எண்ண முடியாது மேம்பட்டு.

11. ஆழ்ந்தன்று ஆழ்ந்தான் - அமிழ்ந்தி முழுகினான். இறையோன் - கர்த்தர். குன்றாத் தயைக் கடல் - குறையாத கிருபா சாகரம். சிறிது ஓர்கால் - சிறிது நேரம்.

12. துறந்தாய் - அகற்றினாய். துகள் பூட்டிய - (நாங்கள் செய்த) பாவமானது அடைத்த. வீட்டு உயர் வாயில் - மோட்ச வாயிலை. திறன் செய்து - வல்லமையும் தயையுங் கொண்டு: 'இவற்றை யாவரும் அறிய இரங்கிச்செய்யாயோ?' என்க.

13. துஞ்சும் தன்மைத்து - தூங்கின தன்மையைக் காட்டி. விஞ்சும் தன்மைத்து வளன் ஓங்க-மிகவும் (சூசை) மனத்திலோங்க, விழிவிழித்தான் - தன் திருவிழியை விழித்தான். ஒருவன் சிறுமையைக்கொண்ட தன்மைக்கு உதவியைச் செய்யும் கர்த்தா, இங்கே பிறந்தமைந்த செயதியை உலகத்தார்க்கு உணர்த்த அஞ்சி எதிரே வணங்கி நின்றவராகிய வானவர்க்கு வாக்கினால் உரையாமல் அதனை உணர்த்த மனத்துள் நின்று ஏவினான் என்பது பின்னிரண்டடியின் பொருள்.

6. விசுவநாதம் [நாடகம்]

ஆசிரியர்—C. S. முத்துச்சாமி ஐயர். இவர் தஞ்சைக் கலியாண சுந்தரம் உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராய் வேலை செய்தவர்.

இந்நாடகத்தில் கதாநாயகன் விசுவநாதன். விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயரின் கீழ்ச் சேனை வீரனாயிருந்து புகழ் பெற்று, மதுரைப் பாண்டியர் ஆட்சி முடிவுற்றதும் மதுரை மக்களின் வேண்டுகோட்படி கி. பி. 1559—1563 வரை மதிமந்திரியாரான அரியநாதர் துணைக்கொண்டு மதுரை மன்னனாய் ஆட்சி புரிந்து வந்தவன்.

துன்னலர் - பகைவர். புனல் - நீர். சிவிகை - பல்லக்கு. தராபதி - அரசன். விரசுவார் - கூட்டுவார். கந்தடுகளிறு - கட்டுத் தறியைச் சிதைக்கும் யானை.

IV. சிற்றிலக்கியம்

திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

1. கத்தும் தரங்கம்-ஒலிக்கும் கடல். சூல் -கருப்பம். வாலுகம்-மணல் மேடு. கான்ற-ஈன்ற. மணி-முத்து. தத்தும் - மதம்பெருகும். கரடம்-கன்னம். மருப்பு-கொம்பு. சாலி-நெற்பயிர். தரம் - தகுதியான விலை. அலைவாய்-திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)

திருவரங்கக் கலம்பகம்

2. உருமாறி-உருவம் மாறி மாறி. ஊசல் ஆடுவது-ஊஞ்சல் ஆடுவது போல அலைவதனை. கரு மாயத்து என் நெஞ்சை - மிக்க வஞ்சனையையுடைய எனது மனத்தை. பலகை-ஊஞ்சற்பலகை.

திருவேங்கட சதகம்

3. அகாரியம்-காரியமல்லாதது. காலம்-தம் அரசர்க்காகும் காலம். இகல்-பகைவர்கள்; ஆகுபெயர். தளம் கர்த்தன்-சேனாதிபதி வாசகதாட்டி - மிடுக்குடைய வசன நடை. ராயசன்-எழுத்தாளன். (Writer) கருணீகன்-கணக்கன். தானாபதி - பிரதிநிதி. மாரி -(ஆயர்களை வருத்த இந்திரன் பெய்வித்த) கல் மழை. அலர் மேலு மங்கை-இலக்குமி.

மீனாக்ஷியம்மை குறம்

4. புல்வாயின் பார்வை-மானாகிய பார்வை மிருகம்; விலங்குகளைப் பிடித்தற்குக் குறவர்களால் உயிரோடு வளர்த்துப் பழக்கப்படும் மிருகம். உணக்கும்-காயும். கல் விடர்-மலைக்குகை. கடமான்-யானை. குறிச்சி-குறிஞ்சி நில ஊர். இறப்பு-வீட்டுத்தாழ்வாரத்திலுள்ள ஓர் உறுப்பு.

ஏரெழுபது

இதனை இயற்றியவர் கம்பர். இவர் சோழ நாட்டில் திருவழுந்தூரில தோன்றியவர். இவரது காலம் 12-ஆம் நூற்றாண்டு. இவர் கவிச்சக்கரவர்த்தியாராவர்.

1. எழுதுண்ட மறை - எழுதப்பட்ட வேதம்; திருக்குறள். இதிற்குறித்த குறள் :—"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற் றெல்லாம், தொழுதுண்டு பின்செல் பவர்."

2. அலப்படை-கலப்பை. புரவி-குதிரை. மடை-வயல் வாய் மடை. வாளை - ஒரு வகை மீன். பொன்னி - காவிரியாறு.

3. பேர் ஆணி-பெரிய அச்சாணி. பெருக்காளர்-வேளாளர். கார்-மேகம். நுகம்—நுகத்தடி.

4. கலி-வறுமை. பைங்கோல முடி - பசுமையாகிய அழகிய நாற்று முடி. பார் வேந்தர் முடி-அரசர் முடி. பொங்கு ஓதை-மிகு கின்ற ஓசையையுடைய. கடல்தானை-கடல் போலும் சேனை.

5. காராளர்-வேளாளர். சால-நிரம்பிய. பார்-பூமி.

6. தென்னன்-பாண்டியன். பொன்னி நாடன்-சோழன்.

7. கதிர்-நெற்கதிர். எரிகதிர்-சூரியன். குளிர்கதிர்-சந்திரன்.

8. ஏர்வேந்தர்-வேளாளர். தோலார்-தோல்வியடையார்.

V. இயற்கையழகு

1. **பாண்டி நாடு:** நந்து-சங்கு, சினை-குழவி, பந்தர்-பந்தல் (போலி). செம்மல்-சிறப்பு. நகை-ஒளி.

2. **சோநாடு:** அள்ளல்-சேறு; பழனம்-கழனி, அரக்கு ஆம்பல்-செவ்வாம்பல். வெரீஇ-அஞ்சி. பார்ப்பு-குஞ்சு. கவ்வை-ஆரவாரம். நச்சிலைவேல்-நஞ்சு + இலை வேல்.

3. கழைக்கரும்பு-கழையாக வளர்ந்துள்ள கரும்பு; இருபெய ரொட்டுமாம். கா-சோலை. குழைக்கு + அரும்பு = குழைக்கரும்பு. தளிர்க்கின்ற அரும்பு. கருங்குவளை-நீலோற்பலமலர். நெருங்கு வளை-நெருங்குகின்ற சங்குகள். கோடு-குளக்கரை. மடமை அன் னம்-இளமையான அன்னப்பறவைகள். கடல் அன்ன - கடலைப் போன்றன, குளம் என்க. நீர் நாடு-சோழநாடு.

4. தண்டலை-சோலை. எழினி-திரைச்சீலை. விளக்கம் - (பூக்க ளாகிய) தீபங்கள். தேம்பிழி-தேனைப்போன்ற இசையை வெளிப் படுத்துகிற. மகரயாழ்-மகரமீன் வடிவமான யாழ். மாது, ஓ-அசைகள்.

5. திணை மயக்கம்: இரண்டு நிலங்கள் அணுகவிருப்பதால் அந்நிலப் பொருள்கள் ஒன்றோடொன்று கலத்தல். அலைகாகம்—கடற்கரைக் காகம். அரக்கர் கோமான்-அரக்கர் தலைவன்; இராவணன். சிலை-வில். தாசரதி - இராமன். மனை-சீதாபிராட்டி (இடவாகு பெயர்). வங்கம்-கப்பல். மந்தி-குரங்கு. நெய்தலும்-(கடலும்) குறிஞ்சியும் (மலையும்) மயங்கியது. குரங்கும் பலாப்பழமும் மலைக்குரியன. காக்கையும் கப்பலும் கடலுக்குரியவை.

6. மாயோன் - திருமால். கொப்பூழ்......பூவோடு-உந்தியங் கமலத்தோடு. சீர் ஊர் புரையும் - சிறந்த ஊர் (மதுரை) ஒக்கும். அரும்பொகுட்டு அனைய-சிறந்த கொட்டையை ஒத்த. அண்ணல் கோயில் - அரசன் அரண்மனை; தாதின் அனையர் - பூவின் மகரந்தப் பொடிகளை ஒத்தனர்; தண்டமிழ்க்குடிகள் - இனிய தமிழ்க்குடிமக்கள். தாது உண்பறவை அனையர்-அம்மகரந்தங்களை உண்ணும் வண்டுகளை ஒத்தனர். பரிசில் மாக்கள் - பரிசிற்பொருள்களால் வாழும் மக்கள். ஏம இன்துயில்-சரீரத்திற்குப் பாதுகாவலாகிய நித்திரையினின்றும். வாழிய-அசை. வஞ்சி-(சேரனது) கருவூர்நகரம். கோழி-(சோழனது) உறையூர். கோழியின்-கோழிக்குரலால். (நித்திரை) எழாதென்க.

7. மலைவளம்: மந்தி-பெண் குரங்கு. வான் கவிகள் - சிறந்த ஆண் குரங்குகள் (கடுவன்கள்). தே-இனிய, வெடிக்கும்-பரவும். கூனல்-வளைந்த, வேணி-சடை.

VI. தனிப்பாடல்

1. இப்பாட்டு, சத்திமுற்றப் புலவர் பாண்டியனைப்பார்க்கச் சென்றபோது, பாண்டியன் வாசற்புலவர்கள் வழி விடாது மறிக்கப் புலவர் ஊரம்பலத்தில் கிடந்து பாடியது.

குமரி - குமரித்துறை. சத்திமுற்றம் - சோழநாட்டில் உள்ள ஓர் ஊர். நனைசுவர் - மழையால் நனைந்த சுவர். பல்லிப்பாடு - பல்லிச்சகுனம். வழுதி - பாண்டியன். கூடல்-மதுரை. மன்றம் - நாற்புறம் திறந்த அம்பலம். மெய்-உடம்பு. அலகு உதிர்ந்தன்ன பல்லினனாகி - அலகுதிர்ந்தாற்போன்ற பற்பறை கொட்டுபவனாகி. பேழை - பெட்டி. உயிர்க்கும் - மூச்சுவிடுகின்றான். எனும் - என்று சொல்லுங்கள்.

2. நல்குரவு - வறுமை. காளத்தி - காளத்தியென்னும் பிரபு. நின்றை - நின்றையூர். 'நீயெங்கே நானெங்கே' என்றது, அவன் வறுமை நீங்கத் தருவான் என்னும் துணிவு பற்றி.

3. விண் - ஆகாயம். வெற்பு - மலை. பெண்ணை - உமா தேவியை. இடத்தில் - இடப்பாகத்தில். இறைவன் - சிவபெருமான். சடாமகுடம்—சடாமுடி. இது, ஒருவர், 'கங்கை குடத்தில் அடங்கப் பாடுக' என்றபோது பாடியது.

4. வெங்காயம்—ஈருள்ளி; விரும்பத்தகும் உடம்பு. சுக்கானால் - சுக்கெனும் சரக்கானால்; வறண்டால். வெந்தயத்தால் - வெந்தயம் என்னும் சரக்கினால்; வெந்த அயச்செந்தூரமென்னும் மருந்தினால். சீரகம் - சீரகம் என்னும் சரக்கு; சிறந்த இடமாகிய மோக்ஷம். பெருங்காயம் - பெருங்காயம் என்னும் சரக்கு; பெரிய உடம்பு. ஏரகம் - ஏரகம் என்னும் ஊர். செட்டியார் - செட்டி குலத்தார்; முருகர்.

5. வைரவன் வாகனம் - நாய். நான்முகன் வாகனம் - அன்னம்; அதாவது சோறு. நாராயணன் உயர் வாகனம் ஆயிற்று - கருடப்பறவை போலப் பறந்து போயிற்று. மை வாகனன் - ஆட்டு வாகனத்தையுடைய அக்கினி; மை - ஆடு. வயிற்றிற் பற்றுதல் - பசித்தீயுண்டாதல். இது, கட்டுச்சோற்றை நாய் கொண்டு போன போது பாடியது.

6. இது புலவர், இலங்கையரசன் பரராச சேகரியிடம் யானைக் கன்று பெற்று உவந்து பாடியது. களபம்—யானைக்கன்று; கலவைச் சந்தனம். மாதங்கம்—யானை; பொன். வேழம்-யானை; கரும்பு. பகடு—யானை; எருமை. பாணன், யானைக்குரிய பல பெயர்களை மாற்றிச்சொல்லப் பாணி, அதற்கு வேறு பொருள் செய்ததாகப் புலவர் கூறியது நகைச்சுவை பயப்பது.

7. நால் திங்கள் - நான்கு மாதங்கள். மாற்றலரை - பகைவர்களை. பொன்ற - சாக. புறங்கண்ட - புறமுதுகிட்டு ஓடச் செய்த. இது சோழன் ஒளவையாருக்குச், சேலைப்பரிசில் அளித்து அதனைப்பெரிதாக மதித்துப் பார்த்தபோது ஒளவையார் பாடியது.

VII. பல் துறை

2. வீரத்தாய்

மூது இல் - பழமையாகிய மறக்குடி; முதுமையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் ஆதிநீண்டது. மேல்நாள் - முன்னொரில். செரு - போர். இவள் தன் ஐ - இவளுடைய தகப்பன். எறிந்து - வெட்டி. களத்து ஒழிந்தனன் - போர்க்களத்தில் இறந்தான். நெருநல் - நேற்று. கொழுநன் - கணவன். பெருநிரை விலங்கி - மிக்க பசுக்களை மீட்டு. ஆண்டு - அங்கே. பட்டனன் - இறந்தான். செருப்பறை - போர் முரசம். வெளிது - வெள்ளை ஆடை. உடீஇ - உடுத்து. பாறுமயிர்க்குடுமி - விரிந்தமயிரையுடைய குடுமி. நீவி - தடவி விடும் - அனுப்புவாள்; செய்யுமென் முற்று.

3. கையறம்

1. துணைவரோடும் - தம்பிகளோடும். புயங்ககேதனன் - சர்ப்பக் கொடியோனான துரியோதனன். பரிவு - விருப்பம். நேர் - ஒப்பு. செகுக்க வல்லார் - (பகைவரை) அழிக்க வல்லார்.

2. சக்கரம் - சக்கரவியூகம்; சக்கரவியூகமாவது படைகள் ஒருவனை வளைந்துகொள்ளல். தரியலர் - பகைவர். கொன்றைத் தொடையல் - கொன்றை மாலை. கரம் - கை. துணித்த - வெட்டிய. உருத்து - கோபித்து. உக்கரம் - உக்கிரம்; வீரம். துக்கரம் - தெய்வத்தன்மை.

3. பன்னக அரசன் - நாக ராசன். பாவை - நாக கன்னிகை. மதலை - மகனாகிய அரவான். முனையில் தோற்றேன் - களப்பலியாக இழந்தேன்.

4. கதிரவன் - சூரியன். துயில் - தூக்கம். அமர்க்கோலம் - போர்க்கோலம். முருக்கி - பகைவரையழித்து. போதும் - பொழுதும்.

5. தந்திரம் - சேனை. அந்தரம் - வானுலகம். அகலிடம் - அகன்ற பூவுலகம். துறந்த - நீக்கிய. மைந்துடன் - வலிமையுடன். மகன் மகன் - தன் மகனாகிய அர்ச்சுனன் மகன் (பேரன்).

6. செங்கதிர் வாள் - சிவந்த வாள். உடற்றி - செய்து. பொன்னகர் - பொன்மயமான தேவர்கள் நகரம். அமர் ஆண்மை-

போரில் காட்டிய ஆண்மைத் தன்மை. பிதா மகன் - பாட்டன்; இந்திரன். தன் பிதாவை மகனாக உடையவன்.)

7. பொற்பு உற - அழகு பொருந்தும்படி. பொன்னுலகு - சுவர்க்கம். வானிற்கங்கை - ஆகாய கங்கை.

8. வாளியால் - அம்பினால். மா - குதிரை. கால் ஆளாக - பாதசாரியாக. துரந்த - துரத்திய. தனஞ்சயன் - அருச்சுனன்.

4. படிப்பினை

இப்பாடல்கள் 'காந்தி அஞ்சலி' என்ற கவிதைத் தொகுப்பில் உள்ளன. இதன் ஆசிரியர் நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளையவர்கள். உணர்ச்சியூட்டும் எளிய இனிய பாடல்களை இயற்றுவதில் இவர் வல்லவர். இவர் இப்போது சென்னை ஆஸ்தான தமிழ்க் கவிஞராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளார்.